உ
சிவமயம்

சித்தாந்த இரத்தினங்களும் அருள் உபதேசங்களும்

விளக்க ஏடுகள்



வெளியீடு

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் அறக்கட்டளை

நெய்வேலி - 607 801.

2017ம் ஆண்டு 23வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர் குருபூஜையின் போது

(கார்த்திகை - சதயம்)

நெய்வேலி சிவ கண முருகப்பன்

அவர்களின் சைவப் பணிகளைப் பாராட்டி

திருவாவடுதுறை ஆதீனம், 24வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின் திருக்கரங்களால் **"சிவத்தமிழ்ச் சீராளர்"**

என்னும் விருதும் பொற்கிழியும் வழங்கி ஆசிக் கவசம்

அணிவித்து பாராட்டியபோது எடுத்த படம்.

உடன் சிவ கண முருகப்பன் அவர்களின் பெற்றோர்

அருட்பணி அண்ணல், ஜோதிட விபூஷணன்,

Dr. சுப கண்ணப்பச் செட்டியார் & கண்ணாத்தாள் ஆச்சி

காளையார்மங்கலம். ✆ 97102 10070, 82701 88011

உ
சிவமயம்

சித்தாந்த இரத்தினங்களும் அருள் உபதேசங்களும்

விளக்க ஏடுகள்

தொகுப்பாசிரியர்
சித்தாந்த வித்யாநிதி சிவத்தமிழ்ச் சீராளர்
சிவ.கண.முருகப்பன்
✆ 94436 66709

விளக்க ஏடுகள்
சித்தாந்த ரத்தினம்
சிவ.கோநடம்.ஷண்முகம்

வெளியீடு
ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் அறக்கட்டளை
நெய்வேலி - 607 801.

விலை ரூ. 120/-

புத்தகம் வேண்டுவோர் அழைக்க
[illegible]
சென்னை
செல்: 9840819439

உ
சிவமயம்

ஆதீன குருமுதல்வர்

அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாயதேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ

- காஞ்சிப் புராணம்
மாதவச் சிவஞான யோகிகள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து மூன்றாவது குருமூர்த்திகள்

ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்

அவர்கள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து நான்காவது குரு மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின் திருக்கரங்களால்

15-10-2021 விஜயதசமியன்று இந்நூல் வெளியிடப்பட்டது.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021

நாள் : 04.10.2021

அருள் வாழ்த்துரை

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.
– திருமந்திரம்.

நமது திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த, சைவத் திருமுறை மையங்களில் பேராசிரியராகப் பணியாற்றி வரும் சைவத்திரு. சிவ. கண. முருகப்பன் அவர்கள் 'சித்தாந்த ரத்தினங்களும் அருளுபதேசங்களும்' என்னும் பெயரில் நூல் ஒன்று எழுதியுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

36 தத்துவங்கள், மூலகன்மம், அத்துவிதம், சிவபுண்ணியம், திருக்கோயில் உள்ளிட்ட சிறந்த பொருள் விளக்கங்களைத் தன்னகத்தே பெற்று நூல் திகழ்வது பாராட்டுக்குரியது. சித்தாந்தம் பயிலும் மாணவர்கள் மேற்காணும் விடயங்களில் தெளிவுபெற வேண்டியது அவசியம். அம்முறையில் இந்த விளக்கங்கள் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் குருமூர்த்திகளின் அருளுபதேசங்களாகத் திருவருட்பயன், திருமந்திர உபதேசம் ஆகியனவும் சேர்க்கப் பெற்றுள்ளமை சிறப்புக்குரியது. திருமந்திரம், திருவருட்பயன் ஆகிய இரண்டு நூல்களிலுமே பாடல்கள் அளவிற் சுருங்கியும் பொருளாழம் மிகுந்தும் உள்ளன. ஆகையால் இந்நூல்களின் பயிற்சியும் நன்கு பயன்தரும்.

இந்நூலுக்கான விளக்க ஏடுகள் தயாரிப்புப் பணியை சைவத்திரு. கோநடம் சண்முகம் அவர்கள் சிறப்பாகச் செய்துள்ளமை பாராட்டுக்குரியது.

சைவத்திரு. சிவ. கண. முருகப்பன் அவர்களின் சிவநெறிச் சீர்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

பெறுநர் :

சிவத்தமிழ்ச் சீராளர்,
15-10-2021
சிவ. கண. முருகப்பன் அவர்கள்,
நெய்வேலி.

உ
சிவமயம்

பதிப்புரை

நின்று மலர்தூவி இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு என்றும் இன்பமே

சித்தாந்த இரத்தினங்களும் அருள் உபதேசங்களும்

"பொய்விட்டு உடையான் கழல் புகவே" சைவ சித்தாந்தத்தின் முக்கிய சில தலைப்புகளிலும் அருள்தரு சந்தானக் குரவர் உமாபதியார் அருளிய திருவருட்பயன் மற்றும் திருமந்திரமாலையில் உபதேசப் பகுதியும் அடங்கிய சித்தாந்த ரத்தினங்களும் அருள் உபதேசங்களும் என்ற நூலுக்கும்

திருவருளும் குருவருளும்

2020 மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்று மூலம் உலகத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் துன்புற்றுக் கொண்டிருந்த நிலையில் திருவருளாலும், திருவாவடுதுறை ஆதீன 24வது பட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் **குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களது குருவருளாலும், ஏப்ரல் 2020 முதல் இன்று வரை தொடர்ந்து சைவசித்தாந்த தொடர் உரை இணைய தளம் வாயிலாக தொய்வின்றி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குருமகா சந்நிதானம் அவர்களின் உளப்பாங்கு:

இணையதளம் வாயிலாக நடத்திய சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் வகையில் வெளியிடப்பட்ட படங்களுடன் கூடிய விளக்க ஏடுகளின் முதல் பகுதி கடந்த 2021 ஜனவரி 12ம் நாள் குருமுதல்வர் குருபூசை நிகழ்வில் குருமகா சந்நிதானம் அவர்களது உளப்பாங்கின்படி 2000 பிரதிகள் வெளியிடப்பட்டது. தற்போது சித்தாந்த இரத்தினங்களும் அருள் உபதேசங்களும் வெளியிட குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம் கொண்டது நாம் பெற்ற பெரும் பேறு.

சிவனடியார்களின் ஆதரவு:

அருள்நூலும் அனுபவநூலும் எனும் தலைப்பில் வெளியிட்ட புத்தகம் ஒரிரு மாதங்களில் முற்றிலும் வெளிநாடு உள்ளட்ட அடியார்களுக்கு விநியோகிக்கப்பட்டது. நூல் வெளியிட உதவிய ஓசூர் சிவ சம்பத், கள்ளக்குறிச்சி சிவ இரகுராம் மற்றும் சிவ இராமசாமி, நெய்வேலி சிவ. விஜயகுமார், சிவ கன்னிவேல், புதுப்பட்டு சிவ குணா, தேவபாண்டலம் சிவ முருகேசன் ஆகியோரது பணிகள் பாராட்டுக்குரியது.

நெய்வேலி சிவத்திரு கோநடம் ஷண்முகம்:

கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு சித்தாந்த தலைப்புகளில் இணையதளம் வாயிலாக நடத்தப்பட்ட பாடங்களுக்கு பவர்பாய்ண்ட் மூலம் விளக்க ஏடுகள் தயாரித்து, அவற்றை உரை நிகழும் சமயம் இணையதளத்தில் பகிர்ந்தமை, அடியார்கள் சித்தாந்தக் கருத்துக்களை எளிதாக புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்தது என்றால் அது மிகையில்லை. மேலும், அந்த விளக்க ஏடுகளை புத்தக வடிவில் வெளியிடுவதற்கு சிறப்பான பணிகளைச் செய்து தந்த சிவத்திரு கோநடம் ஷண்முகம் ஐயா அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

ஆதீனப் புலவர் சிவத்திரு குஞ்சிதபாதம்:

ஆதீனப் புலவர் ஐயா அவர்கள் இந்நூல் பிழையின்றி வெளியிட அனைத்து உதவிகளையும் நல்கினார்கள். திருவிடைமருதூரில் அமைந்துள்ள நமது ஆதீனப் பள்ளியின் ஆசிரியர் புலவர் சிவத்திரு மகாலிங்கம் ஐயா அவர்களும் இந்நூல் சிறப்பாக வெளிவர உதவினார்கள். மேலும் சிவகாசி CeeBeenson அச்சகத்தின் அதிபர் சிவத்திரு வேம்பார் அவர்கள் அற்புதமான முறையில் புதுப் பொலிவுடன் இந்நூல் வெளிவர உதவினார்கள்.

சந்நிதானங்களின் ஆசியுரை:

எல்லாவற்றுக்கும் மேலாக பிரதி வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறும் இணையவழி தொடர் உரை நிகழ்வில் நமது திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம், உள்ளிட்ட சைவத்

திருமடங்களின் ஆதீனகர்த்தர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள சைவச் சான்றோர் பெருமக்களின் ஆசியுரையும் வாழ்த்துரையும், ஓதுவா மூர்த்திகள், சிறந்த அடியார் பெருமக்கள், மலேசியாவிலிருந்து தொடர்ந்து திருமுறை விண்ணப்பம் செய்து சிறப்பித்த அடியேனது புதல்வி சிவத்திருமதி அலமேலு முத்தையா அவர்களுக்கும், தற்போது இணைய தளத்தை இயக்கிவரும் எனது துணைவியார் சிவத்திருமதி திலகவதி முருகப்பன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களை உரித்தாக்குகிறேன்.

தொகுப்பாசிரியரின் விண்ணப்பம்:

திருவருளாலும் குருவருளாலும் விளக்க ஏடுகள் நூல் பதிப்பாக வெளிவரும் இத்தருணத்தில் குருமகா சந்நிதானங்களின் திருவடிகளை போற்றியும் பணிந்தும் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து இணையத்தில் கலந்துகொண்டு சைவசித்தாந்த தொடர் உரைகள் சிறப்பாக நடைபெற ஊக்கமளித்துவரும் அனைத்து அடியார் பெருமக்களின் திருவடிகளை பணிந்து நிறைகளை ஏற்றும் குறைகளை பொறுத்தும் நூலினை பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென்றருளாலே யுணர்ந்தறிந்தார்

அடியேன்
சிவ கண முருகப்பன்
94436 66709

15-10-2021,
நெய்வேலி.

சித்தாந்த இரத்தினங்கள்

முப்பத்தாறு தத்துவங்கள்

தத்துவம்:

தத் - உள்ளது. தவம் - தன்மை = உள்ளதாம் தன்மை.

தத்துவ விளக்கம்:

'இல்லது தோன்றாது' 'உள்ளதே சிறக்கும்'

காரண காரியம்:

காரணம்	தற்போதைய நிலைக்கு முந்திய நிலை	சூக்கும பஞ்ச பூதங்கள்
காரியம்	தற்போதைய பயன்பாட்டு நிலை	தனு, கரணம், புவனம், போகம்.
மூலகாரணம்	இதற்கு முந்திய நிலையில்லாத நிலை	மாயை

உதாரணம்: மண் - காரணம்
செங்கல் - காரியம்
மாயை - மூலகாரணம்

தனு (உடல்):

உள்கருவி புறக்கருவி இரண்டும் இல்லா உடலை ஏற்றுக்கொள்ள மாட்டோம்

கரணம்:



அந்தக்கரணங்கள் மற்றும் புறக் கரணங்களுடன் கூடிய உடலை ஏற்றுக்கொள்வோம்.

புவனம்:



உயிர்கள் இருக்க இடம் கொடுத்தல். (224 புவனங்கள்)

போகம்:

உயிர்போகம்

சடபோகம்



தனு
கரணம்



புவனம்
போகம்

இவற்றில் ஒன்றைக்கூட நாம் இழக்க முடியாது.
ஆகவே இறைவன் இவை நான்கையும் மாயையில் இருந்து நமக்கு படைத்து அருளியுள்ளான்

36 தத்துவங்கள்

பதி	பசு	பாசம்
பேரறிவு	சிற்றறிவு	சடம்

மூன்று பொருளுக்கும் இரண்டு நிலைகள் உண்டு. அவை,
சொரூப நிலை (அ) உண்மை நிலை (அ) சிறப்பு நிலை.
தடத்த நிலை அல்லது பொது நிலை

பரம்பொருள்:

நிலை சொரூப நிலை (அ) உண்மைநிலை (அ) சிறப்பு நிலை	எண்ணுதற்கு எட்டாத நிலை இன்னதன்மையென்று அறியவொண்ணா நிலை உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
அநாதி சிவம்	ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி
முத்தி	பரமுத்தி
அடி	சிவனடி
உலகம்	பரலோகம் சிவலோகம்

உயிர்களின் நிலைகருதி பரம்பொருள் தன் எண்குணத்திலிருந்து பேரருள் உடமை மூலம் கருணை கொண்டு ஒரு ஆற்றலை வெளிப்படுத்துகிறான். அதுவே ஆதிசக்தி. (ஆதி என்பது தோற்றமும் முடிவும் உடையது.)

1. தன்வயம் உடைமை 2. தூய உடம்பு உடைமை 3. முடிவில்லா ஆற்றல் உடைமை 4. இயல்பாகவே பாசமின்மை	சத்து
5. இயற்கை உணர்வுடைமை 6. முற்றுணர்வு உடைமை 7. பேரருள் உடைமை	சித்து
8. வரம்பில்லா இன்பம் உடைமை	ஆனந்தம்

சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம்

பரம்பொருள்

ஆதிசிவம்

நிலை தடத்த நிலை (அ) பொதுநிலை	எண்ணுதற்கு எட்டும் நிலை இன்னதன்மையென்று அறியக்கூடிய நிலை நிலவுலாகிய நீர்மலி வேணியன்
ஆதி சிவம்	தோற்றமும் முடிவும் உடையது ஆதிபராசக்தி, ஆதிசக்தி, அகிலாண்டேஸ்வரி
முத்தி	பதமுத்தி
அடி	திருவடி
உலகம்	சுத்தமாயா புவனம், அசுத்தமாயா புவனம், பிரக்ருதிமாயா புவனம்

ஆதிசிவம் (அ) ஆதிசக்தி (சக்தி-1)
(சைவசித்தாந்த அடிப்படையில் சுத்தசிவம்)



மாயை	தலைவர்	வாழும் உயிர்கள்
மூல மாயை	-----	-----
சுத்த மாயை	சுத்த சிவம்	விஞ்ஞானகலர் ஆன்மாக்கள்
அசுத்த மாயை	அனந்தேஸ்வரர்	பிரளாயகலர் ஆன்மாக்கள்
பிரக்ருதி மாயை	ஸ்ரீகண்டருத்திரர்	சகலர்

அனந்தேஸ்வரர்	அட்ட வித்யேஸ்வரர்களின் தலைவர்
ஸ்ரீகண்டருத்திரர்	118 உருத்திரர்களின் தலைவர். கயிலாயபதி
விஞ்ஞானகலர்	ஒரு மலத்தார். ஆணவ வாசனை மட்டும் உடையவர்
பிரளாயகலர்	இருமலத்தார். ஆணவமும் கன்மமும் மட்டும் உடையவர்கள். பிரளயம் வரை இருப்பர். பின்னர் இறையிடம் கலப்பர்.
சகலர்	மும்மலத்தார். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றும் உடையவர். பூமியில் வாழும் உயிர்கள்

தத்துவங்கள்-36



சிவ தத்துவம்-5:



ஒரு பொருளும் இன்னொரு பொருளும் மோதும்போது ஒலி ஒளி (Sound and Light) ஏற்படும். இது விஞ்ஞானம்.

இங்கே ஆதிசக்தியும் மாயையும் மோதும் போது ஒலி ஒளி ஏற்படுகிறது. இதை சைவ சித்தாந்தத்தில் நாதம் விந்து எனப்படும். (உ-ம்) இடி - மின்னல்.

	நாதம் (36)	விந்து (35)	
விஞ்ஞான அடிப்படையில்	ஒலி	ஒளி	அருவநிலை
கோயில் அடிப்படையில்	பிள்ளையார்	முருகன்	
சிவசக்தி அடிப்படையில்	சிவம்	சக்தி	
நவசக்தி அடிப்படையில்	ஞான சக்தி (2)	கிரியா சக்தி (3)	

சிவசக்தி கூடல்		
சிவம் (ஞான சக்தி-50%)	சக்தி (கிரியா சக்தி-50%)	அருவுருவ நிலை
சதாக்கியம் (34) ⬇ இச்சா சக்தி (4) அருள்சக்தி (5) (அருளாற்றல்)		

இறை இலக்கணம்: ஞான சக்தி - கிரியா சக்தி - இச்சா சக்தி.

கோயில்

சிவசக்தி கூடல்			
சிவம் (ஞான சக்தி)	<	சக்தி (கிரியா சக்தி)	உருவ நிலை மகேஸ்வர மூர்த்தங்கள் (25)
கிரியை கூடுதலாகவும் ஞானம் குறைவாகவும்			
ஈசுவரம் (33)		மறைப்பு சக்தி (6) (மறைப்பாற்றல்)	

---

25 மகேஸ்வர வடிவங்கள்

1. இலிங்கோற்பவர்
2. சுகாசனர்
3. கல்யாண சுந்தரர்
4. அர்த்த நாரீஸ்வரர்
5. சோமாஸ்கந்தர்
6. சக்ரவாதர்
7. திரிமூர்த்தி
8. அரி அர்த்தர்
9. தட்சிணாமூர்த்தி
10. பிச்சாடனர்
11. கங்காளர்
12. கால சம்காரமூர்த்தி
13. காம சம்காரமூர்த்தி
14. சலந்தர சம்காரமூர்த்தி
15. திரிபுர சம்காரமூர்த்தி
16. சரபமூர்த்தி
17. நீலகண்டர்
18. திரிபாதமூர்த்தி
19. ஏகபாதமூர்த்தி
20. பயிரவர்
21. இடபாரூடர்
22. சந்திரசேகரர்
23. நடராசர்
24. கங்காதரர்
25. கமுகா அனுகரமூர்த்தி

சிவசக்தி கூடல்		
சிவம் (ஞான சக்தி)	>	சக்தி (கிரியா சக்தி)
கிரியை குறைவாகவும் ஞானம் கூடுதலாகவும்		
சுத்த வித்தை (32)		
படைத்தல் (படைக்கும் சக்தி-7)	காத்தல் (காக்கும் சக்தி-8)	ஒடுக்குதல் (ஒடுக்கும் சக்தி-9)

படைத்தல்	உயிர்களுக்கு அறிவு விளக்கம் பெறும் பொருட்டு தனு, கரண, புவன போகங்களைப் படைத்தல்.
காத்தல்	படைத்தவைகளை ஒரு கால எல்லை வரை காத்தல்
ஒடுக்குதல்	படைத்தவைகளை ஒரு கால எல்லையில் ஒடுக்குதல்

நவ சக்தி:

1. ஆதி சக்தி
2. ஞான சக்தி
3. கிரியா சக்தி
4. இச்சா சக்தி
5. அருள் சக்தி
6. மறைக்கும் சக்தி
7. படைக்கும் சக்தி
8. காக்கும் சக்தி
9. ஒடுக்கும் சக்தி

அசுத்தமாயை (பிரளயாகலர்):

- அசுத்தமாயை என்பது அசுத்தமாயா புவனம்.
- அருளாற்றல் சற்றுக் குறைவு. இதன் தெய்வம் அனந்தேஸ்வரர். அட்டவித்யேஸ்வரர்களில் முதன்மையானவர். ஆணவம் நீக்கமுடையவர்.
- இவரின் இருப்பிடம் சுத்தவித்தைக்கும் காலதத்துவத்திற்கும் இடையில் வாசனை மட்டும் உண்டு.
- வித்யா தத்துவம் ஏழும் இத்தத்துவத்தின் கீழே செயல்வடிவம் பெறுகிறது.

வித்யா தத்துவம்-7:

அசுத்த மாயா புவனம்
தலைவர்: ஸ்ரீ அனந்தேஸ்வரர்
அட்ட வித்யேஸ்வரர்களில் முதன்மையானவர்

அட்ட வித்யேஸ்வரர்கள்:

(1) அனந்தர்
(2) சூட்சுமர்
(3) சிவோத்தமர்
(4) ஏகநேத்திரர்
(5) திருமூர்த்தி
(6) சீகண்டர்
(7) சீகண்டி
(8) ஏகருத்திரர்

31. மாயை (காரிய மாயை)	மயக்கத்தில் இருந்தவருக்கு தண்ணீர் தெளித்தவுடன் திடீரென்று உற்சாகம் ஏற்படுவதுபோல். ஆணவத்தின் பிடியில் இருந்து அறிவு செயல்படாமல் அறியாமையில் இருந்த உயிர்க்கு இந்த முதல்உடல் கூடும்பொழுது, உயிர் ஆனந்த மயமாய் நிற்கும். அதனால் ஆனந்தமய கோசம் எனப் பெயர் உண்டாயிற்று. போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே-மாணிக்கவாசகர்
30. காலம்	வினையின் அடிப்படையில் உயிர் இன்ப துன்பம் அனுபவிக்க கால அளவு நிர்ணயம் பெறுகிறது. (கடந்த காலம் - நிகழ்காலம் - எதிர்காலம்). காலத்திற்குத் தலைவனாக எமதர்மன் இருந்தாலும், இறைவன் இதை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.
29. நியதி	அவரவர் அனுபவிக்க வேண்டிய வினையை அவரவர் அனுபவிக்க வேண்டும். இறைவன் இதனையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.
28. கலை	உயிரின் செயலைத் தூண்டுவது.

27. வித்தை	உயிரின் அறிவைத் தூண்டுவது.	
26. அராகம்	உயிரின் இச்சையைத் தூண்டுவது.	
25. புருடன்	காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்தின் கூட்டுத் தத்துவம். இது உள்ளம், பஞ்சகஞ்சுகம் எனப்படும். உயிருக்கு உள்சட்டை போன்றது.	
	உள்ளம்	மனம்
	❖ மனதுக்கு நுணுக்கமானது ❖ அக அந்தக்கரணம் ❖ வித்யா தத்துவத்தில் உள்ளது	❖ புற அந்தக்கரணம் ❖ ஆன்ம தத்துவத்தில் உள்ளது

பிரகிருதிமாயை புவனம்:

ஆன்ம தத்துவங்கள் 24ம் கலை தத்துவத்திலிருந்து செயல்வடிவம் பெறுகிறது.

28. கலை

24. சித்தம்	மூலப்பிரக்ருதி. குண தத்துவம். மனம் பற்றியதை, நிச்சயித்து நினைவில் கொண்டு சிந்திப்பதற்கு உதவுகிறது. (மனம் புத்தி அகங்காரம் ஆகிய மூன்றுக்கும் தலைமையாக செயல்படும்)
23. புத்தி	மனம் பற்றியதை இதுவா அதுவா என நிச்சயிக்கும்
22. அகங்காரம் (தன் முனைப்பு)	மனம் பற்றியதை செயல்படுத்தும்.

அகங்காரம் மூன்று குண வயப்பட்டு மூன்று வகையால் தொழிற்படுகிறது.

	தைசத அகங்காரம்	வைகரி அகங்காரம்	பூதாதி அகங்காரம்
	சாத்துவீக குணம்	இராட்சச குணம்	தாமச குணம்
உதாரணம்	தென்றல்	சூறாவளி	வீசாமல் இருப்பது

தைசத அகங்காரம் (சாத்துவீக குணம்)	21. மனம்	விரும்பிய பொருளைப் பற்றும்.

அந்தக்கரணங்கள் 4: (1) மனம் (2) புத்தி (3) அகங்காரம் (4) சித்தம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்
- சேக்கிழார்

வைகரி அகங்காரம்
(இராட்சச குணம்)

கன்மேந்திரியம் (5)
பாவபுண்ணியங்களை (கன்மம்) அனுபவிக்கும் கருவிகள்

20. கால்	வாயு தத்துவத்தை இடமாகக் கொண்டு நடத்தலைச் செய்ய உதவுகிறது
19. கை	நீ தத்துவத்தை இடமாகக் கொண்டு கொள்வதையும் கொடுத்தலையும் செய்ய உதவுகிறது
18. வாய்	வான் தத்துவத்தை இடமாகக் கொண்டு பேசுவதற்கு உதவுகிறது
17.எருவாய்	நீர் தத்துவத்தை இடமாகக் கொண்டு மலம், நீர் முதலியவற்றை வெளியேற்ற உதவுகிறது
16.கருவாய்	மண் தத்துவத்தை இடமாகக் கொண்டு சுக்கில சுரோணிதங்களை வெளிப்படுத்த உதவுகிறது

தைசத அகங்காரம்
(சாத்துவிக குணம்)

ஞானேந்திரியம் (5)
ஐம்பொறிகள்

15. மெய்	காற்றை இடமாய் கொண்டு தோல் தொடு உணர்வை (ஸ்பரிசத்தை) அறிய உதவுகிறது
14. வாய்	நீரை இடமாகக் கொண்டு சுவையை அறிய உதவுகிறது
13. கண்	தீயை இடமாகக் கொண்டு உருவத்தை அறிய உதவுகிறது
12. மூக்கு	மண்ணை இடமாகக் கொண்டு மணத்தை அறிய உதவுகிறது
11. செவி	ஆகாயத்தை இடமாகக் கொண்டு ஒலியை அறிய உதவுகிறது

பூதாதி அகங்காரம்
(தாமச குணம்)

தன்மாத்திரை (5)
(சூக்கும பஞ்ச பூதம்)

10. ஓசை	உயிர்க்கு செய்திகளைக் கேட்டு உணர உதவுகிறது
9. ஊறு	உயிர்க்கு பொருள்களைத் தொட்டுணரும் அறிவைத் தருகிறது.
8. ஒளி	உயிர்க்கு உருவத்தைக் கண்டு சுட்டி அறிய உதவுகிறது
7. சுவை	உயிர்க்கு சுவைக்கும் உணர்வை தருகிறது
6. நாற்றம்	உயிர்க்கு மணக்கும் உணர்வை அறிய உதவுகிறது.

குணம் வெளிப்படாமல் தன் அளவில் நிற்பதால் தன்மாத்திரை எனப்படும். ஆகாயத்திலிருந்து மின்னல் தோன்றுவது போல தன்மாத்திரையில் இருந்து பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன.

பூ - இருத்தல்; த - விகுதி
உள்ளதே தோன்றும் என்ற பொருளுடையது

பூதாதி அகங்காரம்
(தாமச குணம்)

பஞ்ச பூதங்கள் (5)
தன்மாத்திரையில் இருந்து பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன.

5.ஆகாயம் (வான்)	ஒன்றோடொன்று மோதாமல் இருக்க ஒவ்வொரு பொருளுக்கும் இடைவெளி
4.வாயு (காற்று)	உலக இயக்கம் - வன்மையும் மென்மையும் உடைய பொருளை குவிக்க பயன்படுகிறது உயிருக்கு - உடலில் உள்ள பிராணன் உதானன் அபானன் முதலிய தச வாயுக்களாக உதவுகிறது.
3.தேயு (தீ)	சுட்டடைத் தருகிறது - மென்மையாக உள்ள மண்ணை வன்மையாக்கப் பயன்படுகிறது. (உ-ம்) செங்கல் செய்தல் – பானை செய்தல் உயிருக்கு - உடலில் வெப்பமாக செயல்படுகிறது.
2. அப்பு (நீர்)	கடின மண்ணை மென்மையாக்குகிறது. அதன் மூலம் மண் பலவற்றுக்கு உதவும். உயிர்க்கு - சிறுநீர் குருதி வியர்வை சளி கோழை சுக்கிலம் சுரோணிதமாக உதவும்
1. பிருத்வி (மண்)	சடப்பொருளைத் தாங்குகிறது உயிர்க்கு – எலும்பு தசை மயிர் தோல் நரம்பாக உதவும்.

இவ்வாறாக 36 படிகளைக் கடந்து இறைவன் உயிர்களுக்காக 'நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி' மண் தத்துவத்தில் நமக்காக இறங்கி அருளுகிறான்.

பஞ்ச சரீரம்:

உயிருக்கு ஐந்து சரீரங்கள் சொல்லப்படுகின்றன.
அவை,

காரண சரீரம் - ஆனந்தமய கோசம்
கஞ்சுக சரீரம் - விஞ்ஞானமய கோசம்
குண சரீரம் - மனோமய கோசம்
சூக்கும சரீரம் - பிராணமய கோசம்
தூல சரீரம் - அன்னமய கோசம்



கோசம் என்பதற்கு கவசம், கூடு என்பது பொருளாகும். உயிர்க்குள்ளே கூடே உடம்பாகும். உடம்பை சரீரம் எனவும் கூறுவர்.

பஞ்ச சரீரம்

ஆனந்தமய கோசம் (காரண சரீரம்)	ஆணவத்தின் பிடியில் இருந்து அறிவு செயல்பாடாமல் அறியாமையில் இருந்த உயிர்க்கு இந்த முதல் உடல் கூடும்பொழுது, உயிர் ஆனந்த மயமாய் நிற்கும்.	1
விஞ்ஞானமய கோசம் (கஞ்சுக சரீரம்)	உயிரின் இலக்கணமான அறிவு இச்சை செயல்களை தூண்டுகிறது. (காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்)	6
மனோமய கோசம் (குண சரீரம்)	உயிரின் முக்குணங்களும் வெளிப்படுகிறது. (சித்தம்)	1
பிராணமய கோசம் (பிராண சரீரம்)	பிராண வாயுவின் சம்பந்தம் பெற்று, 8 தத்துவங்களுடன் கூடி நிற்கும். (மனம், புத்தி, அகங்காரம் + சூக்கும பூதம்-5)	8
அன்னமய கோசம் (தூல சரீரம்)	கண்ணுக்குத் தெரிகின்ற பருவுடம்பு. உடம்பு உணவு உட்கொள்வதால் நிலைபெறுகிறது.	15

பிறப்பு - இறப்பு

காரண சரீரம் (ஆனந்தமய கோசம்)	அசுத்த மாயையில் காரியப்பட்ட மாயை	1	இறப்பில் 16 கருவிகள். நுண்ணுடம்பு (சூக்கும சரீரம்)
கஞ்சுக சரீரம் (விஞ்ஞானமய கோசம்)	காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன்	6	
குண சரீரம் (மனோமய கோசம்)	மூலப்பிரகிருதி (அல்லது) சித்தம்	1	
சூக்கும சரீரம் (பிராணமய கோசம்)	மனம், புத்தி, அகங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்	8	
தூல சரீரம் (அன்னமய கோசம்)	ஆகாயம், காற்று, தீ, நீர் நிலம் (5) மெய், வாய், கண், மூக்கு, செவி (5) கை, கால், வாய், எருவாய், கருவாய் (5)	15	பிறப்பில் கூடுதலாக 15 கருவிகள். பருவுடம்பு (தூல சரீரம்)

15 தத்துவங்களுடன் படைக்கப்படும் பருவுடம்பில்தான் ஆண், பெண் வேறுபாடு, தேவர், மக்கள், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்ற ஏழுவகைப் பிறப்பு வேறுபாடுகளும் வெளிப்படுகின்றன.

அத்துவாக்கள் (6)

காரிய மாயை

(இறைவன் உயிரின் பொருட்டு மாயை காரியப்பட்டு செய்கிறான்)

சொல் உலகம்
1. வன்னம் - எழுத்து (51)
2. பதம் - பொருள் (81)
3. மந்திரம் - சொல் (11)

பொருள் உலகம்
4. தத்துவம் (36)
5. கலை (5)
6. புவனம் (224)

இவை ஆறும் அத்துவாக்கள் (படிகள்) எனப்படும்.

முத்திப் பேற்றினை நோக்கி முன்னேறும். உயிர்கள் இவற்றைப் படிப்படியாக விட்டுச்செல்வதே பாச நீக்கமாகும். சொற்கள் சொல்லியவுடன் அழிந்துவிடும். ஆனால் அவற்றின் பொருள் உணர்த்தும் ஆற்றல் நம்மிடம் பதிவை ஏற்படுத்தும். (உ-ம்) தீயினால் சுட்டபுண் - நாவினால் சுட்ட வடு

வன்னம் (எழுத்து வடிவம்) : சி
வா
ய
ந
ம

பதம் (பொருள் வடிவம்) : சிவம்
அருள்
உயிர்
மறைப்பாற்றல்
மலம்

மந்திரம் (சொல் வடிவம்) : சிவாய நம

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே - சுந்தரர் (பண்: புறநீர்மை)

ஓசை : ஒழுங்கு படுத்தப்படாத Sound (Noise)
ஒலி : ஒழுங்குபடுத்தப்பட்ட Sound
சொல் பிரபஞ்சம்: ஒலி அடிப்படையில் விரிவதால் ஒலிப்பிரபஞ்சம் (சத்தப்பிரபஞ்சம்)

வாக்கு

வந்துஅடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும் அடைவு படஒடுங்கி மயில் அண்ட சலம்நேர்
விந்தைதனில் உணர்வாகும் பைசந்தி உயிரில்
சேர்ந்துவரும் அவைமருவும் உருஎவையும் தெரிந்து
முந்திவிடும் செவியில்உறா உள் உணர்வாய் ஓசை
முழங்கிவிடும் மத்திமைதான் வைகரியில் உதானன்
பந்தம்உறும் உயிர் அணைந்து வந்தமொழி செவியின்
பால்அணைய நினைந்தபொருள் பகரும்தானே - சிவப்பிரகாசம் (38)

சூக்குமை வாக்கு:

நாதம்: சுத்த மாயையின் விருத்தி
ஒழுங்குபடுத்தப்பட்ட ஒலி
வடிவம் கிடையாது
நம் உள்ளத்தில் உருப்பெறாமல் எழும் எண்ணம்
அ-உ-ம்

உடலில்: மூலாதாரத்தில் செயல்படும்

பைசந்தி வாக்கு:

விந்து: சொல் வடிவில் நிற்பது
உடலில்: நாபி (உந்தியில் செயல்படும்)
ஓரளவு விளங்குவது (முழுமை இல்லை)
நம் எண்ணத்திற்கு சொற்கள் உண்டு
இருந்தாலும் விளங்காமல் நிற்கும்
ஓம், மயில் முட்டையில் உள்ள 5 நிற நீர்போல

மத்திமை வாக்கு:

சாதாக்கியம்: மொழிகள் தோன்றுகின்றன
* திருவள்ளுவர் – அகர முதல
* மொழி வேறுபாடு உண்டு (தமிழ், ஆங், ஹிந்தி, சமஸ்)
* பொருள் நன்கு விளங்கும்

உடலில்: இதயத்தில் செயல்படும்
அதாவது பொருள் விளங்கியும் வெளியே
சொல்லவும் கேட்கவும் படாமல் குரல்
அடியில் வந்து நிற்கும்

பொருள் பிரபஞ்சம் (உலகம்):

புவனம்: உயிர்கள் தங்கியிருக்கும் இடம் (36 தத்துவங்களில்)

மண் தத்துவம்	-	108
நீர் முதல் பிரக்ருதி மாயா	-	56
வித்யா தத்துவம் 7ல்	-	27
சுத்தவித்தை, ஈசுவரம் சாதாக்கியம்	-	18
நாதம், விந்து	-	15

மேற்கண்ட 224 புவனங்களில் பல அண்டங்கள் உள்ளன. நாம் வாழும் மண் தத்துவத்தில் 1000 அண்டங்கள் உள்ளன. அண்டத்தின் சிறு பகுதி பூமி. பூமிக்கு அருகில் உள்ள நவகோள்களை அடிப்படையாகக் கொண்டே சோதிடம் சொல்லப்படுகிறது. இந்த 224 புவனங்களில் கோடான கோடி கோள்கள் உள்ளன.

தத்துவம்: நாதம் முதல் மண் வரை 36 தத்துவங்கள்

கலை: 36 தத்துவங்களில் தொழில்படும் இறை அருள்சக்தி.
அத்துவாக்களில் உள்ள இந்தக் கலை வேறு.
வித்யாதத்துவத்தில் உள்ள கலை வேறு.

உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப அவற்றை முத்திக்கு இட்டுச் செல்லும் பொருட்டு அருள்சக்தி 5 கலைகளாக நின்று உயிர்க்கு உதவுகிறது.

சாந்தி அதீதக்கலை	-	சிவம் (நாதம்), சக்தி (விந்து) - 2
சாந்திக்கலை	-	சாதாக்கியம் ஈசுவரம், சுத்தவித்தை-3
வித்யா கலை	-	வித்தியா தத்துவம்-7
பிரதிட்டா கலை	-	பிருத்வி (மண்) நீங்கலாக ஆன்மதத்-23
நிவர்த்திக்கலை	-	பிருத்வி தத்துவம் (மண்)-1

அத்துவாக்கள் 6ம் உயிர்க்கு அறிவு விளக்கம் தருவதால் இதற்கு மூலகாரணமாகிய மாயை யை ஒளிப்பொருள் எனப்படுகிறது.

ஆணவம்: இருள் பொருள்

ஆக உயிர்க்கு ஆணவப்பற்று இருக்கும் வரையே மாயா காரியங்கள் பயன்படுகின்றன. எனவே இவற்றை இரவில் ஒளி (அ) இராக்கால விளக்கு என்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

மூலகன்மம்

தடைப் பொருள்கள்:
ஆணவம் கன்மம் மாயை (பாசம்)
ஆணவம்: இயற்கை மலம் (சகச மலம்)
உ-ம்: நெல்லில் உமி போல...
செம்பில் களிம்பு போல...
மாயை-கன்மம்: செயற்கை மலம்.
இறைவன் ஊட்டுவது.
நெல்லில் தவிடு முளை போல.

செயற்கை மலத்தை ஏன் ஊட்டுகிறான்?
நெய்த ஆடையில் கஞ்சி நீங்க உவர்மண், சாணம் ஆகியவற்றை சேர்த்து வெளுக்க மூன்றும் நீங்கும். அது போல் ஆணவம் நீங்குவதற்கு மாயை-கன்மம் ஆகியவற்றை ஊட்டுகிறான்.

செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய் வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்ல வற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று
அருளாலே உணர்ந்து அறிந்தார்

- 12ம் திருமுறை-3640

ஒவ்வொரு பொருளுக்கும் மூன்று நிலைகள் உண்டு.

காரிய நிலை:
தற்போதைய பயன்பாட்டு நிலை

காரண நிலை:
காரிய நிலைக்கு முந்தைய நிலை.

மூலகாரணம்:
இதற்கு மேல் இல்லாத நிலை.

மாயையும் கன்மமும்

காரிய மாயை	காரிய கன்மம்
சுத்தியல்	அடிக்கின்ற செயல்
கலப்பை	உழுகின்ற செயல்
தறி	நெய்கின்ற செயல்
தனு, கரண, புவன, போகம்	பாவம் - புண்ணியம் (இருவினை)

காரண மாயை அல்லது மூல மாயை	காரண கன்மம் அல்லது மூல கன்மம்
அனைத்து காரியப் பொருள்களுக்கும் மூலமாய் இருப்பது மூல மாயை	அனைத்து காரிய செயல்களுக்கும் (வினை) மூலமாய் இருப்பது மூல கன்மம். இது எங்கும் பரவி நிற்கும்.

ஆக,
பொருளில்லாமல் செயலில்லை...
செயலில்லாமல் பொருளில்லை.

மாயை இல்லாமல் கன்மம் இல்லை...
கன்மம் இல்லாமல் மாயை இல்லை.

உ-ம்: உழுதான்: உழுதல் செய்பவனுக்கு உழுதல் தொழில் முதனிலை முன்பே உள்ளது.

ஆக,

பல்வேறுபட்ட இத்தொழில் முதனிலைகளை எல்லாம் தன்னுள் அடக்கிய பொதுவாய் நிற்கும் முடிவான முதனிலை - அதுவே மூலகன்மம்.

மூலகன்மத்தின் இயல்பு

- ❖ மூலகன்மம் தனித்து நில்லாது
- ❖ பற்றுக்கோடாக இருப்பது மாயை
- ❖ மாயை போல் எங்குமாய் நிற்கும் மூலகன்மம்.

ஆக,
மாயை அநாதி. அதனோடு உள்ள மூலகன்மம் அநாதி. ஆணவம், கன்மம், மாயை எனும்போது, இதில் கன்மம் என்பது மூலகன்மம் ஆகும்.

எனவே, மூலகன்மம் இயல்பிலேயே உயிர்க்கு பந்தம் ஆகாது. மாயா காரியம் மூலம் காரியப்படும் போதுதான் பந்தமாகும்.

கன்மம்	மாயை
ஆணவத்தின் வழியாக உயிரைப் பற்றுவதால் இதற்கு அனுபந்தம் என்று பெயர். அனு – வழி	கன்மத்தோடு தொடர்புடையதால் சம்பந்தம் எனப்படும்.

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால், தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே - நமசிவாய பதிகம்

கன்மம்

ஆகாமியம் (ஏறும் வினை)		சஞ்சிதம் (நன்கு கட்டப்பட்டது)		பிராரத்தம் (கட்டப்பட்ட சஞ்சிதம் பயனுக்கு வருதல்)	
விதை போல		மரம் போல		பழம் போல	
நல்வினை	தீவினை	புண்ணியம்	பாவம்	இன்பம்	துன்பம்

பிரகிருதி என்னும் உடலோடு கூடிய ஊழ்

மூலகன்மம்	சூக்கும கன்மம்	அதிசூக்கும கன்மம்



பிராரத்தம் (நேர்படுவது அல்லது வந்து பொருந்துவது)		
ஆதி பௌதிகம்	ஆதி ஆன்மீகம்	ஆதி தெய்வீகம்
இடி, மின்னல், மழை, தீ, சூறாவளி, பூகம்பம்	மனிதன், மிருகம்	பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய் இறைவர் தர வரும்

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே - திருமந்திரம் 2612

விதி, ஊழ், பிராரத்தம்: பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு

முயற்சி:

1. பிராரத்தம்: செயல் வகை. ஒருவனை அவ்வினை நுகர்வுக்காக ஒரு முயற்சியில் செலுத்தும். அப்போது செயல்வகையில் அம்முயற்சி பிராரத்த வினைப்பயனைத் தரும்.

   உ-ம்: வீட்டில் விளையாடும் குழந்தை பந்து வெளியில் விழ எடுக்கும் போது விபத்துக்கு ஆளாவது போல

   இதைத் தவிர்க்க, முதல்வனையே தொழுதிருத்தல். அடியார்களில் ஒருவராக இருத்தல்.

முயற்சி......

2. பிராரத்தம் செயல் முடிய புதிய ஆகாமியம் தொடரும். ஆற்றில் பார்த்த நீர் மறையும். புதிய நீர் வரும். அது போல ஆகாமியம் தோன்றி பிறப்புக்கு ஆளாகும்.

முயற்சி......

உ-ம்: குழந்தையை விபத்துக்கு ஆளாக்கியவர்மேல் சினமும் தீங்கு செய்ய வேண்டும் என்னும் விழைவும்.

உ-ம்: அலுவலகத்தில் மூத்தவரைத் தவிர்த்து இளையவர்க்கு பதவி உயர்வு அளித்தால் அவர் மீது கோபப்படுதல், தீங்கு செய்தல் போன்றவை புதிய ஆகாமியத்தை ஏற்படுத்தும்.

முயற்சி......

3. ஆகாமியம்: கருத்து வகை. யான் செய்தேன். பிறர் செய்தார் எனும் விருப்பு. நல்வினை தீவினைகளில் பிராரத்தம் செயல்படும்போது, ஏற்படும் விருப்பு வெறுப்புகளால் ஏற்படுவது. அனைத்துச் செயல்களையும் சிவன் செயலாகக் கருதினால் புதிய ஆகாமியம் ஏற்படாது.

முன்னே வந்தது வினையா உடலா?

அசுத்த மாயையின் தூல பரிணாமம்

சூக்கும உடம்பு

மனம் புத்தி அகங்காரம்	- 3
தன் மாத்திரை	- 5
புரியட்ட காயம்	- 8

முத்தி வரை நீங்காது எல்லா உயிர்க்கும் ஒரு தன்மை

- உயிருக்கு முதல் நுண் உடல் வினை காரணமாய் அமையாமல் அருள் காரணமாய் அமைந்தது. ஆக எல்லா உயிர்க்கும் ஒரே மாதிரி நுண்ணுடல் கொடுக்கிறார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். (குருடனுக்கு கோல் கொடுப்பது போல)
- நுண் உடம்பில் உள்ள மனத்தால் நுண்ணிய அளவில் விருப்பு வெறுப்பு ஏற்படுகின்றன.
- அவற்றிற்கு ஏற்றவாறு பருவுடல்களை பின்னர் படைத்துக் கொடுக்கிறார். ஆதலால் உடலே வினைக்கு முந்தியது.

அத்துவைதம்

பரம்பொருள்

- சொரூபநிலை → ஏகன்
- தடத்தநிலை → அனேகன்
  - தாதான்மிய சம்பந்தம்
    - சிவம் + சக்தி
    - ஒருமையில் இருமை
    - ஐந்தொழில் புரிதல் திருமேனி கொள்ளல்
  - அத்வைத சம்பந்தம்
    - சிவம் + உயிர்
    - இருமையில் ஒருமை இரண்டல்ல (ஒன்று)
    - உயிர்களிடத்தில் ஒன்றாய், உடனாய், வேறாய் இருத்தல்

சைவ ஆகமங்களிலும், திருமுறைகளிலும் ஐந்தொழில் என்பது,

இரண்டாகவும் (மறைப்பாற்றல், அருளாற்றல்)

மூன்றாகவும் (படைத்தல், காத்தல், அழித்தல்)

ஐந்தாகவும் விரித்துப் போற்றப்படுகிறது.

மறைத்தல் ஏன்?

ஆசிரியர் பள்ளி மாணவனை அடித்து தவறுகளை திருத்துகிறார். பல வருடம் கழித்து, நல்ல நிலையில் வரும் மாணவன் ஆசிரியரைப் போற்றுவார். அதுபோல் இறைவன் உயிர்கள் அருளாற்றலைப் பெற அடித்து திருத்துகிறார்.

வேதத்தில் முத்தொழில்:

படைத்தல் காத்தல் அழித்தல்

(மறைத்தல் மற்றும் அருளல் தொழிலில் முத்தொழிலும் அடங்கும்)

காத்தல்: → காத்தலோடு இயைபுடையது மறைத்தல் → ஒரு கால எல்லை வரை உடம்பைக் காத்து (காத்தல்) பின் மறைத்து (மறைத்தல்) பாசப்பிணைப்பு நீங்கும்படி உதவுதல்

அழித்தல்: → அழித்தலோடு இயைபுடையது அருளல் → மலங்களை நொக்கி (ஒடுக்குதல்) திருவருளோடு உயிர்களை ஒருங்கச் செய்தல் (அருளல்)

ஆக ஐந்தொழில் முத்தொழிலாக அடங்கி நிற்பது புலனாகும்.

ஆதிசங்கரர்: (கி.பி. 788)

கேரளத்திலுள்ள காலடி என்னும் ஊரில் ஆர்யாம்பாள்-சிவகுரு தம்பதியினருக்கு மகனாய் தோன்றிய மெய்ஞான வல்லுநர். இளமைப் பிராயத்தில் கௌடபாதரின் சீடரான கோவிந்த பகவத்பாதரிடம் வேதாந்தம் மற்றும் இதர தத்துவங்கள் பயின்று பகவத்பாதர் என்று அழைக்கப்பட்டார்.

- எல்லாம் பிரம்மம்
- இரண்டாவதாக ஒரு பொருள் இல்லை
- மற்றபொருள் பிம்பம் (இறை துளி)

பிரசமயம் கூறும் அத்துவிதம்

கேவலாத்துவிதம்:

கேவலம் - தனிமை (அபேதம்).

தங்கமும் அணிகலனும் போல ஆதிசங்கரர்

மாயாவாதம்

↓

சங்கரர் மதம்

↓

வேதாந்த மதம் (அ) அத்வைதம்

↓

வேதாந்திகள்

↓

நம்மால் அறியும் உலகம் வெறும் பொய்த்தோற்றம் எனக் கழித்து விடுவதால் சங்கரர் மதத்தை மாயா வாதம் என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது.

அவர்கள் சொல்லும் உதாரணம்:

அந்தி வேளையில் வழிப்போக்கனுக்கு கயிறு பாம்பாகத் தெரிகிறது. அதுபோல் உலகம், முற்றிலும் மெய்யாகவும், முற்றிலும் பொய்யாகவும் இல்லாத ஒரு தோற்றம் அளிக்கிறது.

பிரம்மமே உலகமாக தோற்றம் அளிக்கிறது என்கின்றனர்.

உதாரணக் குறைபாடு: பாம்பை பார்த்திராத அல்லது அதைப்பற்றி முற்றிலும் அறியாத ஒருவனுக்கு கயிறு பாம்பாகத் தோன்றாது. ஆக,

- பாம்பு ஒரு உள்பொருள்
- உலகமும் ஒரு உள்பொருள்
- பிரம்மத்தினின்று வேறானது

மாயாவாதம் என்ன சொல்கிறது?

ஒரு பொருள் கொள்கை உடையவர் மாயை உண்டு என்று கூறினால் அக்கொள்கை அடிபடும். மாயை இல்லை என்று கூறுவாரேயானால், அனைத்துக் காரியமும் அதனால்தான் நடக்கிறது. எனவே இல்லை என்பதற்கும் வழி இல்லை. ஆதலால் மாயையை அநிர்வசனீயம் என்கின்றனர். (இத்தன்மையது என்று வரையறுத்துச் சொல்ல முடியாது).

பிரசமயம் கூறும் அத்துவிதம்

துவைதம் (பேதாவாதம்):

இருளும் ஒளியும் போல மாத்துவர்

பிரசமயம் கூறும் அத்துவிதம்.......

விசிட்டா அத்துவிதம் (பேதாபேதம்)
சொல்லும் பொருளும் போல

விசிட்டம்: சிறப்பு இயல்பு உடைய பொருள். அதாவது சக்தி, உயிர், பாசங்களால் விசேடிக்கப்பட்டு நிற்பது பரம்பொருள் என்பது கருத்து. சிறப்பு இயல்பு உடைய பொருள்.

அதாவது சக்தி, உயிர், பாசங்களால் விசேடிக்கப்பட்டு நிற்பது பரம்பொருள் என்பது கருத்து.

சைவ சித்தாந்த அத்துவிதம்:
சுத்தம்: யாதானும் ஒன்றால் விசேடிக்கப்படாது நிற்றல். அதாவது அடைமொழி வேண்டாது பொருள் காணப்படுவது.

சுத்தா அத்துவைதம்:

அ = அல்ல

துவைதம் = இரண்டு

அத்வைதம் = இரண்டல்ல (ஒன்று)

சிவம் (1) உயிர் (2)

பிரிக்க முடியாத கலப்பின் தன்மையால் ஒன்று

ஆக,

அத்துவிதம் = பொருட்கள் இரண்டின் பிரிக்கமுடியாத கலப்பு

மனிதனின் பல்வேறு நிலைகள்

குழந்தை

கல்வி கற்றல்

குரு உபதேசம்

திருவடி தீட்சை

இறை சம்பந்தம்

முக்தியடைதல்

ஒன்றாய் நிற்றல்: உயிர்கள் நிலைத்தல் பொருட்டு (உடலில் உயிர் போல) உயிரோடு இறைவன் ஒன்றாய் இருக்கிறான். ஆக உயிருக்கு இருக்க இடம் கொடுத்தல்.

வேறாய் நிற்றல்: உயிர்கள் அறியும்படி அறிவித்தல் பொருட்டு உயிர்களிடத்தினின்று இறைவன் வேறாய் இருக்கிறான். ஆக உயிருக்கு அறிவிக்கும் பொருட்டு.

உடனாய் நிற்றல்: உயிர்கள் அறியினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுதந்திரம் இன்மையால் உயிர்கள் அனுபவிக்கும் வண்ணம் தானும் அறிந்து செலுத்தும் பொருட்டு இறைவன் உயிர்களோடு உடனாய் இருக்கிறான். ஆக உயிரின் இச்சைக்கு உதவுதல்.

உதாரணம்: உயிரறிவும் கண்ணொளியும் போல
உயிர் அறிய சிவம் உதவுகிறது
கண் அறிய உயிர் உதவுகிறது

புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள் வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம். - சிவப்பிரகாசம் (7)

வீடு பேறு

மேற்கண்ட பாடலில் அறிவு ஒளிபோல் பிறிவரும் அத்துவிதம் ஆகும் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார்.

---

1. பிறவித் துன்பத்தை உயிர்கள் உணராதது ஏன்?

பல பிணிகளை உடைய உடலில் உள்ள உயிர் அதிலிருந்துகொண்டு மிகச்சிறிதாக உள்ள இன்பத்தை நுகர விரும்புகிறது.

செடிகொள் நோய் ஆக்கைஅம்
பாம்பின்-வாய்த் தேரை-வாய்ச் சிறு பறவை
கடிகொள் பூந்தேன் சுவைத்து
இன்புறல் ஆம் என்று கருதினாயே;
முடிகளால் வானவர் முன் பணிந்து
அன்பராய் ஏத்து முக்கண்
அடிகள் ஆரூர் தொழுது உய்யலாம்;
மையல்-கொண்டு அஞ்சேல் நெஞ்சே.

-ஞானசம்பந்தப் பெருமான்

உயிர்களை ஆணவத்தின் அதோநியாமிகா சத்தி (கீழ்படுத்தும் சக்தி)

விபரீத உணர்வு பொய்யை உண்மை என்றும் உண்மையை பொய் என்றும் திரியுணர்வை உண்மை என்றும் எண்ணிக்கொண்டுள்ளனர்.

ஆக, ஆணவம் பரிபாசம் அடையாத போது பிறவியை துன்பம் என அறியாது அதில் உழலும்.

பிறவியில் இருந்து நீங்கவேண்டும் என்ற எண்ணம் உயிருக்கு எப்போது நீங்கும்?

2. மலபரிபாகம்:

❖ மலபரிபாகம் உயிரில் படிப்படியாக நிகழும் அறிவு படிப்படியாக வளரும் முன்பு அறியாத துன்பத்தை அறியும் பிறவியிலிருந்து நீங்க விரும்பும்.

3. சக்தி நிபாதம்:

❖ திரோதான சக்தியால் மலங்களை கூட்டி உயிர்களை பிறவித் துன்பத்தில் உழல்வித்து உழல்வதை பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

❖ மருத்துவர் நோய் நீக்கும்பொருட்டு செய்த சிகிச்சை துன்பத்தைத் தரும். அதே மருத்துவர் பார்த்துக்கொண்டு இருக்கிறாரே என்று கூற முடியாது. நோய் தீர துன்பத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

சக்தி நிபாதம்...

❖ உயிர் பந்தத்துள் உள்ளவரை அருள் துன்பமாய் தெரியும். அதனால் அருள் திரோதானம் (மறக்கருணை) எனப்பட்டது. உ-ம்: பித்தத்துள் மூழ்கியிருப்போருக்கு தித்திப்புத் தெரியாது.

❖ உயிர்நோயாய் உள்ள ஆணவமலம் வலியிழந்து நீங்கும் நிலைமை ஏற்பட்டால் அறக்கருணையாக மாறும். அது சக்தி நிபாதம் எனப்படும்.

4. இருவினை ஒப்பு:

❖ இன்ப துன்ப நேரங்களில் அவற்றால் பாதிப்புறாது வழக்கம்போல் தனது கடமையை கொண்டிருத்தல். இவ்வாறு எப்படி இவரால் இருக்க முடிந்தது என்று எண்ணி வியப்படைகிறோம். இச்செயல் வழியாக மலபரிபாகம் வரப்பெற்றவர் என அறியலாம்.

5. பக்குவம்:

❖ உயிர் அறிவு மலப்பிடிப்பிலிருந்து விடுபட்டு படிமுறையால் வளரும் காலமே பக்குவகாலம்.

❖ பக்குவம் எப்போது நிகழும்?
இருவினை ஒப்பு, மலபரிபாகம், சக்திநிபாதம் இம்மூன்றும் ஒருங்கே நிகழும் நிலையில் பக்குவம் நிகழும்.

சக்திநிபாதம் படிநிலைகள்:

மிகமிக மெதுவாக / மந்ததரம்	ஈர விறகில் நெருப்பு பற்றுதல்
மெதுவாக / மந்தம்	காய்ந்த விறகில் நெருப்பு பற்றுதல்
விரைவாக / தீவிரம்	துணியில் நெருப்பு பற்றுதல்
அதிதீவிரம் (ஞானம் உண்டாக்கும் நிலை) / தீவிரத்தரம்	சமையல் எரிவாயுவில் நெருப்பு பற்றுதல்

வேற்று விகார விடக்
குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா
அரனே ஓ என்று
போற்றிப் புகழ்ந்திருந்து
பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து
வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக்
கட்டு அழிக்க வல்லானே

- திருவாசகம்.

மந்த தரத்தில் இறைவன் உயிருக்கு நிகழ்விப்பது – இதுவரை மறைப்பு சக்தியை செலுத்திய இறைவன், உய்யும் பொருளாகிய அருள்சக்தியை செலுத்தி உய்வுக்குரிய நெறியில் செலுத்துவான்.

6. உய்யும் நெறி:

சரியை, கிரியை, யோகம் அல்லது தவம் அல்லது சிவபுண்ணியம்

சிவ புண்ணியம் (தீட்சையால்), தலைவர் சிவனார் என்றும் குருநாதர் மூலம் தீட்சை பெற்று சரியை கிரியை யோகங்களைச் செய்தல்.

தீ - கெடுத்தல் (பாசப்பற்றை கெடுத்தல்)
க்ஷை - கொடுத்தல் (முத்தியைக் கொடுத்தல்)

சரியை (மந்தத் தரத்தில்)	புறத்தொழிலால் செய்யும் வழிபாடு - உருவநிலை வழிபாடு. அது முதிர்ந்து கிரியையாகிறது.
கிரியை (மந்தத்தில்)	மந்திரத் திருமேனியை நோக்கி புறம் அகம் இரண்டால் வழிபடுவது – அருவுருவ வழிபாடு. இந்த முயற்சியின் முடிவு யோகம்.
யோகம் (தீவிரத்தில்)	அருவத் திருமேனியை அகத்தே வழிபடுவது

சரியைக்குரிய தீட்சை: சமய தீட்சை. சைவ சமயத்தில் குருநாதரால் உள்புக வைப்பது. திருநீற்றை நீரில் குழைத்து குறிப்பிட்ட 16 இடங்களில் இடுவதற்கு உரிமை பெறுவது. இவர்கள் சைவசமயி எனப்படுவர்.

கிரியைக்குரிய தீட்சை: விசேட தீட்சை (மேலானது). சிவபூசை செய்வதற்கு உரிமை லிங்கத்திருமேனி கொண்டு ஆத்மார்த்த வழிபாட்டை கற்பித்து ஐந்தெழுத்தை உபதேசிப்பது.

யோகத்திற்குரிய தீட்சை:
கிரியையின் தொடர்ச்சியாக (அகப்பூசை) யோகம் அமைவதால் யோகத்திற்கு தனி தீட்சை இல்லை.

நிர்வாண தீட்சை: நிர் - நீக்கல் (பந்தபாசத்தை) வாணம் - முழுமையாக (சஞ்சித வினைகளை முற்றிலுமாக நீக்குதல்)

ஆசாரிய அபிடேக தீட்சை:
குருநாதர் நிலைக்கு உயர்த்துதல். பிறர்க்கு அபிடேகம் செய்து தீட்சை வழங்க உரிமை பெறுதல்.

ஆசாரியர் எப்போது வருவார்?
பள்ளியில் சேர்க்கும் பருவம் வந்தவுடன் தானாக அறிவைப் பெறமுடியாது. பக்குவம் வந்தாலும் தானாக ஞானம் பெறமுடியாது. ஞானத்தை, பக்குவம் வராதபோது உணர்த்துவதும் குற்றம். பக்குவம் வந்ததும் உணர்த்தாததும் குற்றம்.

பக்குவம் என்பது ஆன்மாவின் அறிவில் நிகழ்வது.
ஆக, உயிரில் நிகழும் பக்குவத்தை உயிருக்கு உயிராய் உள்ள இறைவன் அறிந்து அவரே ஞானாசிரியராக எழுந்தருளி ஞானத்தை வழங்குவார்.

பிறவித் துன்பத்தை உயிர்கள் உணராதது ஏன்?

பல பிணிகளை உடைய உடலில் உள்ள உயிர் அதிலிருந்துகொண்டு மிகச்சிறிதாக உள்ள இன்பத்தை நுகர விரும்புகிறது.

செடிகொள் நோய் ஆக்கைஅம்
பாம்பின்-வாய்த் தேரை-வாய்ச் சிறு பறவை
கடிகொள் பூந்தேன் சுவைத்து
இன்புறல் ஆம் என்று கருதினாயே;
முடிகளால் வானவர் முன் பணிந்து
அன்பராய் ஏத்து முக்கண்
அடிகள் ஆரூர் தொழுது உய்யலாம்;
மையல்-கொண்டு அஞ்சேல் நெஞ்சே.

-ஞானசம்பந்தப் பெருமான்

ஞானம்

சிவனார் திருவடி அடைய வழி

அறிவு : அறிவு எனும் ஞானத்தால் மறவாது நினைத்தல் (மறவாமை)

இச்சை : இச்சை எனும் பக்தியால் அன்பு செய்தல்

செயல் : செயல் எனும் தொண்டினால் பணிந்து ஏத்தியும் வழிபடுதல்

பணிதலால் பாசநீக்கம்
பரவுவதால் வீடுபேறு

இரவி நீள்சுடர் எழுவதன் முன்னம்
எழுந்து தன்முலைக் கலசங்கள் ஏந்திச்
சுரபி பால் சொரிந்து ஆட்டி நின்பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டு
பரவி உள்கி வன் பாசத்தை அறுத்து
பரம வந்து, நுன் பாதத்தை அடைந்தேன்
நிரவி நித்திலம் அத்தகு செம்பொன்
அளிக்கும் தென்திரு நின்றியூரானே

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

நிட்டை கூடுதல்:

உயிராகிய தன்னை (உயிர் - காண்பவன்) அருள்வழியில் நின்று (சிவ சக்தி - காட்டுபவன்) சிவமாக காண்பதே (சிவம் - காணப்படும் பொருள்) நிட்டை கூடுதல் எனப்படும்.

ஞானம்

கேட்டல் (சாத்திர ஞானம்):

- நால்வகை வாக்கை பற்றி நிகழும்.
- சுத்த மாயை காரியமாகிய சொல்லும் பொருளும் ஆனது.

சிந்தித்தல் (ஆராய்ச்சி ஞானம்):

- சரியா தவறா என ஐயம் தீர ஆய்வது.

ஞானம்....

தெளிதல் (சாதன ஞானம்):

- ஆய்வின் பயனாய், காண்பான் (உயிர்), காட்சி (பதிஞானம்), காணப்படும் பொருள் (சிவம்) இவை மூன்றும் (பேதஞானம்) தனித்தனியாய் பார்ப்பதால் இது முடிவான முத்தியில்லை.

ஞானம்....

நிட்டை கூடுதல்:

- ஏனைய பொருள் எதனையும் பாராது சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும் நிலையே அனுபூதி ஞானம்.

வீடுபேறு

↑

ஞானம்

↑

தவம்

(சரியை, கிரியை, யோகம்)

ஞானம் எது?

செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய் வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்ல வற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று
அருளாலே உணர்ந்து அறிந்தார் - சேக்கிழார்

செய்வினையும் - நல்வினையும் தீவினையும்
செய்வானும் - உயிர்
அதன் பயனும் - இன்பமும் துன்பமும்
கொடுப்பானும் - இறை (சிவபெருமான்)

இவற்றை உள்ளபடி உணர்வதே ஞானம்

ஞானம் எந்த வயதிலும் எந்த நிலையிலும் வரும். ஞானசூனியமாக இருப்பவனுக்கும் ஞானம் வரும்.

உ-ம்: ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பூட்டியிருந்த அறையில் திடீரென வெளிச்சம் கொண்டு சென்றாலும் இருள் அகன்று, வெளிச்சம் பரவும்.

ஞானம் நிகழ, முதல் காரணம் தவம். துணைக்காரணம் குரு.

முத்தியில் உயிர்நிலை

சிவஞானம்	
அபரஞானம் (நூல்வழி) கேட்டல் + சிந்தித்தல்	மெய்ஞானம் (திருவருள் வழி) தெரிதல் + நிட்டை கூடுதல்

- முத்தியடைந்தாலும் உயிர் இறைவனுக்கு அடிமை.
- பேரின்பம் எனப்படுவது, இறைவன் உயிருக்கு அறிவித்தாலன்றி உண்டாகாது.
- பேரின்பம் ஒன்றிற்கே உயிருக்கு உரிமை. உயிர் ஐந்தொழில் புரியாது.
- முதல்வனுக்கு அடங்கியே உயிர் இருக்கும். இறைவன் வியாபகமாக இருப்பவன்.
- உயிர் வியாப்பியமாக இருக்கும்.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பு
அயிாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு
உணர்வு கெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்
தெள்ளேனம் கொட்டாமோ - திருவாசகம்

வான் கெட்டு - எல்லாப் பூதங்களும் நிலவ இடங்கொடுத்து நிற்கும் ஆகாயமும் ஒடுங்கி
தான் - சிவம்
சலிப்பு - அசைதல்
நான் - தற்போதம்

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் மகாப் பிரளயத்தைக் குறிக்கின்றன. அதுபோது எந்த ஒன்றும் மிஞ்சுதலின்றி, இறைவன் ஒருவனே எஞ்சி உள்ளான். ஆதலின், அதனைக் குறிக்க தான் கெ(ட்)டல் இன்றி என்று கூறினார்.

ஆக, கட்டுண்ட உயிர்க்கு ஞான குருவாய் நின்று மெய்ஞ்ஞானம் உபதேசித்தும் கட்டு நீங்கி முத்தியின் போது பிரிப்பின்றி நின்றும் பேரின்பத்தை அனுபவிக்கச் செய்யும்.

ஞானம்:

தனக்குத் தலைவன் சிவம். அவனுக்கு நாம் அடிமை. அவன்பால் அயராத அன்பு. இந்த மூன்று நிலைகளை நாம் உணரும் நிலையே ஞானமாகும்.

அகப்பூசை

அக பூசை (அ) அந்தரியாகம் (அ) சத்பாவனை

(உள் முகமாய் செய்யும் வழிபாடு)

அந்தரி யாகம் தன்னை முத்தி சாதனமாய்
அறைந்திடுவர்; அதுதானும் ஆன்ம சுத்தி ஆகும்;
கந்தம், மலர், புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதலாக்
கண்டன எலாம் மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தை தனில் அர்ச்சிக்கச் சிவனை ஞானத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத், தர்ப்பணத்தை விளக்க
வந்திடும் அவ்வொளி போல் மருவி அரன் உளத்தே
வரவர வந்திடுவன்; பின் மலம் ஆனது அறுமே.

- சித்தியார் (சுபக்கம்-301)

விளக்கம்: அகப்பூசையின் போது அபிடேகம், அலங்காரம், தூபம், தீபம், ஆராதனை, நைவேத்தியம் திருவமுது முதலிய பூசா திரவியங்களை மனத்தால் செய்து, ஆன்மாவின் இடத்தில் சிவபெருமானை ஞானத்தால் அர்ச்சித்தல், ஓமித்தல், தியானித்தல் ஆகியவற்றை செய்தல் வேண்டும்.

அவ்வாறு செய்யும்போது கண்ணாடிக்கு பொடியிட்டு துலக்கும்போது மாசு நீங்கி, ஒளி மேலிடுவதுபோல அச்சிவம் உள்ளத்தில் மேலிட்டு விளங்கித் தோன்றி மலப்பற்று கழியும். அவ்வாறு கழிவது ஆன்ம சுத்திக்கு ஏது ஆகும். மலம் கழிவது ஆகிய ஆன்ம சுத்திக்கு அந்த அந்தரியாக பூசை அவசியம். இந்தப் பூசையை முத்திக்கு சிறந்த சாதனம் என அநுபவம் உடைய அருளாளர்கள் அறுதியிட்டு கூறியருளியுள்ளார்கள்.

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

- திருநாவுக்கரசர் 4ம் திருமுறை

பொருள்: இவ்வுடம்பைக் கோயிலாகவும், நல்ல நினைவுகளை உடைய மனத்தை அடிமையாகவும் கொண்டு, வாய்மையைத் தூய்மையாகவும் வைத்து, மனதிற்குள் ரத்தினம் போல ஜொலிக்கும் ஆன்மாவை இலிங்கமாகப் பாவித்து, அன்பை நெய்யும் பாலாய் நிறைய வைத்துப் பூசித்து, இறைவனை போற்றினேன்.

மறவாமை யால்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்துஅர்ச்
சனைசெய்வார்

- பூசலார் நாயனார் புராணம்

பொருள்: இறைவரை, மறவாமையான கருவியால் அமைந்த மனமான கோயிலுள் எழுந்தருளச் செய்து நிலைபெறுமாறு இருத்தி, பொருந்தும்படி அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற ஒளிவீசும் சுடர் விளக்கை ஏற்றி, அழிவற்ற பேரானந்தமான நீரினால் திருமஞ்சனமாட்டி அறவாணர்க்கு அன்பு என்னும் அமுதை அமைத்து பூசிப்பவரானார்.

கோயில்	- மனம்
விளக்கு	- மெய்ஞ்ஞானம் (ஆதி உறவு சிவம்தான் என்ற உணர்வு)
திருமஞ்சன நீராட்டு	- மாறிலா இன்பம் (உறவு சிவம்தான் என்றபோது வந்த இன்பம்)
திரு அமுது	- அன்பு
அர்ச்சனை	- ஐந்தெழுத்து

இப்பூசை மூன்று திறத்தது

1. நாபி (உந்தி)

- ❖ வேள்வி செய்யும் இடம் (ஈசனோடு பிரிப்பின்றி ஒன்றாய்)
- ❖ சிவஞானத் தீயினை உணர்வால் எழுப்புதல்
- ❖ தன்முனைப்பின் கூறுகளை காமம் குரோதங்களைப் பலியிட்டு சிவாக்கினியில் பொசுக்குதல் சிவம் + அங்கி (தீ)

2. இதயம்

- ❖ உணர்வார் பூவும் நீரும் கொண்டு அர்ச்சனை செய்யும் இடம் (ஈசன் ஆண்டான் - தான் அடிமை என்று வேறாய்)
- ❖ இதயத்தில் தில்லை கூத்தரை கான முயலுதல் வேண்டும்.

சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்து உள்ளே நோக்குமின்
பார்த்தஅப் பார்வை பசுமரத்து ஆணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட்டு ஓடுமே

(திருமந்திரம்-1631)

---

3. நெற்றி நடு:

- ❖ தியானம் செய்யும் இடம் (திருவருளோடு உடனாய்))
- ❖ ஞானபரம ஆச்சார்யார் திருஉரு காணும் உண்மைப் பாவனை.

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்தது வினவ னாமே

(திருமந்திரம்-2659)

பூசை பொருட்கள்

- ➢ மறவாத நினைப்பு
- ➢ பிறழாத செய்கை
- ➢ இறவாத இன்ப அன்பு

பூசா மந்திரம்

திருவைந்தெழுத்து

பூசா பலன்

ஆன்மபோதம் அற்று
உயிர் சிவமாதல்

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலம்என்று தேர்ந்துகொண் டேனே

-பத்தாம் திருமுறை

பொருள்: இரு புருவங்கட்கு இடையேயுள்ள வெற்றிடம் தன்னை உற்று உற்றுப் பார்க்க, பார்ப்பவர்க்கு ஒளியை மிக வீசுகின்ற ஓர் இல்லமாய் விளங்கும். அந்த இல்லமே யாவரும் பற்றுதற்குரிய சிவன் இருக்குமிடமாகும். அஃதாவது ஞானாகாசம் என நான் திருவருளால் ஆராய்ந்து அடைந்தேன்.

அகபூசை:

- உயிராகிய தன்னை சிவமாகவே காண முற்படும் சாதனமே மலமாகி நின்ற உயிரைச் சிவமாக்கி, பிறப்பிலிருந்து விடுபடச் செய்யும் முயற்சியே இது.
- சிவனாருக்குரிய எட்டு குணங்களும் உயிரின் மாட்டு வந்து படிவதால் பசுத்துவத்தோடு கூடி பசுவாய் நின்ற உயிர் சிவத்தோடு கூடி சிவம் என நிற்கும்.

இதயத் தாமரையே இறைவற்கு கோயில்:

மண்முதல் நாளமலர் வித்தை கலாபரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும் – நண்ணில்
கலைஉருவாம் நாதமாம் சத்திஅதன் கண்ணாம்
நிலையதிலாம் அச்சிவன்தான் நேர்

-சிவஞானபோதம் 9ம் சூ 3ம் அதி.

மண்முதல் நாளம்	: 24 தத்துவம் 8 விரல் தண்டாக
மலர் வித்தை	: வித்தியா தத்துவம் 7
கலாரூபம்	: சுத்தவித்தை

நாட்டும் இதயம் தானும் நாபியினில் அடியாய்
ஞாலம் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டு மோகினி சுத்தவித்தை மலர் எட்டாய்
முழுஇதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்க்
காட்டு கமலாசனம் மேல் ஈசர் சதாசிவமும்
கலா மூர்த்தம் ஆம் இவற்றின் கண்ணாகும் சத்தி
வீட்டை அருள் சிவன் மூர்த்திமான் ஆகிச் சத்தி
மேலாகி நிற்பன் இந்த விளைவு அறிந்து போற்றே

(சித்தியார் சுப-300)

ஆக இறைவன் வடிவம் ஐந்தெழுத்து எனக்கூறி அர்ச்சிக்க வேண்டும். சிவன், சக்தியில் விளங்குபவர்.

ஆக இறைவனுக்கு,

ஐந்தெழுத்து தூல வடிவம் - பதி, பசு, பாசத்தோடு கூடிய நிலை
ஆன்மா சூக்கும வடிவம் - ய மட்டும் கலந்த நிலை
சக்தி அதிசூக்கும வடிவம் - வ மட்டும் கலந்த நிலை

தெளிவுரை:

அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உள்ளது.
அண்டம் - 36 தத்துவங்கள்
பிண்டம் - சூக்குமமாய் தாமரை வடிவாய் பிண்டத்தில்

தாமரைப் பூவின் பாகங்கள்	விளக்கம்
தண்டு (நாளம்)	ஆன்ம தத்துவம் (24)
8 இதழ்	வித்தியா தத்துவம் (7) சுத்தவித்தை (1)
64 பூந்தாது	ஈஸ்வரம் + சதாசிவம் எனும் இரண்டும் 64 பூந்தாது வடிவாக
குமிழ்	சக்தி பூந்தாதுவிற்குள் உள்ள (கிரியா சக்தி - விந்து) குமிழ் வடிவம். சக்தி-1
விதை	சிவம் குமிழில் காணப்படும் விதை வடிவம் (ஞான சக்தி - நாதம்)

ஆக,

ஆன்ம தத்துவம்	-	24
வித்தியா தத்துவம்	-	07
சுத்த வித்தை	-	01
ஈஸ்வரம் + சதாசிவம்	-	02
கிரியா சக்தி	-	01
ஞான சக்தி	-	01

ஆக, தத்துவங்கள்	-	36

ஐந்தெழுத்து

மந்திரம் - உயிரைக் காப்பது

தந்திரம் - ஆகமம் (வழி)

எந்திரம் - எழுத்து அமைவது

ஐந்தெழுத்து என்பது என்ன?

ஐந்தெழுத்து என்பது ஒரு பொருளில் நிற்கக்கூடியது அல்ல. அது மந்திரமாகவும், பெயராகவும், வடிவமாகவும் விளங்குகிறது. பெயராக எங்கே நிற்கும்? நாமெல்லாம் சொன்னால் அது பெயர். அதுவே குருநாதர் சொன்னால் அது மந்திரம். அந்த குருநாதர் சொன்ன மந்திரத்தை நெஞ்சத் தாமரையில் நிறுத்தி, லாடத்தானம் என்று சொல்லக்கூடிய புருவ மத்தியில் கொண்டு வந்து நிறுத்தினால், அது வடிவம். இதுவே ஐந்தெழுத்தின் அடிப்படை.

ஐந்தெழுத்தின் பெருமை

ஞானசம்பந்தப் பெருமான் நமக்கு ஐந்தெழுத்தின் பெருமையை அருளியிருக்கிறார்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

சிவனார்க்கு		
ஐந்தெழுத்து - தூல வடிவம்	உயிர் - சூக்கும வடிவம்	சக்தி - அதிசூக்கும வடிவம்
பசு பாசங்களோடு கலந்திருப்பதால்	எல்லா உயிரிடத்தும் ஊனாகி உயிராகி உணர்வாகி கலந்திருப்பதால்	சக்தியோடு பிரிப்பின்றி உள்ள நிலை

பஞ்சாக்கர பேதங்கள்

தூலம்	-	நமசிவாய
சூக்குமம்	-	சிவயநம
சூக்குமா சூக்குமம்	-	அ,உ,ம்,விந்து,நாதம்
அதி சூக்குமம்	-	சிவாய சிவ சிவ
பிரணவம்	-	ஓம் நமசிவாய
பிரசாதம்	-	ஓம் சிவாயநம
காரணம்	-	சிவ
மகாகாரணம்	-	சி
முத்தி	-	சிவாய

நிலை	தூல பஞ்சாக்கரம்				
	ந	ம	சி	வா	ய
பசு பாசங்களில் கலந்து நிற்கையில்	ஆதிசக்தி (மறைப்பாற்றல்) மாயை மாயேயம் கன்மம்	மூல மலம்	சிவம்	சக்தி (அருள்)	உயிர்
கூத்தர் திருமேனியாக	தூக்கிய திருவடி	திரு வயிறு	திருத் தோள்	திரு முகம்	திரு முடி

ஆடும்படி கேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியில் நகரம், கூடும்
மகரம் உதரம், வளர் தோள் சிகரம்,
பகரும் முகம் வா முடியப் பார்

- உண்மை விளக்கம் (32)

திருவடி	-	'ந'காரம், அதாவது ந எனும் எழுத்து.
வயிற்றுப்பகுதி	-	'ம'காரம், அதாவது ம எனும் எழுத்து
தோள்கள்	-	'சி'காரம், அதாவது சி எனும் எழுத்து.
திருமுகம்	-	அதை நோக்கினால் அது வா என்று அழைக்கிறது.
தலை	-	'ய'காரம், அதாவது ய எனும் எழுத்து.

நிலை	சூக்கும பஞ்சாக்கரம்				
	சி	வா	ய	ந	ம
பசு பாசங்களில் கலந்து நிற்கையில்	சிவம்	அருள்	உயிர்	மறைத்தல்	மூலமலம் (ஆணவம்)
கூத்தர் திருமேனியாக	துடி ஏந்திய கரம்	வீசிய கரம்	அபய கரம்	தீ ஏந்திய கரம்	ஊன்றிய திருவடி
ஐந்தொழில்	படைத்தல்	அருளல்	காத்தல்	ஒடுக்குதல்	மறைத்தல்

சேர்க்கும் துடி சிகரம் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் – பார்க்கில் இறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்

- உண்மை விளக்கம் (33)

* உடுக்கை ஏந்திய வலது திருக்கரத்தில் சிகாரம் அமையும்.
* குஞ்சித்த திருவடியைக் காட்டும் இடது திருக்கரத்தில் அருளைச் சுட்டும் வகாரம் அமையும்.
* அஞ்சேல் என அபயக்குறி காட்டும் வலது திருக்கரத்தில் ஒளிபெற்ற யகாரம் அமையும்.
* அக்னி ஏந்திய இடது திருக்கையில் நகாரம் அமையும்.
* முயலகனை அழுத்திப் பொருந்தியிருக்கும் வலது திருக்காலில் மகாரம் அமையும்

திருக்கூத்தின் இயல்

ஊன நடனம் (ஐந்தொழில் கூத்து)
(துடி - உடுக்கை அல்லது தமருகம்)

உடுக்கை ஏந்திய கரம்	-	படைத்தல்
அபய கரம்	-	காத்தல்
தீ ஏந்திய கரம்	-	ஒடுக்குதல்
ஊன்றிய திருமேனி	-	மறைத்தல்
எடுத்த திருவடி	-	அருளல்

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

- உண்மை விளக்கம் (35)

- ❖ உடுக்கை ஏந்திய திருக்கரத்தில் படைத்தலையும்
- ❖ அமைந்த திருக்கரத்தில் காத்தலையும்
- ❖ அக்னி ஏந்திய திருக்கரத்தில் அழித்தலையும்
- ❖ அழுத்தமாக ஊன்றிய திருவடியில் மறைத்தலையும்
- ❖ தூக்கிய திருவடியில் அருளுதலையும்

ஆகிய ஐந்தொழிலையும் ஊன நடனத்தில் அம்பலவாணன் ஆற்றுகிறார்

ஞான நடனம் & ஆனந்த நடனம்

துடி ஏந்திய கையால் மாயையை உதறியும்
தீ ஏந்திய கையால் கன்மத்தை பொசுக்கியும்
ஊன்றிய திருவடியால் ஆணவத்தை அழுத்தியும்
வீசிய கரத்தால் அருளைச் செய்தும்
தூக்கிய திருவடியால் ஆனந்தத்தில் மலர்த்தியும்

இவ்வாறு உயிர்களை பேரின்பத்தில் திளைக்கச் செய்தல் திருக்கூத்தின் உண்மையாகும்.

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டு மலம்
சாய அமுக்கி அருள் தான்எடுத்து – நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தையார் பரதம் தான்

- உண்மை விளக்கம் (36)

உடுக்கை ஏந்திய திருக்கை மாயாமலத்தை நீக்குதல் ஆகிய தொழிலைச் செய்கிறது. நெருப்பு ஏந்திய திருக்கை கன்ம மலத்தைச் சுடுதல் ஆகிய தொழிலைச் செய்கிறது. ஊன்றிய திருவடி ஆணவமலத்தை வலி அடங்கச் செய்தல் ஆகிய தொழிலைச் செய்கிறது. தூக்கிய திருவடி பேரின்பம் அருளுதல் ஆகிய தொழிலைச் செய்றிது. அமைந்த திருக்கை அப்பேரின்பத்தில் ஆன்மாவை அழுத்துதல் ஆகிய தொழிலைச் செய்கிறது.

உயிர் செய்யக் கூடியது

பாவம்	புண்ணியம்	சிவ புண்ணியம்
↓	↓	↓
நரகம்	சொர்க்கம்	சிவலோகம்

நரகம், சொர்க்கம் → பூலோகம்

நரகம் : யாதனா சரீரம்

சொர்க்கம் : பூதாசார சரீரம்

பூலோகம் : பூத சரீரம்

பிறப்பின் நான்கு வகைகள்:

அண்டசம் - முட்டையில் இருந்து தோன்றுவது (பறவைகள்)
உற்பிசம் - பூமியில் இருந்து தோன்றுவது (தாவரங்கள்)
சுவேதசம் - வேர்வையிலிருந்து தோன்றுவது (பேன், கிருமி முதலியன)
சராயுசம் - கருப்பையில் இருந்து தோன்றுவது

இத்தாவர சங்கமத்துள் எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்.

எழு வகை பிறப்பு: **தேவர், மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீந்துவன, தாவரம் ஆகியவை.**

படைக்கலம் ஆக உன் நாமத்து எழுத்து
அஞ்சு என் நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழு பிறப்பு(ம்)
உனக்கு ஆட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீறு அணிந்து உன்
அடைக்கலம் கண்டாய்-அணி தில்லைச்
சிற்றம்பலத்து அரனே - அப்பர் பெருமான்

பொருள்:

அழகிய தில்லை நகரிலுள்ள சிற்றம்பலத்தில் உள்ள பெருமானே என்னை ஏழையர் செய்யக் கூடிய தீங்குகளிலிருந்து பாதுகாக்கும் படைக்கருவியாக உன் திருநாமமாகிய திருவைந் தெழுத்தினையும் அடியேன் நாவினில நீங்காது பொண்டுள்ளேன். இடையில் ஒருபோதும் உனக்கு அடிமைத் தொண்டு செய்தலைத் தவிர்ந்தேன் அல்லேன். எழுவகைப்பட்ட பிறப்புகளில் எந்தப் பிறவி எடுத்தாலும் எடுத்த பிறவிக்கு ஏற்ப உனக்கு அடிமைத் தொண்டு செய்கிறேன். அடியேனை நீ விலக்கினாலும் அடியேன் உன்னை விட்டுப் பெயரேன். எப்பொழுதும் உன்னை மனத்தால் தொழுது உடலால் வணங்கி திருநீறு அணிந்து உன்னால் காக்கப்படவேண்டிய பொருளாக அடியேன் உள்ளேன்.

சிவபுண்ணியம்	
அபுத்தி பூர்வம்	புத்தி பூர்வம்
மனம் இறைவனிடத்து கலவாதும் கருதாதும் செய்தல்	மனம் இறைவனிடத்து கலந்தும் கருதியும் செய்தல்

அபுத்தி பூர்வம்:

1. சிவபெருமானை முதல்வனாக கருதாது ஏனைய கடவுளோடு ஒப்பாக வைத்து பூசித்தல்.
2. எந்நோக்கமும் இன்றி மாவலி சக்கரவர்த்தி முன்பிறப்பில் (எலி சிவன் கோயிலில் விளக்குத் திரியை தூண்டியது) செய்தது போல. செய்த வினை யாதானும் ஒரு வழியில் சிவபெருமானுக்கு உரிய பணியாய் முடிவது.

அதாவது, அர்ச்சனை பொருள்கள் விற்பது, மலர்கள் விற்பது என வாழ்க்கையின் பொருட்டு செய்யும் தொழிலை திருக்கோயிலில் செய்தல் போன்றவை

சிவபுண்ணியம்			
பொது		சிறப்பு	
சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீட்சை இன்றி செய்வது		சிவதீட்சை உடையவராகச் செய்வது	
உபாயம்	உண்மை	உபாயம்	உண்மை
உலகப் பயன் நோக்கி செய்வது	இறைவனிடத்து அன்பு காரணமாய் செய்வது	உலகப் பயன் நோக்கி செய்வது	இறைவனிடத்து அன்பு காரணமாய் செய்வது

சிவபுண்ணிய நிலை		உபாயம்	உண்மை	மொத்தம்
சரியையில்	சரியை கிரியை யோகம் ஞானம்	4	4	8
கிரியையில்		4	4	8
யோகத்தில்		4	4	8
ஞானத்தில்		4	4	8
மொத்தம்		16	16	32

பயன்:

சிவபுண்ணியம்		புவனம்	கலை	புவனம்	முத்தி	பிறப்பு
உபாய சிவபுண்ணியம்	16	பிரக்குதி மாயா புவனம் (ஆன்ம தத்துவ புவனம்)	நிவர்த்தி	108	பதமுத்தி சாலோகம் சாமீபம் சாரூபம்	மீளப் பிறத்தல் கூடும்
			பிரதிட்டை	56		
உண்மை சிவபுண்ணியம் (யோகத்தில் ஞானம் வரை)	12	அசுத்த மாயா புவனம் (வித்தியா தத்துவ புவனம்)	வித்யா கலை	27		

பயன்:

சிவபுண்ணியம்		புவனம்	கலை	புவனம்	முத்தி	பிறப்பு
உண்மை சிவபுண்ணியம் (ஞானத்தில் யோகம் வரை)	3	சுத்த மாயா புவனம் (சிவதத்துவ புவனம்)	சாந்தி	18	அபரமுத்தி சாலோகம் சாமீபம் சாரூபம்	• மீளப் பிறத்தல் இல்லை
			சாந்தி அதீதை	15		
		• ஆணவம் நீங்கி வாசம் மட்டும் உடையவராய் எய்தப்படுவது				
உண்மை சிவபுண்ணியம் ஞானத்தில் ஞானம்	1	பரமுத்தி - சாயுட்சம்				
மொத்தம்	32	3	6	224	3	---

சாலோகம் : புவன பதிகளின் உலகை அடைந்து அகத்தொண்டர் பணிபோல்

சாமீபம் : புவன பதிகளின் உலகை அடைந்து புத்திரருக்கு உள்ள உரிமைபோல்

சாரூபம் : புவன பதிகளின் உலகை அடைந்து தோழருக்கு உள்ள உரிமைபோல்

சாயுட்சம் : சிவபெருமானது திருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை அனுபவித்தல்

கலை - அருள்சக்தி 36 தத்துவங்களை தொழிற்படுத்தும்

நிவர்த்திக் கலை	ஆன்மாக்களை பந்தத்தினின்று நிவர்த்தி செய்யும்
பிரதிட்டைக் கலை	நிவர்த்தி பெற்ற ஆன்மாக்களை மீள நோக்காது பிரதிட்டை செய்யும்
வித்தியா கலை	அனுபவ ஞானத்தை கொடுத்தல்
சாந்திக் கலை	விருப்பு வெறுப்புகளை சாந்தமாகச் செய்தல்
சாந்தி அதீதக்கலை	சாந்தத்தையும் ஒழியச் செய்தல்

தவம் செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவம் செய்து பற்றறுப்பா ராகத் - தவம்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு.

- சிவஞானபோதம் 8ம் சூ 1ம் அதி

நிலை	சரியையில் புறத்தொழில் (உடம்பு மட்டும்)	கிரியையில் புறத் தொழிலும் அகத் தொழிலும் (உடம்பும் மனமும்)	யோகத்தில் அகத்தொழில் (மனம் மட்டும்)	ஞானத்தில் அறிவுத் தொழில் மட்டும் (உடம்பும் மனமும் கைவிட்டு)
சரியை	உழவாரப்பணி, அலகிடல், மெழுகிடல்	சிவபூசைக்கு உரிய உபகரணங்களை செய்து கொடுத்தல்	இயமம், நியமம் பிராணாயாமம் ஆசனம் ஆகிய நான்கும் பழகுதல்	ஞானநூல் பொருளை ஆசிரியரிடம் கேட்டல்
கிரியை	மகேஸ்வர மூர்த்தங்களில் ஒரு மூர்த்தியை பூசித்தல். உருவ வழிபாடு	ஐவகை சுத்தி[1] செய்து சிவலிங்க வழிபாடு	பிரத்தியா காரமும் தாரணையும் பழகுதல்	அப்பொருளை ஏது எடுத்துக் காட்டுக்களுடன் சிந்தித்தல்
யோகம்	நெஞ்சில் உருத்திர கடவுளைத் தியானித்தல்	அகத்தே பூசை, ஓமம், தியானம் மூன்றுக்கும் இடம் வகுத்து அந்திரியாக பூசை செய்தல்	தியானம் செய்தல்	அப்பொருளை விபரீதம் ஐயம் இன்றி தெளிதல்
ஞானம்	அந்தியான பாவனையின் உறைப்பால் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தல்	அந்திரியாக உணர்வால் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தல்	சமாதி கூடல்	சிவபிரானோடு பிரிப்பின்றி கலந்து நிட்டை கூடுதல்

[1] ஐவகை சுத்தி: பூதசுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி

இயமம் (விலக்கியன ஒழித்தல்):
கொல்லாமை, பொய்மை, கள்ளாமை, பிரமசரியம், உள்ளத் தூய்மை

நியமம் (விதித்தன மேற்கொள்ளல்):
சினம் கொள்ளாமை, வழிபாடு, உடல் தூய்மை, மகிழ்ச்சி, நேர்மை

பிராணாயாமம் : மூச்சுக்காற்றை ஒழுங்குபடுத்துதல்

பிரத்தியாகாரம் : புறத்தே செல்லும் கருவிகளை உள்முகமாக திருப்புதல்

தாரணை : உள்முகமாக திருப்பிய கருவிகளை அங்கேயே நிலை நிறுத்துதல்

தியானம் : பரம்பொருளை நினைத்து சிந்தித்தல்

சமாதி : சிவசிந்தனையில் ஆழ்ந்து தன்னையே மறத்தல்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

- காரைக்காலம்மையார் புராணம் (24)

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
 சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தெயெந்தை
 புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
 ஏத்த லாம்இடர் கெலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
 கியாதும் ஐயுற வில்லையே

- சுந்தரர் தேவாரம் (திருப்புகலூர்)

சிவம்
(கலப்பு)

சிவம் + சக்தி
(தாதான்மிய சம்பந்தம்)

உயிர் + சடம்
(அத்துவைத சம்பந்தம்)

உயிர் + சடம் (அத்துவைத சம்பந்தம்)	
சடத்தோடு	உயிரோடு
சாணம் ➡ சுவாமியாக	அவ்வாறே பாவிக்க
களிமண் ➡ சுவாமியாக	
கல் ➡ சுவாமியாக	
சடத்தோடு கலந்த சிவம் ஈஸ்வரம்	உயிரோடு கலந்த சிவம் மகாஈஸ்வரம்

ஆதலால்தான்,

நிழல் விழாத நண்பகலில் நீயும் நானும் ஏகபோகம் என்ற நிலையில் அடியார் உயிரோடு கலந்த சிவத்திற்கு மாகேஸ்வர பூசை செய்யப்படுகிறது.

இன்று, எனக்கு அருளி, இருள் கழந்து,
 உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
 நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று, அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, ஒன்று ஆம்
 திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்றும் நீ அல்லை அன்றி, ஒன்று இல்லை,
 யார் உன்னை அறியகிற்பாரே?

- கோயில் திருப்பதிகம் (திருவாசகம்)

பொருள்: இறைவனைத் தவிர மற்று எல்லாப் பொருளும் நீக்கத் தக்கனவேயாதலின், நீயலால் பிறிது மற்றின்மை என்றார். எல்லாப் பொருள்களையும் சிறிது சிறிதாக விடுத்துச் சென்ற உயிர், முடிவில் இறைவனை அடையுமாதலின், சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம் சிவனே என்றார். உலகில் உள்ள பொருள்களில் ஒரு பொருளும் அவன் அல்லனாகலின், ஒன்றும் நீயல்லை என்றார். ஆனாலும் ஒரு பொருளும் அவன் இயக்கமின்றித் தொழிற்படாது ஆதலில் அன்றி ஒன்றில்லை என்றார். இதனால் இறைவன் எல்லாப் பொருள்களையும் விட்டவர்களாலேயே அடையத் தக்கவன் என்பது கூறப்பட்டது.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்

வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

- திருமந்திரம்

சிவோகம் பாவனை

சிவம் + அகம் (நான்) = சிவோகம்

நீயும் நானும் ஏகபோகம்

- உலகப் பொருள்களைப் பிரித்து பிரித்து நிலையற்றது என அறிய
- அறிவின் கண்ணே ஞானத்திரளாய் விளங்கும் சிவத்தை ஆராய்ந்து
- அச்சிவம் நான் என்று பாவிக்க
- பாவிப்பவன் அறிவில் பிரிப்பின்றி சிவன் தோன்றுவான்

உ-ம்:

சூரியனை அறிய விரும்பும் கண், சூரிய ஒளியோடு கலந்து அச்சூரியனாகவே நின்று அதன் ஒளியால் அதனை அறிவதுபோல

உயிர் அறிவு

சிவபெருமான்

ஆக, உயிர் அறிவு, சிவத்தில் அடங்கி சிவமாய் நின்று சிவன் அருளாலே சிவனை அறிதல்.

ஆக,

உயிர் அறிவு,

சிவத்தில் அடங்கி

சிவமாய் நின்று

சிவன் அருளாலே

சிவனை அறிதல்

இச்சாதனத்தில் நிற்கும் முறை:

சுத்த மானதம் (அ) அறிவால் கணித்தல் என்று கூறப்படும். இதன் பயன் யாதெனில் உயிர் சிவனுக்கு அடிமை என உணர்கிறது.

பலன்: சிவபெருமானை உடையான் எனவும் அறிந்தது.

சித்தாந்த முத்தி இலக்கணம் அன்பினைத் தந்து இன்பம் பெற்று நிற்றலே	
சாதன நிலையிலும்	சீவன் முத்தி நிலையிலும்
சிவானுபவம் பெறும் பொருட்டு	சிவானுபவம் நிலைத்தல் பொருட்டு

சிவமாகத் தன்னை திருவருள் துணைக் கொண்டு பாவித்த இடத்து சிவம் தோன்றும்.

எப்போது தோன்றும்?

தான் ஒரு முதல் என்னும் உணர்வு உயிரை விட்டு நீங்கும்போது சிவம் தோன்றும். அந்நிலையில் மறைப்பாற்றல் முற்றிலும் அருளாற்றலாய் நிற்கும். அந்நிலையில்,

ஏகனாய் நிற்றல் (அறிவு நிலை)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே - சிவஞானபோதம்

இறைவன் அறிவித்தும் உடனிருந்து அறிந்தாலும் அன்றி உயிராகிய தான் அறிவதில்லை என உணர்தல்.

ஆக, யான் என ஒரு முதல் இல்லை. எல்லாம் சிவனே என தன்னை இழந்து நிற்றல்.

பலன்: யான் எனது என்ற செருக்கு அகலும். அதாவது ஆணவம் அகலும்.

இறைபணி நிற்றல் (செயல் நிலை)
எல்லாம் சிவன் செயலாக காண்டல்

விளக்கம்: வினைப்பயனை நுகரும்போது இறைவன் ஆணையால் நாம் முன் செய்த வினைக்கு பலனாக வருகிறது என உணர்ந்து பிறர் தீங்கு செய்யும் போதும் பகைக்காது அடங்கியிருத்தல்.

பலன்: ஐம்புலன் சேட்டை அடங்கும். அதாவது கன்மம் மாயை அடங்கும்.

உயிர்	செயல்
அறிவு ➡	அறிவு எனும் ஞானத்தால் சிவத்தை மறவாது நினைத்தல்
இச்சை ➡	மறவாமை காரணத்தால் அன்பு செலுத்துதல்
செயல் ➡	அன்பின் அடையாளமாக பணிதலும் (பாச நீக்கம்) பரவுதலும் (வீடுபேறு)

சிவனிடம் எப்படி அன்பு செலுத்துவது?

சிவனடியார் சிவமே ஆவார். சிவனிடம் வைத்த அன்பின் அளவு சிவனடியாரிடம் காட்டுகின்ற அன்பின் அளவாக தெரியப்படும்

ஆக,

அடியவரிடத்து அன்பிலாதார் ஈசனிடம் அன்பிலாதார் ஆவார். அடியவரிடம் காட்டும் அன்பு ஈசனுக்கும் செல்லும் மற்றும் எவ்வுயிர்க்கும் செல்லும். இதன் பயனாக தன்னுயிர்க்கும் நிலைத்த இன்பத்தைத் தரும்.

அடியாரைக் கண்டபோது செய்யத் தக்கது யாது?

அவரது உயர்வையும் தன்னுடைய இழிவையும் எண்ணி நாணிப் பணிவது.

இனிய மொழிபேசி, கும்பிட்டு கொண்டாடி அவர் பணியை தம் பணியாக செய்தல். அப்படி தாம் செய்யும் பணியை சிவப்பணியாக கருதி செய்ய வேண்டும்.

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
 திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
 உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
 இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
 கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

- அப்பர் பெருமான்

பொருள்: நெற்றியில் திருநீறு அணிந்து உருத்திராக்கம் பூண்டு வந்தவரைக் கண்டால், அவர் எவரேயாயினும் அவரது குற்றங்களைக் காணாமல், அவரைக் கண்டபோதே உளம் மகிழ்ந்து இறைவனை வழிபடுதல் போன்று அடியவரைத் தொழுதல் வேண்டும். அப்படித் தொழுவார் நெஞ்சத்து இறைவனைக் காணலாம். திருவேடம் உடையாரைச் சிவன் எனத் தெளிந்து அவரை வழிபடுதலில் சிறிதும் பிறழாது இருத்தல் வேண்டும்.

இதன் பலன், பாசப்பற்று நீங்கி வீடுபேறு திருவேடம் சிவன் உருவே ஆகும்.

அறிவு அரியான் தனை அறிய யாக்கை ஆக்கி
அங்கு அங்கே உயிராக்குயிராய் அறிவுபொடுத்து அருளால்
செறிதலினால் திருவேடம் சிவம் உருவே ஆகும்
சிவோகம்பா விக்கும் அத்தால் சிவனும் ஆவர்
குறியதனால் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினால் அரன் ஆவர் குறியொடுதாம் அழியும்
நெறியதனால் சிவமேயாய் நின்றிடுவர் என்றால்
நேசத்தால் தொழுதிடு நீ பாசத்தால் விடவே

- சிவஞான சித்தியார் (324)

வெறித்த கொன்னை முடியார்தம்
அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா
தொழிந்தான் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவானை
வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத்
தாமே அவர்தான் விளக்கினார்

-பெரியபுராணம் (கலிக்கம்ப நாயனார்)

மறைப்பாற்றல் (திரோதான ஆதிசக்தி) ஏன் தேவை?

- உயிருக்கு ஆணவம் மெய்உணர்வு தோன்றாது தடுக்கிறது.
- இவை உயிரின் குற்றம்
- மலத்தின் வலிமை தேய
  உலகப்பொருள்களின் குற்றம் உயிருக்கு தெரியாமல் மறைத்து நிற்கும் திரோதானம்
- மறைக்கவில்லையெனில் உயிருக்கு அனுபவம் நிகழாது
- அனுபவம் நிகழவில்லை என்றால் மலம் தேயாது
- மலம் தேயவில்லை என்றால் பக்குவம் விளையாது
- பக்குவம் இல்லையென்றால் ஞானம் நிகழாது
- ஞானம் நிகழவில்லை என்றால் வீடுபேறு நிகழா.

ஆக, திரோதானம் ஆணவமலத்தில் நின்று உயிர் அனுபவிக்கும் மோகம் முதலான குற்றங்களை தொழிற்படுத்த வேண்டியதாயிற்று.

இதைத் தவிர்க்க,

இருவினை ஒப்பு
மலவினைக் கெடும் (மலபரிபாகம்)
அந்நிலையில் பக்குவம் வந்தபின்னர் மறைப்பாற்றல் அருள் சக்தியாக மாறும்

பக்குவ காலம் (அ) பருவம்:

அறிவித்ததை அறிவித்தவாறே அறியும் ஆற்றல் வரும் காலம் உலகப் பொருள் யாவும் அழிவனவே. அவற்றால் உறுதிபெறல் நிகழாது.

கானல் நீரால் தாகம் தணியாது போல

ஆசைதரும் உலகமெல்லாம் அலகைத்தேர்.

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப், பாத
நீழல் கீழ் நில்லாதே நீங்கிப் போதின்,
ஆசைதரும் உலகம் எலாம் அலகைத்தேராம் என்று
அறிந்து அகல, அந்நிலையே ஆகும்; பின்னும்
ஓசைதரும் அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனம் எலாம் ஓட

- சிவஞான சித்தியார் (292)

பிறத்தல்: தூல உடம்பில் உயிரை பொருத்துதல்

வாழ்தல்: தூல உடம்பில் சிலகாலம் நிலைபெறுதல்

இறத்தல்: தூல உடம்பை விட்டு உயிர் நீங்குதல்

முத்தியில்,
ஆணவம் - ஆற்றல் இழந்து நிற்கும்
திரோதானம் - அருளாய் நின்று ஆனந்தம் நுகர்விக்கும்
கன்மம், மாயை, மாயேயம் } ஆதிசக்தியில் ஒடுங்கி அருளாய் நிற்கும்

வியாபகம்	
முழு நிறைவு பூரண வியாபகம்	
பதி	
சொருபம்	தடத்தை
சத்து சித்து ஆனந்தமாய் நிற்றல்	ஐந்தொழில்
உண்மை அறிவு இன்பமாய் நிற்றல்	உயிர்களோடு ஒன்றாய் உடனாய் வேறாய்

வியாப்பியம்	
ஏகதேசம் = பகுதி நிறைவு (ஒரு எல்லையில் அடங்கியிருப்பது)	
உயிர் (சார்ந்த பொருள் அளவில் வியாபித்து இருத்தல்)	
சொருபம்	தடத்தம்
சிவமாய் நிற்றல் (கருவி கரணங்களில் நின்றும் நீங்கி)	கருவி கரணங்களில் கூடி நிற்றல்
கட்டு நீங்கிய நிலை. மாறிலா மகிழ்ச்சியில் மலர்தல்	கட்டுண்ட நிலை ஐந்து அவத்தை படுதல்

வியாத்தி	
சம அளவில் வியாபகம்	
ஆணவம் (உயிரோடு சம அளவில்)	
சொருபம்	தடத்தம்
முழு அறியாமை உயிர்க்கு செய்தல்	விபரீத உணர்வை செய்தல்

கன்மம்	
சொருபம்	தடத்தம்
இறைவனின் கிரியா சக்திக்குள் அடங்கி அவனையே சார்ந்து நிற்றல்	விருப்பு வெறுப்பால் உயிர்கள் இருவினை இயற்றல்

மாயேயம்

சொரூபம்	தடத்தம்
இறைவனின் வைப்பு சக்தியாம் மாயையில் அடங்கி நிற்றல்	வினை ஈட்டவும் வினைப் பயனை நுகரவும் துணையாய் நிற்றல்

திரோபாவம் (அ) திரோதானம்

சொரூபம்	தடத்தம்
இருவினை ஒப்பு வருவித்த பின் அருளாய் பதிந்து சிவத்தை காட்டி நிற்றல்	இருவினை ஒப்பு வரும் வரை உலகைக் காட்டி நிற்றல்

மாயை

சொரூபம்	தடத்தம்
உயிர் அறிவை சற்று விளக்கி நிற்றல்	உடலையே உயிராக மயங்கச் செய்தல்

இறை வியாபகம்:

சிவம் - அனைத்தையும் கடந்து

சக்தி - அனைத்திலும் கலந்து

ஞானம் - பதி பசு பாசம் உள்ளபடி அறிதல்

போதம் - தள்ள வேண்டியதை தள்ளி கொள்ள வேண்டியதை கொள்ளும் வழி ஒழுகுவதே போதம்

பதி பசு பாசம்:

பதி - முழுமுதல் கடவுள்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலலொம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே - திருவிசைப்பா (184)

பசு - எண்ணற்ற உயிர்கள் (சேதனப் பிரபஞ்சம்)

பாசம் -
1. ஆணவம்
2. கன்மம்
3. மாயை
4. மாயேயம்

(1–4) அசேதனப் பிரபஞ்சம்

5. மறைப்பாற்றல் → திருவருள் கூறு

ஆணவம் : ஒன்று... ஆற்றல் பல. பதியின் பகை (மாறுதலை). உயிரின் எல்லா கேட்டிற்கும் காரணம் (அணுத்தன்மையைச் செய்வது). ஆணவம் உயிரிடத்து சம அளவில் வியாபித்து இருக்கும். கூடினால் தீர்தல் ஆகாது. குறைந்தால் திருவருள் வேண்டப்படாது.

கன்மம் : நல்வினை, தீவினை

மாயேயம் : தனு, கரண, புவன, போகம் (மாயையின் காரியம்)

மறைப்பாற்றல்:

ஆதிசக்தி, மலங்களை தொழிற்படுத்தி மலத்தின் வலிமை குறையும்படி செய்யும்.

- மாயேயம் மாயையில் ஒடுங்கும்
- மாயை மறைப்பாற்றலில் ஒடுங்கும்
- மலத்தை தொழில் படுத்துவதால் இதை ஆணவத்தில் அடக்கிக் கூறுவர்.
- மறைப்பாற்றலை உபசார மலமாகக் கூறுவர்

பதி பசு பாசம் - எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினை சென்று அணுகா பசு, பாசம்
பதி அணுகின் பசு, பாசம் நில்லாவே - திருமந்திரம் (115)

பொருள்: பதியாகிய இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் ஆவான். பசுவாகிய ஆன்மாக்களும் பாசம் எனப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ஆதி அந்தம் அற்றவை ஆகும். பசுவாகி ஆன்மாக்களும், பாசமாகிய மலங்களும் பதியினைச் சென்று அணுக முடியாது. அவை சேரும் இடம் தெரியாமல் பிரபஞ்சம் முழுவதும் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் ஆனால் பதியாகிய இறைவன் அருள்கூர்ந்து பசுவை அணுகினால் பசுவின் மலம் நீங்க, ஆன்மா இறையுடன் கலக்கும்.

மெய்கண்டார் அத்துவைதம்:

உலகு, உயிர்களோடு

- கலப்பினால் ஒன்றாயும்
- பொருள் தன்மையால் வேறாயும்
- உயிருக்கு உயிராதல் தன்மையால் உடனாயும்

பதி இலக்கணம்:

- அனாதி முத்த சித்துவுரு
- பதி ஞானத்தால் மட்டும் அறியப்படுவது
- பிரிதொன்றில் தோயாது தன்னையே நோக்கி ஞானத்திரளாய் உள்ள நிலை சிவம்
- உயிரோடு சடத்தோடு பிரிப்பின்றி அத்துவிதமாய் கலந்தநிலை சக்தி
- ஐந்தொழில் – பதி

...பதி இலக்கணம்:

- தோற்றக் கேடு இல்லாத உள்பொருள்
- அனைத்திற்கு ஆதாரமான அன்புபொருள்
- தான் எல்லாவற்றிலும் ஊடுருவி கலந்தாலும் தன்னை எதுவும் ஊடுருவி கலக்க முடியாத செம்பொருள்
- நினைத்தார்க்கு வினை தீர்ந்து இன்பம் தருவார். நினையார்க்கு மறக்கருணையால் ஆட்கொள்ளல்
- எட்டு குணம்

இறைவன் திருமேனி:

சொரூபம் : எண்குணம் நிரம்பிய அறிவுத் திருமேனி (ஞானத் திரள்)

தடத்தை : அருவம் அருவுருவம் உருவம்

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே -

- சித்தியார் (75)

பசு இலக்கணம்:

- அனாதி பெத்த சித்துவுரு
  - பெத்த - அறிவு விளங்காததாய் கொள்ள
  - சித்துவுரு - அறிவுடைய பொருள்
- அறிவித்தால் அறியும்
- சார்ந்ததாம் தன்மை
- ஏகதேச வியாபகம் (இறை வியாபகத்தில் அடங்கி வியாப்பியமாய்)
- கட்டு, முத்தி நிலை இரண்டிலும் இறைவனை பிரிய முடியாது
- பேரின்பம் எய்தும் உரிமை உடையது
- சதசத்து

ஒன்றை பற்றினால் மற்றொன்றை பற்றாது என்பது இலக்கணம். கீழ் உள்ள பாச உலகத்தைக் கண்டு பற்றிவிட்டாலன்றி மேல் உள்ள சிவ உலகத்தைக் கண்டு பற்றுதல் இயலாது.

உயிரின் விரிவாக்கம் (பரிமாணம்) - வியாபகம்.

ஆன்மா : வியாபகம் என்று பொருள்

சமணம் : உயிர் விரிந்து சுருங்கும் தன்மை

சைவம் : சடம் மட்டுமே விரிந்து சுருங்கும் (மாயை)

உயிர் உடம்பு அளவாய் நிற்கும் என்றால்,
பெரிய உடம்பு - பெரிய அறிவு
சிறிய உடம்பு - சிற்றறிவு என்று ஆகிவிடும்

உயிர் உடம்பில் அணுவாய் நிற்கும் என்றால்,
உடம்பில் உள்ள துவாரம் வழியே ஓடிவிடும்

சைவம்: எல்லா பொருளும் நித்தமாயும் வியாபகமாகவும் உள்ளவை.

ஆக உயிர்,
இறை வியாபகத்தில் அடங்கி கீழ் இருக்கும்.

பாச இலக்கணம்:

ஆணவம் இயற்கை, கன்மம், மாயை இறை அருளியது.

ஆணவம் (மூலமலம்): உயிருக்கு அணுத் தன்மையைச் செய்வது

சகச மலம்: சக - உடன் ஜம் - தோன்றியது. உயிருக்கு இயற்கையாக உள்ள குற்றம்

கன்மமும், மாயையும் உயிருக்கு பின்பு தோன்றுகின்றன.

உ-ம்:

புதிய ஆடை நெய்யும்போது கஞ்சி முதலிய அழுக்கோடுதான் தோன்றும் - இயற்கை (ஆணவம்)

வெளுப்பவன் உவர்மண், சாணம் சேர்க்கிறான் - செயற்கை (கன்மம், மாயை)

வெளுக்கும் போது இயற்கையும் செயற்கையும் நீங்கும் (பக்குவம்)

கடவுளை மட்டுமல்ல அவன் உறையும் கோயிலைக் கூட மனிதனைப் போலவே அமைத்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே

- திருமந்திரம்

திரு + கோ + இல் = திருக்கோயில்

அருள் + இறை + இடம்

இறையருள் சுரக்கும் இடம்

பாசங்களை நீக்கி உயிர் சிவத்தோடு கலக்கும் இடம்

கோயில்		
அமைப்பு	ஆராதனை	தரிசனம்
அடியார் அறிவைப் பெருக்கும்	அடியார் இச்சையைப் பண்படுத்தும்	ஆன்ம செயல் முன்னேற்றம்

1. அமைப்பு

சந்நியாசியின் கிடந்தகோலம்

சத்து + யாசி = சந்நியாசி

பரம் + தேசி = பரதேசி



பாதங்கள்	:	கோபுரம்
தொப்புள்	:	பலிபீடம்
மார்பு	:	மகாமண்டபம்
கழுத்து	:	அர்த்தமண்டபம் (கர்ப்பகிரக மண்டபம்)
சிரம்	:	கர்ப்பக்கிரகம்
செவி (வலது)	:	தட்சிணாமூர்த்தி
செவி (இடது)	:	சண்டேஸ்வரர்
இதயம்	:	நடராசர்
புருவமத்தி	:	லிங்கம்
தலை உச்சி	:	விமானம்

மூலவர்:



தகட்டில் ஐந்தெழுத்து பதித்த திருஅம்பலச் சக்கரம்

இயந்திரம் இல்லாத வாகனம் பயன்படாது......... இயந்திரம் இல்லாத கல் மூர்த்தியாகாது

ஆக, இரும்பு காந்தமாவது போல் சடமாகிய தகடு ஆற்றல் உடையதாகி மந்திரம், முத்திரை பாவனையாலும் உரிய கிரியையாலும் உரு ஏறுகிறது.

இயந்திரத் தகடு:

இறைவன் அருட்கருவியாக மாறி எட்டுத் திசையும் இடைவிடாது அருள் சக்தியை வெளிப்படுத்தி கொண்டேயிருக்கும்.

உடம்பு நடமாடும் கோயில்
ஆன்மா உடம்பில் இல்லையென்றால் சடம்.

பதி

பசு
(அதிகார நந்தி
ஆன்ம நந்தி)

பாசம்
கொடிமரம்

பசு உலகமாகிய கொடியை நோக்காமல்,
பதியை நோக்க பேரின்பம் கிட்டும்

விக்ரகங்கள் கருங்கல்லில் அமைப்பதன் தத்துவம்:
கல்லில் பஞ்சபூதங்களின் தன்மை விசேடமாக அமைந்திருந்து வெளிப்படுவது போல

பஞ்ச பூதங்கள்	விளக்கம்
ஆகாயம்	வெளியில் உள்ள சத்தத்தை இழுத்து வெளிவிடும்.
காற்று	கல்லிலே காற்று உண்டு என்பதால் தேரையும் வசிக்கும்.
நெருப்பு	நெருப்பின் சக்தி மிகுதி
நீர்	கல்லைத் தொட்டால் அதிகாலை தண்ணென இருக்கும்.
நிலம்	நிலம் என்ற பூதமும் கல்லிடத்து உண்டு.

2. ஆராதனை முறை

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடினவர்க்கு வார்த்தை சொல்ல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே - தாயுமானவர்

அருளாளர்கள் கோயில் எழுப்பும் போது,

1. மூர்த்தி
2. தலம்
3. தீர்த்தம் - பிறவி துயர் கெடுக்கும்
(ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்)
4. தல விருக்ஷம் - நோய் தீர்க்கும்

அடியார்கள்

தலயாத்திரை
தீர்த்த யாத்திரை
(தீர்த்தவாரி)
→
சரியை
கிரியை
யோகம் கிட்டும்
↓
ஞானம்
↓
சற்குரு
வாய்க்கும்
பராபரமே

மாணிக்கவாசகர் ஞான ஆசிரியரை உத்தரகோச மங்கையில் ‘சிக்கெனப் பிடித்தேன்’ என்கிறார்.

தீப ஆராதனை:

அடுக்கு தீபம்:
ௐ இறைவன் அனேகன்.

ஒற்றை தீபம்:
ௐ இறைவன் ஏகன்

5 முக தீபம்:
ௐ பஞ்சபூதங்களைக் குறிக்கும்.
ௐ ஐந்தெழுத்து வழியே இறைவனை அடையலாம்.

குத்துவிளக்கு		
தாமரை போன்ற ஆசனம்	பிரம்மம்	படைக்கும் சக்தி
நெடிய தண்டின் நீட்சி	விஷ்ணு	காக்கும் சக்தி
நெய் ஏற்றும் அகல்	ருத்திரன்	ஒடுக்கும் சக்தி
திரிமுனைகள்	மகேஸ்வரர்	மறைக்கும் சக்தி
நுனி	சதாசிவம்	இச்சாசக்தி
நெய்	நாதம்	ஞானசக்தி
திரி	விந்து	கிரியாசக்தி
சுடர்	திருமகள்	அருள்சக்தி
சோதி	சக்திபிரம்மம்	ஆதிசக்தி

3. தரிசனம்

குண்டலினி (5 தலை நாகம்): அன்று முதல் இன்றுவரை 5 தலை பாம்பு விக்ரக வழிபாடு உண்டு.

கொடிமரம்: அருள் ஏற ஏற ஆணவம் இறங்கும். உயிர் (நந்திக்கொடி) ஆன்ம நந்தி மேலே உள்ள சிவத்தோடு சேரும் இடம்.

ஆணுக்கு இடகலை இடப்பக்கமும் பெண்ணுக்கு வலப்பக்கமும் முதுகுத் தண்டின் அடியிலிருந்து மேலேறுவதாகும்.

ஆக, கொடிமரம் ஏறுவது போல் அல்லாது வளைந்து வளைந்து சுத்தியே ஏறும்.

அதாவது, கொடிப் பட்டம் சுற்றி ஏற்றுவது போல நாபி, வயிறு, இதயம், கழுத்து, நெற்றி என ஐந்து சக்கரங்களில் சீறி வெளி இளம்பும்.

சித்தர்கள் பிடித்து ஆட்டும் பாம்பு இதுதான்.

அதனால்தான், ஆண் பெண் வழிபடும் போது இடகலையை இறைவனிடம் திருப்பி நின்று வழிபடுவர். ஆணுக்கு இடது பக்கம், பெண்ணுக்கு வலது பக்கம்.

கும்பிடும் முறை

நின்று கும்பிடுவது: இறைவனுக்கும் குருநாதருக்கும் மட்டும் தலைக்கு மேல் கரம் குவித்து வணங்க வேண்டும்

கரம் குவிவார் உள்மகிழும்
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் - திருவாசகம்

அடியாரை வணங்குதல்: நேருக்கு நேர் சிரம் குனிந்து நெஞ்சுக்கு நேர் கரம் குவித்து வணங்க வேண்டும்

தாயை வணங்குதல்: தாயை வணங்கும்போது குடியிருந்த கோயிலாகிய அம்மாவின் வயிற்றை வணங்குவது. வயிற்றில் இருகரம் குவித்து வணங்க வேண்டும்.

கொடிமரம் அருகில் விழுந்து கும்பிடும் முறை:

ஆண்		பெண்	
அட்டாங்க வணக்கம்		பஞ்சாங்க வணக்கம்	
தலை	1	தலை	1
செவிகள்	2	கைகள்	2
கைகள்	2	முழந்தாள்	2
தோள்கள்	2		
மேல்வாய் கட்டு	1		

இந்த வழிபாட்டால், இருதயத் துடிப்பும், இரத்த ஓட்டமும், உடல் தூய்மையும் ஏற்படும்.

பத்து நாள் திருவிழா:

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
1	மரத்தடியில் விருஷப வாகனம்	கிளை, இலை தத்துவம்	படைத்தல்
2	சூரிய சந்திர பிரபைகளில்	இருளில் இருந்து மீட்டல்	காத்தல்

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
3	காலை: அதிகாரநந்தி மாலை: பூத வாகனம்	சங்காரத்தின் அடையாளம்	ஒடுக்குதல்
4	நாக வாகனம்	நாகம், நஞ்சு, மாணிக்கத்தையும் மறைத்து வைத்தல். வேண்டும் போது விடல்.	மறைப்பாற்றல்

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
5	இடப வாகனம்	அருள்பெற்ற ஆன்மா ரிஷபமாகும். (மாணிக்கவாசகர் ரிஷபத்தில்) வெள்ளை நிறம் - சுத்தம் நான்கு கால் - அறம்	அருளாற்றல்

நாள்	வாகனம்	தத்துவம்
6	யானை வாகனம்	உலகப் பொருள்கள் அனைத்தும் இறைவனிடத்தில் ஒடுங்கும்
7	கைலாய பர்வத வாகனம்	இறைவனுக்கு தீங்கு செய்தார்க்கு அருளல்
8	காலையில் அசுவ வாகனம் மாலையில் பிச்சாடனர்	திரோபாவமாக மறைப்பு

உ-ம்:

புதிய ஆடை நெய்யும்போது கஞ்சி முதலிய அழுக்கோடுதான் தோன்றும் - இயற்கை (ஆணவம்)

வெளுப்பவன் உவர்மண், சாணம் சேர்க்கிறான் - செயற்கை (கன்மம், மாயை)

வெளுக்கும் போது இயற்கையும் செயற்கையும் நீங்கும் (பக்குவம்)



கடவுளை மட்டுமல்ல அவன் உறையும் கோயிலைக் கூட மனிதனைப் போலவே அமைத்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே

- திருமந்திரம்

திரு + கோ + இல் = திருக்கோயில்

அருள் + இறை + இடம்

இறையருள் சுரக்கும் இடம்

பாசங்களை நீக்கி உயிர்
சிவத்தோடு கலக்கும் இடம்

கோயில்		
அமைப்பு	ஆராதனை	தரிசனம்
அடியார் அறிவைப் பெருக்கும்	அடியார் இச்சையைப் பண்படுத்தும்	ஆன்ம செயல் முன்னேற்றம்

1. அமைப்பு

சந்நியாசியின் கிடந்தகோலம்

சத்து + யாசி = சந்நியாசி

பரம் + தேசி = பரதேசி



பாதங்கள்	:	கோபுரம்
தொப்புள்	:	பலிபீடம்
மார்பு	:	மகாமண்டபம்
கழுத்து	:	அர்த்தமண்டபம் (கர்ப்பகிரக மண்டபம்)
சிரம்	:	கர்ப்பக்கிரகம்
செவி (வலது)	:	தட்சிணாமூர்த்தி
செவி (இடது)	:	சண்டேஸ்வரர்
இதயம்	:	நடராசர்
புருவமத்தி	:	லிங்கம்
தலை உச்சி	:	விமானம்

மூலவர்:

இயந்திரத் தகடு:

இறைவன் அருட்கருவியாக மாறி எட்டுத் திசையும் இடைவிடாது அருள் சக்தியை வெளிப்படுத்தி கொண்டேயிருக்கும்.

உடம்பு நடமாடும் கோயில் ஆன்மா உடம்பில் இல்லையென்றால் சடம்.

தகட்டில் ஐந்தெழுத்து பதித்த திருஅம்பலச் சக்கரம்

இயந்திரம் இல்லாத வாகனம் பயன்படாது......... இயந்திரம் இல்லாத கல் மூர்த்தியாகாது

ஆக, இரும்பு காந்தமாவது போல் சடமாகிய தகடு ஆற்றல் உடையதாகி மந்திரம், முத்திரை பாவனையாலும் உரிய கிரியையாலும் உரு ஏறுகிறது.

பதி

பசு

(அதிகார நந்தி ஆன்ம நந்தி)

பாசம்

கொடிமரம்

பசு உலகமாகிய கொடியை நோக்காமல்,
பதியை நோக்க பேரின்பம் கிட்டும்

விக்ரகங்கள் கருங்கல்லில் அமைப்பதன் தத்துவம்:
கல்லில் பஞ்சபூதங்களின் தன்மை விசேடமாக அமைந்திருந்து வெளிப்படுவது போல

பஞ்ச பூதங்கள்	விளக்கம்
ஆகாயம்	வெளியில் உள்ள சத்தத்தை இழுத்து வெளிவிடும்.
காற்று	கல்லிலே காற்று உண்டு என்பதால் தேரையும் வசிக்கும்.
நெருப்பு	நெருப்பின் சக்தி மிகுதி
நீர்	கல்லைத் தொட்டால் அதிகாலை தண்ணென இருக்கும்.
நிலம்	நிலம் என்ற பூதமும் கல்லிடத்து உண்டு.

2. ஆராதனை முறை

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடினவர்க்கு வார்த்தை சொல்ல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே - தாயுமானவர்

அருளாளர்கள் கோயில் எழுப்பும் போது,

1. மூர்த்தி
2. தலம்
3. தீர்த்தம் - பிறவி துயர் கெடுக்கும்
(ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்)
4. தல விருக்ஷம் - நோய் தீர்க்கும்

அடியார்கள்

தலயாத்திரை / தீர்த்த யாத்திரை (தீர்த்தவாரி) → சரியை / கிரியை / யோகம் கிட்டும் → ஞானம் → சற்குரு வாய்க்கும் பராபரமே

மாணிக்கவாசகர் ஞான ஆசிரியரை உத்தரகோச மங்கையில் 'சிக்கெனப் பிடித்தேன்' என்கிறார்.

தீப ஆராதனை:

அடுக்கு தீபம்:
ௐ இறைவன் அனேகன்.

ஒற்றை தீபம்:
ௐ இறைவன் ஏகன்

5 முக தீபம்:
ௐ பஞ்சபூதங்களைக் குறிக்கும்.
ௐ ஐந்தெழுத்து வழியே இறைவனை அடையலாம்.

குத்துவிளக்கு		
தாமரை போன்ற ஆசனம்	பிரம்மம்	படைக்கும் சக்தி
நெடிய தண்டின் நீட்சி	விஷ்ணு	காக்கும் சக்தி
நெய் ஏற்றும் அகல்	ருத்திரன்	ஒடுக்கும் சக்தி
திரிமுனைகள்	மகேஸ்வரர்	மறைக்கும் சக்தி
நுனி	சதாசிவம்	இச்சாசக்தி
நெய்	நாதம்	ஞானசக்தி
திரி	விந்து	கிரியாசக்தி
சுடர்	திருமகள்	அருள்சக்தி
சோதி	சக்திபிரம்மம்	ஆதிசக்தி

3. தரிசனம்

குண்டலினி (5 தலை நாகம்): அன்று முதல் இன்றுவரை 5 தலை பாம்பு விக்ரக வழிபாடு உண்டு.

கொடிமரம்: அருள் ஏற ஏற ஆணவம் இறங்கும். உயிர் (நந்திக்கொடி) ஆன்ம நந்தி மேலே உள்ள சிவத்தோடு சேரும் இடம்.

ஆணுக்கு இடகலை இடப்பக்கமும் பெண்ணுக்கு வலப்பக்கமும் முதுகுத் தண்டின் அடியிலிருந்து மேலேறுவதாகும்.

ஆக, கொடிமரம் ஏறுவது போல் அல்லாது வளைந்து வளைந்து சுத்தியே ஏறும்.

அதாவது, கொடிப் பட்டம் சுற்றி ஏற்றுவது போல நாபி, வயிறு, இதயம், கழுத்து, நெற்றி என ஐந்து சக்கரங்களில் சீறி வெளி கிளம்பும்.

சித்தர்கள் பிடித்து ஆட்டும் பாம்பு இதுதான்.

அதனால்தான், ஆண் பெண் வழிபடும் போது இடகலையை இறைவனிடம் திருப்பி நின்று வழிபடுவர். ஆணுக்கு இடது பக்கம், பெண்ணுக்கு வலது பக்கம்.

கும்பிடும் முறை

நின்று கும்பிடுவது: இறைவனுக்கும் குருநாதருக்கும் மட்டும் தலைக்கு மேல் கரம் குவித்து வணங்க வேண்டும்

கரம் குவிவார் உள்மகிழும்
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் - திருவாசகம்

அடியாரை வணங்குதல்: நேருக்கு நேர் சிரம் குனிந்து நெஞ்சுக்கு நேர் கரம் குவித்து வணங்க வேண்டும்

தாயை வணங்குதல்: தாயை வணங்கும்போது குடியிருந்த கோயிலாகிய அம்மாவின் வயிற்றை வணங்குவது. வயிற்றில் இருகரம் குவித்து வணங்க வேண்டும்.

கொடிமரம் அருகில் விழுந்து கும்பிடும் முறை:

ஆண்		பெண்	
அட்டாங்க வணக்கம்		பஞ்சாங்க வணக்கம்	
தலை	1	தலை	1
செவிகள்	2	கைகள்	2
கைகள்	2	முழந்தாள்	2
தோள்கள்	2		
மேல்வாய் கட்டு	1		

இந்த வழிபாட்டால், இருதயத் துடிப்பும், இரத்த ஓட்டமும், உடல் தூய்மையும் ஏற்படும்.

பத்து நாள் திருவிழா:

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
1	மரத்தடியில் விருஷப வாகனம்	கிளை, இலை தத்துவம்	படைத்தல்
2	சூரிய சந்திர பிரபைகளில்	இருளில் இருந்து மீட்டல்	காத்தல்

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
3	காலை: அதிகாரநந்தி மாலை: பூத வாகனம்	சங்காரத்தின் அடையாளம்	ஒடுக்குதல்
4	நாக வாகனம்	நாகம், நஞ்சு, மாணிக்கத்தையும் மறைத்து வைத்தல். வேண்டும் போது விடல்.	மறைப்பாற்றல்

நாள்	வாகனம்	தத்துவம்	தொழில்
5	இடப வாகனம்	அருள்பெற்ற ஆன்மா ரிஷபமாகும். (மாணிக்கவாசகர் ரிஷபத்தில்) வெள்ளை நிறம் - சுத்தம் நான்கு கால் - அறம்	அருளாற்றல்

நாள்	வாகனம்	தத்துவம்
6	யானை வாகனம்	உலகப் பொருள்கள் அனைத்தும் இறைவனிடத்தில் ஒடுங்கும்
7	கைலாய பர்வத வாகனம்	இறைவனுக்கு தீங்கு செய்தார்க்கு அருளல்
8	காலையில் அசுவ வாகனம் மாலையில் பிச்சாடனர்	திரோபாவமாக மறைப்பு

நாள்	வாகனம்	தத்துவம்
9	தேர் திருவிழா	திரிபுர சம்காரம். மும்மல அழிப்பு
10	தீர்த்தவாரி தீர்த்தவாரி வாகனம்	சபையை விட்டு வருவது

10ம் திருநாளில் இரண்டு பகுதியாக நடத்தப் பட்ட ஐந்தொழில்களையும் ஒரே நாளில் தொகுத்துக் காட்டப்படுகிறது.

தீர்த்தவாரி: பொங்கி ததும்பி பூர்ணமாய் ஏக உருவாய் இருக்கும் இறைவனின் பாதவாரியில் ஆன்மாக்கள் முற்றும் ஆழ்ந்து பேரின்பத்தில் இருப்பதைக் குறிக்கும்

திருக்கல்யாண திருவிழா:

இறைவன் வடிவம்-3:

வேக வடிவம் : தீமைகளை ஒடுக்க
யோக வடிவம் : ஞானம் வழங்க
போக வடிவம் : போகம் வழங்க

யோக வடிவம்:

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னாற்பொற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவ னென்பர்

- சித்தியார் (70)

நம் தாய் தந்தையர் திருமணம் செய்து போகியாய் வாழாமற்போனால் நாம் பிறந்திருக்க முடியாது. இறைவன் போகியாக இல்லாமல் போனால் உலக உயிர்களும் போகியாய் வாழாமற்போகும்.

ஆக, இறைவனுக்கு நடக்கும் திருமணம் நம் பொருட்டே ஆகும். நம் பெற்றோர் திருமணத்தை கண்டதில்லை. 60ம் ஆண்டு திருமணம் செய்து கண்டு களிக்கிறோம். அதுபோல்.

உத்தரகோசமங்கையில் ஸ்ரீமங்கலநாயகி தவம் இருந்து இறைவனை அடைந்தாள். தவம் இயற்றுவார் இறைவனை அடைவார்.

பள்ளி அறை:

காலையில் இருந்து இரவு வரை பிரித்துவைத்து இரவில் அம்பாளோடு சேர்த்து வைத்து (திருவடி மட்டும்) வழிபடுவர்.

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தா கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார் வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ

- திருவாசகம் (16)

இவ்வழிபாடு சக்தி வேறு சிவம் வேறு என்று பிரித்து வழிபடக்கூடாது என்பதை உணர்த்துதல்

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

- போற்றித் திருவகவல்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

- ஔவையார்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

- சிவஞானபோதம் (12ம் சூ)

அருள் உபதேசங்கள்

திருமூலர் அருளிய

திருமந்திரம்

திருமந்திரம்

திருமூலர் இட்ட பெயர்:

மந்திரமாலை

தொட்ட இடமெல்லாம்
தித்திக்கும் தேன்குடம்

பரம்பரை	
கைலாயப் பரம்பரை	நந்தியம்பரம்பரை
சிவம்	சிவம்
	நந்தி
சனகர் சனாதனர் சனந்தனர் சனற்குமாரர்	பதஞ்சலி வியாக்கரபாதர் திருமூலர் சிவயோகமாமணி

ஆசிரியர்: இயற்பெயர்: சுந்தரன்
நந்தி சூட்டியது: நாதன்

சுந்தரநாதன்

திருமூலர்: திரு + மூலன் + ஆர் = திருமூலர்
திரு என்ற அடைமொழி +
மூலன் உடம்பெடுத்து +
ஆர் விகுதி பெற்ற யோகி.

திருமூலர்

மூலன்: குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல
னாகின்ற வங்கணனே

- திருத்தொண்டர் திருந்தாதி (11.33.37)

பெரியபுராணம்:
(கயிலையில் இருந்து சாத்தனூர் வருகை)
மன்னு திருக் கேதாரம்
வழிபட்டு மாமுனிவர்
பன்னு புகழ்ப் பசுபதி
நேபாளத்தைப் பணிந்து ஏத்தித்
துன்னு சடைச் சங்கரனார்
ஏற்ற தூநீர்க் கங்கை
அன்ன மலி அகன் துறைநீர்
அருங்கரையின் மருங்கு அணைந்தார்

சாத்தனூர் (மூலன் உடல் பெறுதல்):
அங்கு பசுக்கள் -

இவன் உயிர் பெற்று எழில் அன்றி
ஆக்கள் இடர் நீங்கா என்று
அவன் உடலில் தம் உயிரை
அடைவிக்க அருள்புரியும்
தவ முனிவர் தம் உடம்புக்கு
அரண் செய்து தாம் முயன்ற
பவன வழி அவன் உடலில்
தம் உயிரைப் பாய்த்தினார்

திருமூலராய் எழுதல்:

பாய்த்திய பின் திரு மூலராய்
எழலும் பசுக்கள் எலாம்
நாத் தழும்ப நக்கி மோந்து
அணைந்து கனைப் பொரு நயந்து
வாய்த்து எழுந்த களிப்பினால்
வால் எடுத்துத் துள்ளிப்பின்
நீத்த துயரினவாகி நிரைந்து
போய் மேந்தனவால்

(இறைவனிடம் உத்தரவு பெறாமல் உடல் மாறியதால் திருவருளால் உடல் மறைந்தது)

திருவாவடுதுறை தரிசனம்:
(நவகோடி சித்தர்புரம்)

ஆவடு தண் துறை அணைந்து அங்கு
அரும் பொருளை உறவணங்கி
மேவுவார் புறக் குடபால் மிக்கு
உயர்ந்த அரசின் கீழ்த்
தேவிருக்கை அமர்ந்து அருளிச்
சிவயோகம் தலை நின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும்
உணர்ந்து இருந்தார்

திருமந்திரமாலை "ஒன்றவன்தான்" என எடுத்தல்: (உலகத்தோர் உய்ய எடுத்தல்)

ஊன் உடம்பில் பிறவிவிடம்
தீர்ந்து உலகத்தோர் உய்ய
ஞானம் முதல் நான்கு மலர்
நல் திரு மந்திரமாலை
பான்மை முறை ஓர் ஆண்டுக்கு
ஒன்றாக பரம் பொருளாம்
ஏன எயிறு அணிந்தாரை
ஒன்றவன்தான் என எடுத்து

மீண்டும் திருவாவடுதுறை -> கையிலை:

முன்னிய அப் பொருள் மாலைத்
தமிழ் மூவாயிரம் சாத்தி
மன்னிய மூவாயிரத்து ஆண்டு
இப்புவிமேல் மகிழ்ந்து இருந்து
சென் மதி அணிந்தார் தம் திரு
அருளால் திருக் கயிலை
தன்னில் அணைந்து ஒரு காலும்
பிரியாமைத் தாள் அடைந்தார்

இவர் காட்டும் முத்திக்கான வழி:

1. உடம்பையும்
2. மந்திரத்தையும் சாதனமாகப் பயன்படுத்தி
3. அறவழியில் அன்பு வழியில்
4. குருவிடம் தெளிவு பெற்று
5. ஞானம் அடைந்து
6. பேரின்பக் கடலில் முழ்கலாம் என்கிறார்.

உடம்பு (சாதனம்):

உலகமே உடலை பொய், மாயாகாயம் என உரைக்க இவர் உடலை கோயில் என்கிறார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே

உடம்பு (சாதனம்):

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே

என்று உடம்பே சாதனம் என்று கூறுகின்றார்.

மந்திரம் (சாதனம்):

நினைப்பவரைக் காக்கும் படைக்கலம்
குருவின் மறைமொழி
தோத்திரம் வெளிப்படையாகப் போற்றுதல்
இந்நூல் தோத்திரத்தில் மந்திரமாகக் கருதப்படுகிறது.

தந்திரம்: பிரிவு - ஆகமம்

மந்திரங்களைப் பயன்படுத்தும் வழியை (நெறியை) கூறும் பகுதியாக உள்ளது.
28 ஆகமப் பிரிவுகளை 9 தந்திரமாக வைத்துக் கொண்டார்.

எந்திரம் (பொறி):

குறிப்பிட்ட அறைக்குள் (கட்டம்) மந்திரத்தை அடுக்கித் தகடை பொறியாகப் பயன்படுத்துவது.

(தில்லையில் திருஅம்பலச் சக்கரம் அருளினார்)

தந்திரம் - 9:

1. ஞானம் பெற அறம் வழி கூறுதல்
2. புராணங்கள், உண்மைகள், கரு உற்பத்தி கூறுதல்
3. யோக சாதனம் (யோக நெறி கூறுதல்)
4. மந்திரம், இயந்திரம், வழிபாட்டுப் பயன்
5. சைவ நெறிகள் கூறுவது (சைவம் கிரியை யோகம் ஞானம்)
6. குருவருள் (சிவமே)
   துறவு -> துறத்தல்
   தவம் -> ஒன்றை நோக்கி இருத்தல்
   சிவ வேடம்
7. குரு லிங்க சங்கம வழிபாடு
8. உடல் இயல்பு, முத்தி இயல்பு, சிவமாம் தன்மை
9. பஞ்சாக்கரம், திருக்கூத்து, பேரின்பம்

திருமூலரை தமிழகம் வரவைத்த நோக்கம்:

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே

கடவுள் வாழ்த்து:

ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்
நின்றனர் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனர் ஆறு விரிந்தனன் ஏழும்புச்
சென்றனர் தான் இருந்தான் உணர்ந்தெட்டே

ஒன்றவன் - ஒரு பொருளாய் உள்ள முழுமுதற் பொருள்

இன்னருள் இரண்டு - மறக்கருணை
அறக்கருணை

மூன்றில் நின்றனன் - சிவதத்துவத்தில், அதிகாரம், போகம், இலயம் என்னும் மூன்று நிலை.

உணர்ந்தான் நான்கு - நான்கு வேதங்கள்

வென்றனை ஐந்து - ஐந்து பொறியால் வரும் தொடர்பு இல்லாதவன்

விரிந்தான் ஆறு -
வன்னம் பதம் மந்திரம் - சொல் பிரபஞ்சம்
தத்துவம் புவனம் கலை - பொருள் பிரபஞ்சம்

ஏழு உம்பர் சென்றனன் - சிவதத்துவ உலகம்

வ. எண்	உலகம்	தத்துவம்
1	பிரம்ம லோகம்	சுத்த வித்தை
2	விஷ்ணு லோகம்	
3	உருத்திர லோகம்	
4	மகேஸ்வர லோகம்	மகேஸ்வர தத்துவம்
5	சாதாக்கிய லோகம்	சாதாக்கிய தத்துவம்
6	சக்தி	விந்து
7	சிவம்	நாதம்

அனைத்தையும் அதிட்டித்து தானேயாய் நின்றான்.

எட்டு: சொல் ஒப்புகையால் எண் அலங்காரத்தை நிரப்பிற்று (அல்லது) எண் குணம் (அல்லது) அட்டமூர்த்தி

முதல் தந்திரம்: சிவபரத்துவம்

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரையானே

புவனம் கடந்து அன்று - அநாதி

தவனச் சடைமுடியான் - தவத்தின் பயனாய் அடையும் முழுமுதற் கடவுள்

தாமரையானே - தாவும் மானை கையில் வைத்திருப்பவன்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை, நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே

நமன் இல்லை - என்றும் இறப்பு இல்லை

நிறைவில் தொகுத்துக் கூறுகிறார்.........

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே

ஆக முதல் தந்திரத்தில் 30 உபதேச மந்திரத்தை பார்க்க இருக்கிறோம்.

1. உபதேசம் (முப்பொருள்):

விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டி களிம்பு அறுத்தானே

விண்ணின்று இழிந்து - எண்ணுதற்கு எட்டா இன்னதன்மை என்று அறியவொன்னா பரம்பொருள் (சிவனடி) சொரூபநிலையில் இருந்து இறங்கி (நிலம் தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி)

வினைக்கீடாய் மெய்கொண்டு தண்ணின்ற தாளை - உயிர்கள் செய்த (என்) வினைக்கு ஏற்றாற் போல் தடத்தை (பொது அல்லது கலப்பு) நிலையில் (திருவடி) சக்தியாய் அனைத்திலும் கலந்து அருவமாயும் குருநாதரின் திருவடியாக உருவமாகவும்...
சக்தி -> திருவருள் / திருவடி

தலைக்காவல் முன்வைத்து - தடைப் பொருள்களிடமிருந்து அத்திருவடியை உயிர்களின் (என்) பெருங்காவலாக அமைத்து (மறைப்பாற்றல்)

உண்ணின்று உருக்கி - அத்திருவருள் என் உள்ளத்தில் நின்று உள்ளத்தை கசிந்து உருகச் செய்து

ஓர் ஒப்பிலா ஆனந்தக் கண்ணின்று காட்டி - ஒப்பிலா ஆனந்தக் கண் (அருளாற்றல்). ஆக அருளாற்றலை உணரச் செய்தது (காட்டி)

(எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்)

எல்லா பிறப்பும் - மறைப்பாற்றல் (திரோதானம்)
கண்டு இன்று வீடுற்றேன் - அருளாற்றல்

களிம்பு அறுத்தானே - பாசம் (ஆணவம்) அறுத்தான்
களிம்பு - பாசம்
செம்பில் (உயிர்) களிம்பு (ஆணவம்) போல

இந்த உபதேசத்தில் முப்பொருள் இயல்பு பற்றி தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆக,

<table>
<tr><td colspan="2">பரம்பொருள்
(அநாதி பராசக்தி / பராசக்தி / சிவனடி / சொரூப நிலை)</td></tr>
<tr><td colspan="2">ஆதிசக்தி
(உயிரின் காவலாக / தடத்தை / திருவடி)</td></tr>
<tr><td>மறைப்பாற்றல்
(உயிரின் கட்டுண்ட நிலை)</td><td>அருளாற்றல்
(உயிர் கட்டு நீங்கிய நிலை)</td></tr>
</table>

ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டில் - மறைப்பாற்றலை மறைத்து அருளாற்றலை காட்டி உயிரை உருக்கி, களிம்பாகிய பாசத்தை நீக்கி, பேரானந்தத்தில் நிலைக்கச் செய்கின்றான் பரம்பொருள்.

2. சிவமாக்கி எனை ஆண்டான்:

களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருட் கண்விழிப் பித்துக்
களிம்பு அணுகாத கதிரொளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே

எங்கள் கண்ணுதல் நந்தி களிம்பு அறுத்தான் - முக்கண்ணுடைய எங்கள் சிவமாகிய நந்தி தேவரே, என் மலத்தை பற்றற நீக்கியவன் (அஞ்ஞானம்)

களிம்பு அறுத்தான் அருள் கண் விழிப்பித்து - அப்படி மலத்தை அறுத்தவனே என் அருட்கண்ணை திறப்பித்தான் (மெய்ஞானம்)

களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டி - அக்களிம்பு அணுக ஒண்ணாத சிவம் அக்களிம்புக்கு மாற்று ஒளியாக இருந்து உணர்த்தினான். (அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் உணரச் செய்தான் என்பதாம்).

பளிங்கிற் பவளம் பதித்தான் சிவம் - எவ்வாறு எனில், பளிங்கில் பவளம் பதித்ததுபோல

உவமை: பளிங்கு - ஆன்மா; பவளம் - சிவம் சார்ந்ததாம் தன்மை - பவளத்தின் தன்மை பளிங்கில் தோன்றுமா போல

ஆக, ஆன்மாவாகிய என்னிடத்துச் சிவத்தை விளங்குவித்தான் என்பதாம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே

- திருவாசகம் (51.1)

---

3. பதியை நாட பாசம் விலகும்:

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்
பதி அணுகில் பசு பாசம் நில்லாவே

பதி அநாதி என்றால் மற்ற பசு பாசம் எப்போது தோன்றியது என்ற ஐயம் நீக்கும் உபதேசம்.

பதி பசு பாசம் - முப்பொருள்
எனப்பகர் - என்று சொல்லப்படுகின்ற

மூன்றில் பதியினைப் பொல் பசு பாசம் அநாதி - மூன்றில் பதி அநாதி. அதைப்போல் பசுவும் பாசமும் அநாதியே
(இவ்வுண்மை அறியாதவர் பலவாறு விளம்பி மயங்குவர்)
பதியினைச் சென்று அணுகா பசு பாசம் - பாசம் பதியிடத்து அணுக மாட்டா. ஆனால் பசு பாசமிடத்து அணுகும். (பதியை அணுக பாசம் தடை)
பதி அணுகிற் பசு - அப்பசு பதியிடத்து அணுகும் போது (அன்பால் நெகிழ்ந்து)
பாசம் நில்லாவே - பாசம் நீங்கும்.

ஆக,

- பதி பசு பாசம் அநாதி
- பசு சட சத்து.
  பதியையும் சடத்தையும் சாரும்.
  சார்ந்ததாம் தன்மை உடையது.

பதியை பசு அணுக பாசம் விலகும் என்பது பொருள்

4. அருளாரமுது இறைவன்:

வேயின் எழுங்கனல் போலே இம் மெய்யெனும்
கோயில் இருந்து குடிக்கொண்ட கோன் நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயா என்னும்
தோயமதாய் எழும் சூரியன் ஆமே

வேயின் எழுங்கனல் போல - மூங்கிலில் மறைந்து இருந்த தீ அது வெளிப்படும் காலத்து (அது உரசும் போதோ அல்லது எரியும்போதோ) வெளிப்பட்டு விளங்குவது போல

இம்மெய் எனும் கோயில் - இவ்வுடம்பு எனும் கோயிலிலே

சூடிக்கொண்ட கோன் நந்தி இருந்து - ஆன்மாக்களின் தலைவன் ஆகிய நந்தி குடிகொண்டு

தாயினும் மும்மலம் மாற்றித் தயா எனும் - நமது பக்குவ காலத்தில் தாயினும் சிறந்த தயாவானவன் நம் மும்மலம் பந்தம் அறுத்து மாற்றி

தோயமதாய் எழும் சூரியன் ஆமே -அருள் மழை பொழியும் பேரொளியாய் எழும் ஞான சூரியன் அவனே

தயா - கருணை
தோயம் - நீர் / வெள்ளம்

5. அவனருளாலே அவன்தாள் (பாசம் அகல அவனருள் தேவை):

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே - சூரிய காந்தக் கற்களும் அவற்றைச் சுற்றி உள்ள பஞ்சும் போல (உயிர் அறிவை மூடியுள்ள பாசம்)

சூரிய காந்தம் சூழ் பஞ்சை சுட்டிடா - சூரிய ஒளி இல்லா நிலையில் சூரிய காந்தக் கல் அப்பஞ்சை சுடாது.

சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல - ஆனால் சூரியன் முன் அதன் ஒளியால் சூரிய காந்தக் கல் அப்பஞ்சை பொசுக்கும். அதுபோல

ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே - ஞான ஆசிரியரின் முன் தோன்றிய மாணவனின் அக அழுக்கை அவரது அருட்பார்வை அறுக்கும் என்பதாம்.

உ-ம்: சூரியகாந்தக் கல் - சூரிய வெப்பத்தைப் பெருக்கும் கல்
சூரியன் சந்நிதி - சூரியன் முன்பு

ஆக, உயிரின் அநாதி மலப்பற்று நீங்க அவனருள் தேவை என்பதாம்.

---

6. அருள் செயல்கள் ஐந்து:

மலங்களை ஐந்தாம் என மாற்றி அருளி
தலங்கள் ஐந்தான் அச்சதாசிவம் ஆன
புலங்களை ஐந்தான் அப்பொதுவினுள் நந்தி
நலங்களைந்தான் உள் நயந்தான் அறிந்தே

அப்பொதுவினுள் நந்தி - யாவரும் புகழும் அம்பலத்துள் ஆடுபவனாகிய சிவபெருமான் எனது பக்குவத்தை அறிந்து

1) மலங்கள் ஐந்தாம் என மாற்றி -

(அ) ஆணவம்
(ஆ) கன்மம்
(இ) மாயை
(ஈ) மாயேயம்
(உ) திரோதானம்

ஐந்து மலங்களையும் போக்கி தன்னை மாற்றித் தந்து (மறைப்பாற்றலில் இருந்து அருளாற்றல்)

2) தலங்கள் ஐந்தாம் அச்சதாசிவம் ஆன - சதாசிவனோடு நின்ற சுத்த மாயா தத்துவத்தின் விருத்தியாகிய 5 தத்துவத் தலங்களின் மூலம்

(அ) நாதம் - சிவம்
(ஆ) விந்து - சக்தி
(இ) சாதாக்கியம் - சதாசிவம்
(ஈ) ஈஸ்வரம் - 25 மூர்த்தங்கள்
(உ) திரோதானம் - பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்

ஐந்தொழில் புரிபவன் என் அளவில் தவிர்த்தான். ஆக, பெத்தான்மாவிற்கு - ஐந்தொழில். முத்தான்மாவிற்கு - ஐந்தொழில் இல்லை. தவிர்த்தான் (முத்தி).

3) புலம் களைந்தான் - எனது புலன்களின் வழி வரும் இச்சைகளைப் போக்கி அருளினான்

4) நலங்கள் ஐந்தான் - நலம் -> வீடுபேறு தரும் சாதனம் -> ஐந்தெழுத்து

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அலால்
நலமிலன் நாள்தோறும் நல்குவான் நலம்
குலமிலர் ஆகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலம் மிகக் கொடுப்பது நமசிவாயவே - சம்பந்தர்

ஆக, திருவைந்தெழுத்து எல்லா நாட்களும் நன்மைகளையே தரும்

---

5) அருளி உள் நயந்தான் அறிந்தே - என் உள்ளத்துள் நீங்காது விரும்பி நின்றான் (உள்ளத்து ஒலிக்கும் ஒளியோனே). ஆக, மீண்டும் மல வாசனை தாக்காமல், உள்ளத்துள் சிவம் நீங்காது நிற்கும் நிலை.

ஆக, மேற்கண்ட ஐந்து அருள் செயல்களை உயிர்கள் உய்யும் பொருட்டு செய்கிறான் என்பதாம்.

7) தம்முதல் குருவுமாய் அறிவிப்பான்:

அறிவை ஐம்புலனுடனே நான்றதாகி
நெறி அறியாது உற்ற நீர் ஆழமும் போல
அறிவு அறிவுள்ளே அழிந்தது போல
குறி அறிவிப்பான் குருபரன் ஆமே

(நான்றது - உயிர் அறிவு கட்டுண்டு
குறி - குறிக்கோள்
நெறி - வழி)

அறிவை ஐம்புலனுடனே நான்றதாகி நெறி அறியாது - ஆணவம் இயற்கைப் பற்று (பாசம்) அதன் தொடர்புடைய பற்று (பந்தம்) மாயாகாரிய பொறிபுலன் அம்மாயா காரியங்களில் உயிர் அறிவு கட்டுண்டு சேரும் வழி தெரியாமல் இருக்கும்.

உற்ற நீர் ஆழம் போல - எதுபோலவெனில், ஆழம் காண முடியாத பிறவிக் கடலில் மூழ்கி கரை ஏற அறியாத நிலைமையில் உயிர் அறிவு அழிகின்றபோது

அறிவு அழிவுளே அமிழ்ந்ததுபோல - உயிர் அறிவு சிவத்தின் அறிவோடு பொருந்தி (தன்முனைப்பு அழிந்து நான் சிவம் (சிவோகம்பாவனை) ஆனேன்).

குறிவறிவிப்பான் குருபரன் ஆமே - சிவம் வழி அறிவித்து குருவிற்கு மேலான குருவாய் நிற்பான்

ஆக, கடலின் ஆழம் தெரியாது மூழ்கியவனை மீட்டு வழிகாட்டுபவன் போல பிறவிக் கடலில் மூழ்கியவனுக்கு சிவம் அறிவுக்கு அறிவாய் குருவிற்கு குருவாய் நின்று அருளுவான் என்பதாம்.

8) அவனருளால் வினைக் கெடும்:

ஆ மேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம்
தீமேவு பல்கரணங்கள் உள் உற்றன
தாம் ஏழ் பிறப்பு எரிசார்ந்த வித்தாமே

ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம் போல் - பசுவின் பாலை நீரோடு கலந்தாலும் நீரை விட்டு விட்டு பாலைப் பருகும் அன்னம்போல
(ஆமேவு -> ஆவின் பால் மேவுநீர்)

தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம் - தில்லை மன்றுள் இறைவன் உயிரை ஆடரங்காகக் கொண்டு (அம்பலமாக) உயிருக்கு சக்திநிபாதம் ஏற்படும் பொருட்டு

சக்தி நிபாதம்:

- இருவினை ஒப்பு
- மலபரிபாகம்
- சக்திநிபாதம் (அருள் வீழ்ச்சி)

மூன்றும் ஒரு சேர நிகழ,

ஆனந்தக் கூத்தை உயிருக்காக நிகழ்த்தினாலும்

தாமேவு நித்தம்

- சக்தி நிபாதம் ஏற்பட்ட உயிர் எப்போதும் காணும் நடனம்
- பாசத்தை அறுத்து பேரின்பத்தை தரும் நடனம்

உ-ம்:

மாயைதனை உதறி நல்வினையைச் சுட்டு மலம்
சாய அமுக்கி அருள் தான்எடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தையார் பரதம் தான் ஆமே

- உண்மை விளக்கம் (36)

தீமேவு பல்கரணங்கள் உள்உற்றன -
தீமேவு - தீமையான
கரணங்கள் - காரணங்கள்
உற்றன - சேருகின்றன

அவ்வாறு இறைவன் உயிரை மேடையாகக் கொண்டு நடனம் நிகழ்த்தினாலும் ஆன்மா அழுக்கடைய பலவகைக் காரணங்கள் ஆன்மாக்களை சேர்கின்றன.

தாம் ஏழ் பிறப்பு எரிசார்ந்த வித்தாமே - அவை உயிர்களின் ஏழ்பிறவிக்கும் காரணமான வித்தாகும். ஆனால், இறையருளால் பிறவிக்குக் காரணமான மலங்கள், வினைத்தொடர்புகள் நெருப்புக்கு ஆளான விதை கரிந்து போவதுபோல எரியும் என்பதாம்.

9. சிவயோகம் :

வித்தைக் கெடுத்து வியாக்கிரத்தே மிகச்
சுத்தத் துலியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட்டு இருப்பர் சிவ யோகியார்களே

வியாக்கிரதம் - உபதேசம்

துரியம் - தன்னை மறக்கும் யோகநிலை

துடக்கற - தோற்றம் அழிய

செத்திட்டு - உலகப்பற்றற்று

சிவயோகிகள் வித்தை கெடுத்து - குரு அருளால் சிவயோகம் கைவரப் பெற்றவர்கள் பிறவிக்குக் காரணமான சஞ்சித வினையை முற்கூறியபடி அழித்து

வியாக்கிரத்தே - குரு உபதேசித்த மந்திர மொழியை சொல்ல சொல்ல

மிகச் சுத்தத் துரியம் பிறந்து - தன்னை மறந்த யோகநிலை தோன்றப் பெற்று அந்நிலையே பிறவித்துயர் அறுக்கும் புனிதநிலை

துடக்கற ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு செத்திட்டு இருப்பர் - அந்நிலை அடைந்து உடலோடும் உயிரோடும் ஐம்புல அறிவும் ஒன்றாகி செத்தவர்களைப் போல் இருப்பர்.

சிவோகம் பாவனையின் முதிர்ச்சியே 'சிவயோகம்' (ஞானத்தில் யோகம்).

இந்நிலையில்,

- ✓ காணும் பொருள் எல்லாம் சிவமாய் காண்பர்
- ✓ விருப்பு வெறுப்பு இன்றி
- ✓ இன்ப துன்பம் உணர்வு இன்றி
  இந்நிலையையே செத்திருப்பர் என்றார்.

---

10. சிவயோகம் :

சிவயோகமாவது சித் அசித்தென்று
தவயோகத்துள் புக்கு தன் ஒளி தானாய்
அவயோகம் சாராது அவன் பதி போக
நவயோக நந்தி நமக்கு அளித்தானே

சிவயோகமாவது சித் அசித்தென்று - சிவத்தின் முன் சித்தாகிய (அறிவுடைய) உயிரும் அசித்தே என்றுணர்ந்து

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து ஒன்றாம் என்னில்,
சிவன் அருட்சித்து இவன் அருளைச் சேரும் சித்து
அவன்தான்
பவம் கேடு, புத்தி முத்தி பண்ணும் சித்து அவற்றில்
படியும் சித்து அறிவிக்கப்படும் சித்து இவன்தான்
அவன் தானே அறியும் சித்து ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது அநந்நியமாய் இருக்கும்
இவன் தானும் புத்தியும் சித்து இவன் ஆமோ புத்தி?
இது அசித்து என்றிடில்
அவனுக்கு இவனும் அசித்தாமே

- சித்தியார் பரபக்கம் (320)

தவயோகத்தில் புக்கு தன் ஒளி தானாய் - ஏகமாம் தன்மையுள் (யோக நிட்டையுள்) மிகச்சென்று சிவனது அருளையே தானாகப் பெற்று

அவயோகம் சாராது - பிறவிக்கு வித்தாகும் பிற உலகப் பொருள்களைச் சாராது

அவன் பதி போக(ம்) - இறைவன் திருவடி பேற்றினை (அவன்பதி) அடைதல் ஆகிய சிவபோகத்தினைத் தருகின்ற

நவயோக(ம்) நந்தி நமக்கு அளித்தானே - நவ யோகம் எனும் புதிய யோகமாகிய நல்ல வழி எங்களுக்கு நந்தியெம்பெருமான் அருளினார்.

நவயோகம் - சிவயோகம் (துரியநிலை) அதன் விளைவு

சிவபோகம் - துரியாதீத நிலை

அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்து அடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலான் - மெய்ம்மைச்
சிவயோகமே யோகம் அல்லாத யோகம்
அவயோகம் என்று அறி - திருக்களிற்றுப்படியார் (74)

11. பேரின்பம் அளித்தல்:

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை - உலகெங்கும் அவன் கலந்துள்ள மெய்மையை உணரச் செய்தான்

சிவம் -> அனைத்தையும் கடந்தும்
சக்தி -> அனைத்திலும் கலந்தும்

இன்று எனக்கு அருளி, இருள் கடிந்து,
உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து,
ஒன்று ஆம் திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யார் உன்னை அறியகிற்பாரே - திருவாசகம்

---

2) அளித்தான் அமரர் அறியா உலகம் - புத்தேளிராலும் (தேவர்கள்) அறியாத தனது வீட்டுலகை அறியச் செய்தான்

நன்றுடையானைத் தியதிலானை
நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு
பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடை
யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற
என்னுள்ளம் குளிரும்மே - சம்பந்தர் (1.98.1)

3) அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள் - அம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் அவனது திருவடியை எனக்கு துணை அருளினான்

கடையவனேனைக் கருணையினால்
கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையில் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோச மங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே
- திருவாசகம்

---

4) அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே- ஆடும் பேரின்ப பெருவெளியில் அவன் அருள் வெள்ளத்தை நான் அள்ளிப் பருகி ஆனந்திக்க அருள் செய்தான்.

வழங்குகின்றாய்க்கு உன் அருளால்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினேயேன் என் விதி இன்மையால்
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்
பருகத்தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே - திருவாசகம்

சிவபோகம்	
பேரின்ப அனுபவம் (அணைந்ததோர் தன்மை)	
சிவன் முத்தி அனுபவம் (பதமுத்தி அனுபவம்) சிந்ததைக்கு எட்டாத சிவனை சிந்தனைக்கு எட்டுபவனாகக் கண்டு இன்புறும் அனுபவம் (சிற்றின்ப அனுபவம்)	பரமுத்தி அனுபவம் (பேரின்ப அனுபவம்) உயிரின் அறிவு இச்சை செயலுக்கு பிறிது ஒன்றும் புலப்படாது "சிவமே புலனாகும்" அந்நிலையில் தன்னை இழந்து இன்புறும் அனுபவம்

மேற்கண்ட இரு நிலையும் இவ்வுடம்பு உள்ள போதே பெறப்படுவன.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசரராகி முனிவராய் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

- மாணிக்கவாசகர்

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்றவரும் பரிசு உந்திபற
முளையாது மாயை என்று உந்திபற - திருவுந்தியார் (33)

உடம்புடைய யோகிகள்தாம் உற்ற சிற்றின்பம்
அடங்கத்தம் பேரின்பத்து ஆக்கில் - தொடங்கி
முளைப்பதும் ஒன்று இல்லை முடிவதும் ஒன்று இல்லை
இளைப்பதும் ஒன்று இல்லை இவர்

-திருக்களிற்றுப்படியார் (76)

காணுங் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்
பேணும் அடியார் பிறப்பு அகல - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாய் ஆரப் பேசு - திருவாசகம் (48.6)

---

12. சோதியில் அடங்கிய சோதி - சித்தர்:

ஆ மேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம்
தீமேவு பல்கரணங்கள் உள் உற்றன
தாம் ஏழ் பிறப்பு எரிசார்ந்த வித்தாமே

(அளி - கருணை
தெளியும் - தெரியும்)

வெளியில் வெளிபோய் விரவியவாறும் - பரவெளியில் பரம்பொருள் (போய்) பரவிக் கலந்திருப்பதைப் போலவும்

அளியில் அளிபோய் அடங்கியவாறும் - குருவருள் பெற்றபின்னர் (கருணை) ஆன்ம வியாபகம் சிவ வியாபகத்துள் அடங்கி நிற்பது போலவும்

ஒளியில் ஒளிபோல் ஒடுங்கியவாறும் - பேரருள் பேரொளி சோதியுள் ஆன்ம அன்பு எனும் உயிர் ஒளி (சோதி) அடங்கி நிற்பது போலவும்

அருளில் அடங்கிய அன்பு
சோதியில் அடங்கிய சோதி
பேரொளியில் அடங்கிய சிற்றொளி

தெளியும் அவரே சிவ சித்தர் தாமே - அனுபவமாக உணர்பவரே சிவனைப் பெற்ற சிவ சித்தர் ஆவார்.

சித்தர் (சிவனைப் பெற்றவர்)	
அவசித்தர் (பகுதி) அட்டமாசித்திகள் பெற்று இருப்பினும் பிறவியை அறுத்துக் கொள்ளா நிலையில்	சிவசித்தர் (முழுமை) குருவருளால் சிவஞானம் பெற்று சிவப்பேறு சித்திப் பெற்றவர்

13. சிவலோகத்தை இவ்வுலகில் கண்டவர் - சித்தர்:

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும் தம் முள் கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல் முப்பத்தாறே

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர் - சிவனை இவ்வுலகிலேயே கண்டவர்

சத்தமும் சத்த முடிவும் தம் முள் கொண்டோர் - 36 தத்துவங்களின் கூறாகிய தாத்துவீகங்கள் 60ல் சுத்தமாயையின் விருத்தியாக நால்வகை வாக்கு உயிருக்கு பரமபந்தம் (பெரும் கட்டு). அந்த வாக்குகளையும் அவற்றுக்கு முதலாகிய குடிலையும் தம்முள் அடங்கக் கண்டு நீங்கியவர்கள்.

சொல்லற சும்மா இரு - அருணகிரிநாதர்

நித்தர் நிமலர் நிராமயர் - அழிவற்றவர்கள், வினை அண்டாதவர் (மலமாசு), நோய் நொடி அற்றவரே (மனக் கவலை)

நீள்பர முத்தர் - எல்லையில் இன்பத்துள் நிற்கும் முத்தர் (முத்திநிலை) ஆவர்.

தம்முத்தி (முதல்) முப்பத்தாறே - அவர்கள் தம்முத்தி பெற விடுதலை எய்துவது பிறவிக்கு முதல் காரணமான 36 தத்துவங்களில் இருந்து

ஆக, முத்திக்கு தத்துவசுத்தி, ஆன்மசுத்தி அவசியம். அவற்றுள் தத்துவசுத்தி இயல்பு இப்பாடலில் கூறப்பட்டதாகும்.

சீலம் இன்றி, நோன்பு இன்றி,
செளிவே இன்றி, அறிவு இன்றி,
தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்,
கழன்று, விழுந்து, கிடப்பேனை,
மாலும் காட்டி வழிகாட்டி,
வாரா உலக நெறி ஏறக்
கோவம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே?

- திருவாசகம் (50.3)

தத்துவமும் காட்டி அதனில் இருந்து விடுபடும் வழியும் காட்டி

14. சிவலோகம் சீவனுக்குள்ளே:

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவம் கண்டு தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்து இருந்தாரே

முப்பதும் ஆறும் - முப்பத்தாறு தத்துவங்களும் முத்தி நிலைக்கு ஏணிப்படியாக நிற்க ஒவ்வொன்றாகக் கடந்து

ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு - இறைவனின் ஆனந்தக் கூத்து தன் உள்ளத்தில் ஒளி வெள்ளமாய் பெருகி நிற்கும் சிவ சித்தர்க்கு

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

- சிவபுராணம் (65-70)

செப்பரிய சிவம் கண்டுதான் தெளிந்து - அவ்வொளி வெள்ளத்தில் சொற்பதம் கடந்த துரிய மெய்ஞானமாகிய சிவத்தை சீவனுக்குள்ளே கண்டு அவன்தான் மெய்ப் பொருள் எனத்தெளிந்து நிற்பர் சிவசித்தர்.

அப்பரிசாக அமர்ந்திருந்தாரே - அதுவே பிறவிப்பயன் என்று சிவனே என்று இருப்பர்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்

- ஔவையார்

15. சொல்லற சும்மாயிரு:

இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி
இருந்தார் சிவன் செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பை குறித்து அங்கு
இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே

இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி - சீவனுக்குள்ளே சிவத்தை கண்ட சித்தர்கள் மலவாசனை நீங்கிய நிலையில் சிவசொரூபமாகி அங்கு இங்கு எனாதபடி எங்குமாய் இறை நிலையில் அழுந்தி இருப்பர்.

இருந்தார் சிவன் செயல் யாவையும் நோக்கி - அந்நிலையில் நடப்பவை எல்லாம் சிவன் செயல் என்று கண்டு உணர்ந்து இருந்தனர். (ஆகாமியம் என்ற புதிய வினை ஏற்படாது).

அவனின்றி ஓரணுவும் அசையாது.

'என் செயலாவது யாதொன்றுமில்லை'

-பட்டினத்தார்

இருந்தார் முக்காலத்து இயல்பை குறித்து அங்கு - அந்நிலையில் மேற்கூறியவாறு உயிர்கள் பொருட்டு இறைவன் செய்யும் செயலுக்கு அவன் தோற்றுவித்து நிறுத்தியுள்ள நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் எனும் காலத்தின் தொழிற்பாட்டை அறியும் ஆற்றல் உள்ளவராய்

இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே - செருக்கு ஒழிந்து செயலற்று இருப்பர். "சொல்லற சும்மா இரு"

சோம்பே -> சோம்பல் (தாமசகுண மிகுதி)
பழிப்பது போல் புகழுதல்

ஆக, சிவத்தைப் பெற்றவர் எல்லா அறிவாற்றலும் உடையவராயினும் சிவத்தை அறிந்து அழுந்துதல் அல்லாது பிறிதொன்றும் செய்யார் என்பதாம்.

எல்லாம் அறியும் அறிவுனுள் ஈங்கு இவர் ஒன்று
அல்லாது அறியார் அற - திருவருட்பயன்

16. சும்மா இருப்பதே - சமாதி அனுபவம்:

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர் கண்டார் அச்சுருதிக் கண் தூக்கமே

முன் மந்திரத்தில் சித்தர்-சோம்பர் சொல்லற சும்மா இருப்பர் அதுவே சீவன் பெருமை என்று உணர்த்தி அந்த அனுபவத்தை இம்மந்திரத்தில் உணர்த்துகிறார்.

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே -

(1) சித்தர் இருப்பது (வியாப்பியம் - செயலற்று இருப்பவர்) - பரவெளியாகிய சிவவெளி (வியாபகம்)

வானம் - நாம் சொல்லும் வெளி வானம் எல்லையில்லாதது (உலகவெளி). அதனினும் மேலானது பரவெளி (சிற்பரவியோமம்)

இருப்பது - செயலற்று இருந்தாலும் தன்னை இழக்காமல் நின்ற துரிய நிலை.

சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே -

(2) சித்தர் கிடப்பது - மேலும் அவர்கள் கிடக்கும் இடமும் பரவெளியே. அதாவது, சிந்தையை அடக்கி சும்மா கிடப்பது.

சோம்பர் உணர்வு சுருதி முடிந்திட -

(3) அவர் உணர்வு நிற்கும் இடம் (சுருதி - வேதம்). வேதம் எட்டாத வேதமுடிவான சிவபெருமானின் திருவடிகளிலேயே ஆகும்.

சோம்பர் கண்டார் அச்சுருதிக் கண் தூக்கமே -
(4) அவர் பெறும் நிலை (அச்சுருதிகண் - வேத நாயகன்). அவ்வேதங்களின் தலைவனாகிய சிவபெருமானை நினைந்தே தூக்கமே கண்டனர்.

தூக்கம் - யோக நித்திரை (சமாதி அனுபவம்)
இன்பத்துயில்
இளைப்பாறுதல்

ஆக, சித்தர்கள், தம்மை மறந்த பரவெளியில் இருப்பர், கிடப்பர், உணர்வர், உறங்குவர் என்பதாம்.

17. சித்தர் தூக்கத்தில் (தியானம்) தனக்குள்ளே சிவலோகம் கண்டனர்:

தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம் உள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே

தூங்குதல் - தம்மையும் தன்னை சார்ந்த பாசங்களையும் மறந்திருத்தல்
விழித்திருத்தல் (கண்டார்) - சிவத்தை மட்டும் உணர்ந்திருத்தல்
மேற்கண்ட இரு நிலையும் ஒருங்கே நிகழ்தல் சித்தர் நிலையாம்

தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே - தூங்குதல் - அறிதுயில் / யோகநித்திரை / தூங்காமல் தூங்குதல் எனவும் கூறுவர். அந்நிலையில் சிவலோகம் கண்டனர்.

தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம் உள்ளே - மேலும் சிவத்தோடு என்றும் ஒன்றாய் நிற்கும் (ஒன்றியிருப்பது) பேற்றையும் கண்டார்.

தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம் உள்ளே - சிவனோடு இரண்டறக் கலந்த இன்ப நிலையும் (சிவானந்தம்) தம் உள்ளே ஊற்றெடுத்தலையும் தம் அறிவுளே விளங்கக் கண்டார்.

ஆக, இப்படி தியான சமாதியில் திளைத்த சித்தர்களின் பெருமையை ஆற்றலை உயர்ந்த நிலையை எப்படி சொல்வது இயலாது என்பதாம்.

போகம் -> இரண்டறக் கலத்தல்
(அனுபவத்தே உணர இயலும்).

---

18. சித்திகள் அருளும் சிவயோகம்:

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருள் செய்வன் ஆதி அரன் தானும்
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும்
செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை - ஆன்மாக்களின் அறிவுள் எல்லையை (பக்குவம்) எந்த எந்த அளவினதாகக் காண்கிறானோ?

சக்திநிபாதம் - மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரத் தரம்
பக்குவகாலம்- உள்ளதை உள்ளபடி உணரும் காலம்

அவ்வாறு அருள் செய்வன் ஆதி அரன் தானும் - அந்தப் பக்குவத்திற்கு ஏற்ப அநாதியாய் நிற்கும் பரம்பொருள் ஆதியாய் நின்று தனது திருவருளை நல்குவான்.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே

- அப்பர் (6.23.1)

பெத்தான்மாவிற்கு உலகையும் (மறைப்பாற்றல்) முத்தான்மாவிற்கு வீட்டினையும்
வேண்டாதவனவற்றை தரின் அது பயன்படாது ஒழியும் என்பதாம்.
ஒவ்வாத மன்றுள் உமை காண ஆடிடும் - உவமை இல்லாத தில்லை மன்றுள் உமை காண திருக்கூத்தாடும்
செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம் - அந்திவானில் மாணிக்க ஒளி போன்ற அழகிய (செய்ய) அருள் சுடரான சிவபெருமான்

ஆக, ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்ப அருளுவான் என்பதாம்.

19. திருக்கூத்தைக் கண்டவரே பேற்றிணைப் பெற்றவர்:

மாணிக்கத்து உள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத்து உள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுது என்ன பேறு பெற்றாரே

மாணிக்கத்து உள்ளே மரகதச் சோதியாய் - முன் பாடலில் சிவபெருமானை மாணிக்கம் என்றார் போல் இப்பாடலிலும்'

மாணிக்கம் -> சிவந்த ஒளிவீசும் (சிவன்)
மரகதம் -> பச்சை ஒளிவீசும் (சக்தி)

சிவசக்தியாய் காட்சி தருவது போலவும்

குணம் -> சக்தி (காரம்)
குணி -> சிவம் (மிளகாய்)

மாணிக்கத்து உள்ளே மரகத மாடமாய் - மாடம் (விளக்கேற்றும் இடம்) - சக்தி பீடம்

ஆணிப்பொன் மன்றில் ஆடும் திருக்கூத்து- சிவசி - உடையாள் உன்தன் நடு இருக்கும்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே- திருவாசகம் (8.21.1)

வசிவ - உடையாள் நடுவுள் நீ இருத்தி
ஆடரங்கு - உயிரை மேடையாகக் கொண்டு
சிவயசிவ - அடியேன் நடுவுள் இருவீரும்

அப்பேற்பட்ட பொன்னம்பலத்தில் சக்தி சிவமாய் ஆடும் திருக்கூத்தை

பேணித் தொழுது என்ன பேறு பெற்றாரே- என்ன: எத்தன்மையானவன்.

பேணித் தொழுபவர்கள் அளவில்லாத (என்ன) பேறு பெற்றவர் ஆவர் என்பதாம்.

20. திருக்கூத்தை தொழுகின்றவர் பெரும் பேறு:

பெற்றார் உலகில் பிரியாப் பெருநெறி
பெற்றால் உலகில் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே

மேற்கூறிய கூத்தினை நீங்காது தொழுகின்ற பேற்றினைப் பெற்றவர்

பெற்றார் உலகில் பிரியாப் பெருநெறி -
(1) சிவமாயும் - உடல் நீங்கியபின் சிவனோடு ஒன்றாகும் பெருநிலையை இப்போதே பெற்றார்.

பெற்றால் உலகில் பிறவாப் பெரும்பயன் -
(2) பிறவாமையும் - அதனால் விளையும் பிறவாமை ஆகிய பெரும் பயனையும்

பெற்றார் அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு-
(3) பிரியா அந்நெறியும் - ஆனந்தக் கூத்தாடும் பொன்னம்பலத்தைப் பிரியாத பெரும் பேறும்.

அல்லல் என் செயும்? அருவினை என் செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம் தான் என்செயும்?
தில்லை மாநகர் சிற்றம்பலவனார்க்கே
எல்லை இல்லாதோர் அடிமை பூண்டேனுக்கே

\- அப்பர்

பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே -
(4) சொல்லற சும்மா இரு தன்மையும் - அப்பேற்றினால் பிறரோடு பேசாது தனித்து தவமிருக்கும் யோக சித்தி பெற்றவர் ஆவர்

---

21. மறைப்பால், அருளாற்றல்:

பெருமை சிறுமை அறிந்து எம்பிரான் போல்
அருமை எளிமை அறிந்தறிவார் யார்
ஒருமையுள் ஆமைபோல் உள் ஐந்து அடக்கி
இருமையும் கேட்டிருந்தார் புரை அற்றே

பெருமை சிறுமை அறிந்து எம்பிரான் போல் -
பெருமை - உலகியலில் பெரியராயும், தன்னை நினையாதவர்க்கு -> இறைவன் அரியனாயும் (மறைப்பாற்றல்)
சிறுமை- உலகியலில் சிறியராயினும் தன்னை நினைவார்க்கு எளியனாயும் (அருளாற்றல்)

அருமை எளிமை அறிந்தறிவார் யார் -
மேற்கண்டவாறு ஆன்மாக்களின் இரு நிலையை அறிந்து அதற்கேற்ப அரியனாயும் எளியனாயும் நிற்கும் முறைமை எம் சிவனைத் தவிர யார் அறிவார்? என்பதாம்.

உ-ம்: கனவினும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவினும் நாயேற்கு அருளினை போற்றி

\- போற்றித் திருவகவல்

புலனடக்கித் தம் முதற்கண் புக்குறுவர் போதார்
தலன் நடக்கும் ஆமை தக - திருவருட்பயன்

ஒருமையுள் ஆமைபோல் உள் ஐந்து அடக்கி - மேற்கண்ட இறைவன் நிற்கும் இரண்டு நிலை அறிந்தவர், ஆமை தனது ஐந்து உறுப்புக்களை தனக்கு காவலாய் உள்ள ஓட்டின் உள்ளே அடக்கிக்கொள்வது போல,

ஆன்மா தனது ஐந்து புலன்களை தனக்கு அரணாய் உள்ள திருவருளினுள் அடக்கி

இருமையும் கேட்டிருந்தார் புரை அற்றே - இம்மை மறுமை இரண்டையும் உணர்ந்த குறையற்றவராய் இருப்பர் என்பதாம்

22. உடல் நீங்கிட உயிர் சிவமாகும்:

புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்
திரையற்ற சிந்தை நல் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரையற்ற சோதி கலந்த சத்தாமே

புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல் - புரை (வேற்றுப்பொருள்) பாலைத் திரித்து அதன்கண் உள்ள நெய்யை வேறாகச் செய்யும். புரை ஊற்றாத பாலில் நெய் தெரிவதில்லை. ஆனாலும் அதில் கலந்துதான் உள்ளது.

திரையற்ற சிந்தை நல் ஆரியன் செப்பும் -

திரையற்ற: அதுபோல,
நல்சிந்தை: அலைபாயாத தெளிந்த சிந்தை உடையவர்.
ஆரியன் செப்பும்: ஞான ஆசிரியர் அருளிய மந்திரத்தை உச்சரித்தபடி (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்)

உரை அற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால் - பேச்சற்று மௌன சமாதியில் நிட்டை கூடுதல் கைவரப் பெற்றவர்

கரை அற்ற சோதி கலந்த சத்தாமே - இவ்வுலகில் மாய உடம்பு ஒழிந்து எல்லையற்ற இறையருள் சோதியுள் கலந்து சிவமாகி கலந்து நிற்பர்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை
வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த்
தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின்
அரன்கழல் செலுமே - சிவஞானபோதம் (8)

காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)
ஏயும்உயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன் இத்தை
ஆயுமறி வுடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையின் அடைந்தமுறை யாலே
மாயமெலாம் நீங்கிஅரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே
- சித்தியார் (சூத்திரம்-11)

23. சித்துக்கு சித்து - சடத்துக்கு சடம்:
சத்த முதல் ஐந்தும் தன் வழித்தான் சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே

சத்த முதல் ஐந்தும் தன் வழித்தான் சாரில் - சடத்துக்கு இடம் சடம் - சத்தத்தை முதலாகக் கொண்ட ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய தன்மாத்திரைகள் ஐந்தும் உயிர் இயக்கத்திற்கு ஆதாரம். ஆனாலும் சடம். அது தத்தம் காரணத்துள்ளே சேர்ந்துவிடுமாயின்,

---

அதாவது, ஒரு பொருள் தன்னினப் பொருளோடு சேருமே அன்றி வேற்றினப் பொருளோடு சேராது. ஆனால் ஆன்மாவாகிய சித்து சடமாகிய தத்துவங்களோடு சேர்வது, மதுவுண்ட வண்டுக்கு ஏற்படும் மயக்கம் போல் ஆகும். அக்குற்றம் நீங்குதல் பொருட்டு,

சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ - சித்துக்கு இடம் சித்து - மேற்கூறியவாறு சடம் சடத்தோடு சேர்ந்துவிடுமாயின் சித்தாகிய ஆன்மா சித்தாகிய சிவத்தோடும் கூடும் என்பதாம்.

சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும் - சுடரில் சுடர் - அப்பயனை தரக்கருதியே சிவம் குருவாய் வந்து பரவெளி என்னும் ஞாயிறு என்னும் பேரொளியில் ஆன்மா என்னும் விண்மீன் சிற்றொளி சேரும்படி செய்கிறான்.

அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே - உபதேசம் இதுவே - நான் கூறும் உபதேசம் இதையே பொருளாகக் கொண்டு அருள் நீரால் மனத்தூய்மை பெறுவாயாக.
அப்பு - தண்ணீர் (இங்கு அருள்வெள்ளம்)

உ-ம்:

சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறை செய் புலன் உணர்வில் தீர்ந்து - சிறை விட்டு
அலைகடலில் சென்று அடங்குமாறு போல் மீளாது
உலைவுஇல் அரன் பாதத்தை உற்று

-சிவஞானபோதம் (சூ-8)
(எடுத்துக்காட்டு வெண்பா-7)

தூநிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார்; தொகும்
இதுபோல் தான அதுவாய் நிற்கும் தரம்

- திருவருட்பயன் (61)

ஆக இம் மந்திரத்தில் சேரும் இடம்...

- சடத்துக்கு இடம் சடம்
- சித்துக்கு இடம் சித்து (சுடருக்கு இடம் சுடர்) என்பதாம்.

24. சிவன் - சோதி, சீவன் - சுடர்:

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர் பெற்று உருச் செய்த அவ்வுரு
அப்பினில் கூடியது ஒன்றாகு மாறுபோல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால் - அப்பு - கடல்நீர்; கூர்மை - உப்புத்தன்மை; ஆதித்தன் - சூரியன்; வெம்மை - வெப்பத்தால்

உப்பெனப் பேர் பெற்று உருச் செய்த அவ்வுரு - மேற்கண்டவாறு கடல்நீரில் கலந்த உப்பு சூரிய ஒளியால் உப்பாக உருவெடுத்து வர

அப்பினில் கூடியது ஒன்றாகு மாறுபோல் - அந்த உப்பு உருவம் மீண்டும் நல்ல நீரில் கரைய உப்பு வேறு நீர் வேறு எனத் தோன்றாதபடி இரண்டற கலந்துவிடும்.

செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே - அதுபோல சொல்வதெனில் சீவன் என்றும் சிவத்தோடு அடங்கி ஒன்றாய் இருப்பதற்கு உரியதாகும் என்பதாம்.

ஆக, கடல் நீரில் கலந்திருந்த உப்பு, உப்பென பேர் பெற்று உருச்செய்ய சூரிய ஒளியினால் கடலில் இருந்து பிரிவது போல், குருநாதர் அருளினால் உயிரானது தடைப் பொருள்களில் இருந்து நீங்கி (அதாவது பெத்தான்மாவாக இருந்த உயிர் முத்தான்மாவாக மாறி),

நல்ல நீரில் இரண்டறக் கலப்பது போல சீவன் சிவனுள் இரண்டறக் கலந்து நிற்கும் என்பதாம்.

---

25. திருவடியே உயிருக்குக் கரை (துணை):

அடங்கு பேரண்டத்து அணு அண்டம் சென்றங்கு
இடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்களை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே

அடங்கு பேரண்டத்து அணு அண்டம் சென்றங்கு - எல்லாப் பொருளும் அடங்கி நிற்கும் இடம் அண்டம் எனும் பேருருண்டை. அதனுள் அடங்கிய மிகச் சிறு உருண்டையாக இருப்பது அணு.

இடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ- அதற்குப் புறம்பாய் உயிர் வெறொரு இடத்தில் இடம் கொண்டு நிற்கவில்லை.

உ-ம்: அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்

- திருவாசகம்

கடந்தொறும் நின்ற உயிர்களை காணில் -
கடம் -> குடம் (அண்டம் / பிண்டம்)
நின்ற உயிர் -> குடத்தில் உள்ள நீர்
(அண்டத்தில் உள்ள உயிர்)
குடத்தில் கட்டுண்ட நீர் கரை சேர்வது போல, அண்டத்துள் கட்டுண்ட உயிர் கரைசேர வேண்டும் என்று காண்க.

திடம்பெற நின்றான் திருவடி தானே - பிறவிக் கடலில் இருந்து மீண்டு கரைசேர என்றும் ஒருபெற்றிய நிற்பவனாகிய சிவபெருமானது திருவடியே ஆகும். இதுவன்றி வேறு கரை உண்டோ என்பதாம்.

சடையவனே தளர்ந்தோன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே

- நீத்தல் விண்ணப்பம்

26. திருவடியே உயிரின் பற்றுக்கோடு:

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே

பரம்பொருள்	
ஆதிசக்தி (திருவடி) 8 குணங்களின் ஒரு கூறாகிய பேரருள் உடைமையின் பெரும் கருணையாகிய 'சக்தி'	
நாதம்	விந்து
ஞான சக்தி (சிவம்)	கிரியா சக்தி (சக்தி)
விநாயகர்	முருகர்
இச்சா சக்தி - மூலவர் (சதாசிவம்)	

மேற்கண்டவாறு சக்தியை இறைவன் திருவடியாகக் கொண்டு எண்ணிலடங்கா உயிர்களுக்கு எல்லாமுமாய் நின்று பயன்தரும் படி ஞான சக்தியாகவும், கிரியா சக்தியாகவும், இரண்டும் கலந்து நிற்கும் இச்சா சக்தியாகவும் நின்று ஆட்கொள்கிறான் என்பதாம்.

திருவடியே சிவமாவது தேரில் - தம்முதல் குருவுமாய் வந்த ஞான ஆசிரியரின் திருவடியே (ஞானசக்தி, கிரியாசக்தி) சிவம் என்பதை உணர்ந்தால்

திருவடியே சிவலோகம் சிந்திக்கில் - அந்தத் திருவடிகளே உயிருக்கு சிவலோகம் ஆகும். அந்தத் திருவடியின் அருளை சிந்தித்தால்

திருவடியே செல்கதி - 1. கேட்டு
2. சிந்தித்து இருக்க
3. தெளிதல் ஆகிய
செல்கதியை காட்டும்

அது செப்பில் திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே - இன்னும் சொல்வதானால் அத்திருவடிகளே அடையத்தக்க புகலிடம் என்று ஞானிகள் உணர்வார்கள்.

4. நிட்டை கூடுதல்

உ-ம்:

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் - திருக்குறள் (2)

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமான் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்

- திருவெம்பாவை

27. குருவருளே திருவருள்:

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

ஆசிரியர் (குரு)		
வித்தியா குரு கற்பிக்கும் ஆசிரியர்	கிரியா குரு வழிபாட்டு ஆசிரியர்	ஞான குரு அருளாசிரியர்

மேற்கண்ட ஆசிரியர்களுள் "ஞான குருவே, உயர்ந்தோர் அனைவரிலும் உயர்ந்தோர்" ஆவார்.

மானிட சட்டை தாங்கி ஞான குருவாய்:

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

-சிவஞானபோதம் (சூ.8)

ஏனைய ஆசிரியரும் இறைவனே:

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்

-நறுந்தொகை

இருப்பினும் இத்திருமந்திரத்துள் குரு என குறிப்பது ஞான குருவே என்பதாம்.

உ-ம்:

ஞான யோகக் கிரியா சரியை நான்கும்
நாதன்தன் பணி; ஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனம் இலா யோகம் முதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரியாவான் தான் ஒன்கிரியை ஆதி
ஆன இரண்டினுக்கு உரியன்; ஆகலினால் யார்க்கும்
ஈனமிலா ஞான குருவே குருவும் இவனே,
ஈசன் இவன்தான் என்றும் இறைஞ்சி ஏத்தே.

-சித்தியார் (326)

தெளிவு குருவின் திருமேனி காண்டல் - மானிட சட்டை தாங்கி எழுந்தருளியுள்ள அருட்குரு நாதரைக் காணுதல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல் - அவரது திருநாமத்தை திருவைந்தெழுத்துக்கு ஒப்பாக எப்பொழுதும் சொல்லுதல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் - அவரின் அருள் உபதேசத்தை இறைவனின் திருவார்த்தையாக எண்ணி கேட்டல்

திருவார்த்தை - திருவாசகம்

தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல் தானே - அவரது திருவுருவை உள்ளத்துள் உள்குதல். அவரது அருளுரையை எண்ணி நினைவால் தொழுதல்

ஆக உயிர்க்கு மெய்ஞானம் என்ற தெளிவுபெற ஞானகுருவின் திருமேனி, திருநாமம், திருவார்த்தை, திருவுரு தொழுதல் அவசியம் என்பதாம்.

28. தனித்திரு துதித்திரு:

தானே புலன் ஐந்தும் தன் வசமாயிடும்
தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்து எம்பிரான்தனைச் சந்தித்தே

தானே புலன் ஐந்தும் தன் வசமாயிடும் -

(1) ஐம்புலன் ஆசை உலகப்பொருள் மேல் செல்லாது நமக்குள் அடங்கி இயங்கும்

தானே புலன் ஐந்தும் தன் வசம் போயிடும் -

(2) புலனைந்தும் அது விரும்பியபடி நம்மை இயக்கும் தன்மையை அது இழக்கும். இதுவரை அது நம்மை ஆட்டுவித்த நிலைமை மாறும்.

தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும் -

(3) எவ்வாறெனில், பள்ள மடையில் வீணாகும் நீர் மடை அடைக்கப்பட மேட்டுப் பகுதியில் பாய்வது போல், உலகப் பொருள்கள் மேல் செல்லாது சிவனிடத்தில் செல்வதாகிய மடைமாற்றம் ஏற்படும் என்பதாம்.

தானே தனித்து எம்பிரான்தனைச் சந்தித்தே -

(4) ஐம்புலன் இச்சையில் இருந்து விடுபட்டு தனியே சென்று (தன் முனைப்பின்றி) பரம்பொருளை அடைந்து (ஞான ஆசிரியரை) அவரது திருவடி பற்றியவர்க்கு மேற்கூறியவை சித்திக்கும் என்பதாம்.

29. பரம்பொருள் சிந்தனை - நினைவில் நிற்க:

சந்திப்பது நந்தி தன் திருத்தாளிணை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமம் என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்தி பொற்பாதமே

சந்திப்பது நந்தி தன் திருத்தாளிணை -
நந்தி -> ஞானப்பரஞ்சுடர் / பரம்பொருள்.
ஞானாசிரியர் கண்டு களிக்க வேண்டியது இறைவன் திருவடிகளே.

"நிலம்தன் மேல் வந்து நீள்கழல்கள் காட்டி" - ஞான ஆசிரியராக நிலத்தின் மேல் வந்து அருளிய அவரது திருவடிகளே கண்டுகளிக்க வேண்டியதாம்.

சந்திப்பது நந்தி செய்ய திருமேனி -
பார்த்து மனதால் மகிழ வேண்டியது அத்திருவுருவத்தையே

வந்திப்பது நந்தி நாமம் என் வாய்மையால் -
வாயால் வழிபட்டு நிற்பது அவரது திருநாமத்தையே

புந்திக்குள் நிற்பது நந்தி பொற்பாதமே -
என் அறிவில் நிற்பது அவரது உபதேசமே.

ஆக நெஞ்சிலும் நினைவிலும் நிற்க வேண்டியது பரம்பொருளின் சிந்தனை மட்டுமே என்பதாம்.

---

30. ஞானம் தருவது நாதன் வழிபாடே :

போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியைப்
போகம் தனில் வைத்துப் புண்ணியராயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே

போதம் - அறிவு / ஞானம் / உபதேசம்
கொள்ள வேண்டியதைக் கொண்டும் தள்ள வேண்டியதைத் தள்ளும் மெய்ஞ்ஞானம்

தரும் எங்கள் புண்ணிய நந்தியைப் - அப்பேற்பட்ட ஞானத்தைத் தரும் எங்கள் புண்ணியரான நந்தியை (ஞானகுருவை)

போகம் தனில் வைத்து புண்ணியராயினர் -
தங்கள் நெஞ்சில் (அறிவால்) உணர்ந்து நினைந்து ஞானம் முதிரப் பெற்றவர்களே இவ்வுலகில் புண்ணியவான்கள் ஆவார்கள்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"
- சம்பந்தர்

நாதன் நடத்தால் நயனம் களிகூர – அப் புண்ணியவான்கள் இறைவன் திருநடனம் கண்டு களித்து 'கண்ணும் களிகூர' வாழ்ந்து

வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே - இவ்வுடம்பு நீங்கிய பின் வேதம் போற்றும் சிவபெருமானின் சிவலோகம் அடைவார்கள் என்பதாம்.

ஆக, சிவபுண்ணியர் சிவலோகம் ஆள்வர்
ஏனையோர் மீளப்பிறப்பர் என்பதாம்.

சிவலோகம் அருளும் அப்பயனைப் பெற அருளுருவான தம் ஞான ஆசிரியரை நினைக என்பது கருத்து.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே
- கந்தர் அனுபூதி

உமாபதிதேவ நாயனார்

அருளிய

திருவருட்பயன்

சிவஞானபோதம் - முதல் நூல்
சிவஞான சித்தியார் - வழி நூல்
திருவருட்பயன் - சார்பு நூல்

ஆசிரியர் (கிபி 1313): புறச்சந்தானக் குரவர்களில் உமாபதி சிவாச்சாரியார். அவர் எழுதிய எட்டு நூல்களில் சிவப்பிரகாசம் எனும் நூலுக்கு எளிதில் விளங்க துணையாகி ஆக்கியதே திருவருட்பயன். இது திருக்குறளை அடியொற்றி அமைக்கப் பட்டுள்ளது.

திருவருள் பயன்: திருவருளின் இயல்பு அதனால் உயிர் அடையும் பயன்.

பத்து அதிகாரங்கள்:

வ. எண்	அதிகாரம்	இயல்பு
1	பதிமுதுநிலை	திருவருளை தரும் இறை இயல்பு
2	உயிர் அவை நிலை	திருவருளைப் பெறும் உயிர் இயல்பு
3	இருள் மல நிலை	திருவருளால் நீங்கும் மலத்தின் இயல்பு
4	அருளது நிலை	திருவருளின் உண்மை இயல்பு
5	அருள் உரு நிலை	திருவருளின் உரு ஆகிய குருவின் இயல்பு
6	அறியும் நெறி	உயிர் பேரறிவைப் பெறும் முறைமை
7	உயிர் விளக்கம்	உயிர் மலத்தின் நின்று நீங்கும் முறைமை
8	இன்புறு நிலை	உயிர் பேரின்பத்தைப் பெறும் முறைமை
9	ஐந்தெழுத்து அருள்நிலை	உயிரின் வாசனை மலத்தை அறுக்கும் ஐந்து எழுத்து ஓதும் முறைமை
10	அணைந்தோர் தன்மை	திருவருளால் பேரின்ப நிலையில் உள்ள ஞானிகள் ஒழுகும் முறைமை

காப்பு: நற்குஞ் சரக்கன்று நண்ணில், கலை ஞானம்
கற்குஞ் சரக்கு அன்று காண்

நற்குஞ்சரம் - திருவருளைப் பொழியும் அருள் வடிவம் (பிரணவம்) ஆகிய யானையைப் போன்ற திருமுகத்தை உடையவரும்

கன்று - ஆதியும் அந்தமும் இல்லாத நிலையில் என்றும் இளமையானவரும் ஆகிய விநாயகப் பெருமானை (யானைக்குட்டி)

நண்ணில் - நாம் புகலிடமாக சரணடைந்தால்

கலைஞானம் - மெய்நூல் அறிவு (அபரஞானம்)

கற்கும் சரக்கு அன்று காண் - வருந்தி கற்க வேண்டிய அவசியம் இல்லை. அவனருளால் எளிதில் கிட்டும் என்பதாம்.

கலைஞானம் (அ) அபரஞானம்:

சாத்திர அறிவு (நூல் அறிவு). 5 பொருள் + 36 தத்துவங்கள் + கல்வி, எழுத்து, வேதம், புராணம், இலக்கணம், நீதி சாத்திரங்கள், சோதிடம் உட்பட 64 கலைகள்

பரஞானம் - இறை அனுபவம் (போகம்)

ஆக, கலைஞானமும் திருவருளாலேயே கூடும் என்பது பொருள்

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அற மாற்றும்
பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலா கலைஞானம்
உணர்வறிய மெய்ஞ்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர்
தாம் உணர்ந்தார் அந் நிலையில்

- பெரியபுராணம்

முதல் அதிகாரம்:

பதிமுதுநிலை (இறைவனின் சொரூப நிலை)

பதி - தலைவன் அல்லது காப்பவன்

முது நிலை - அநாதி முத்த சித்து உருவாய் விளங்கும் இயல்பு (பழமையான மேலான சொரூப இயல்பு என்பதாம்)

1. பதி இலக்கணம்:
   அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
   நிகரில் இறை நிற்கும் நிறைந்து

அகர உயிர் போல் - 'அ' - உயிரெழுத்து அனைத்து சொல்லிலும் கலந்து அவற்றை இயக்குவது போல்

நிகரில் இறை - ஒப்பில்லாத இறைவன்

அறிவாகி - உயிர்கள் அறிவு விளக்கம் பெறும் பொருட்டு அவற்றை இயக்கும் விதமாக

எங்கும் நிற்கும் நிறைந்து - உயிரோடும் சடத்தோடும் கலந்து நிற்பன்

ஆக, இறைவன் எல்லாவற்றிலும் கலந்து இருந்தாலும் (தடத்தை) அவன் ஒப்பிலாதவன் (சொரூபம்) என்பதாம்.

வைப்பு மாடென்று மாணிக்கத்
    தொளியென்று மனத்திடை உருகாதே
செப்பு நேர்முறை மடவர லியர்தங்கள்
    திடத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி லிறந்தன
    ஒண்மலர்த் திருப்பதத்
தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
    அதிசயங் கண்டாமே

- திருவாசகம் (அதிசயப் பத்து-1)

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொணி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே

- திருமந்திரம்

அறிவாகி என்பது நாத சொரூபமாய், நாதம் அனைத்து எழுத்துக்கும் முதலானதும் அவற்றின் தோற்றத்திற்கு காரணமான 'அ' குறித்தது.

நாதம் -> ஞான சக்தி - ஒலி

---

2. இறைவன் சிவசக்தியாய் இருக்கும் நிலை:

தன் நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி பின்னம் இலான் எங்கள் பிரான்

தன் நிலைமை - ஒப்பற்ற சிவத்தின் தன்மையை

மன் உயிர்கள் - என்றும் உள்ள உயிர்கள்

சாரத் தரும் - சாரும் பொருட்டு (பெறும் பொருட்டு) உயிர்களுக்கு உதவ

எங்கள் பிரான் - எங்கள் தலைவனாகிய சிவபெருமான்

சக்தி பின்னம் இல்லான் - சக்தியோடு என்றும் பிரிப்பின்றி தாதான்மிய சம்பந்தமாய் உள்ளான் (பழமும் சுவையும் போல)

(உ-ம்)

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே

- திருவாசகம்

3. ஒப்பிலாதன உவமனில் இறந்தன:
பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்புஇன்மை யான்

பெருமை - எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி அனைத்தையும் கடந்து வியாபகமாய் நிற்கும் தன்மை.

(உ-ம்) அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் - திருவாசகம்

அண்டத்தின் விளக்கம்:

- அளத்தற்கு அரியது
- வளப்பத்தை உடைய பெருந்தோற்றம்

ஒரு அண்டத்திற்கும் மறு அண்டத்திற்கும் உள்ள தொடர்பைச் சொல்லும் போது,

- 101 கோடியினும் அதிகப்பட பரந்திருந்தன
- ஆயினும் அவை வீட்டுக் கூரையின் சூரியக் கதிரின் அணுவிற்கு ஒப்பாகும்

அவ்வளவு பெரியவன் சிவன்.

ஆக 224 புவனங்களும் அணு எனில் சிவன் எவ்வளவு பெரியவன் என்பது உபசாரமாகும். உண்மையில் எண்ணுதற்கு எட்டாதவன்.

நுண்மை - எல்லா பொருளிடத்தும் ஊடுருவி உள்கலந்த நுட்பம்.

ஆக,
அணுவிற்கு அணுவாய் - நுண்மை
அப்பாலுக்கு அப்பாலாய் - பெருமை

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய
நுண்ணுணர்வே - திருவாசகம்

கருவூர்த்தேவர்:

அண்டம் ஓர் அணுவாம் பெருமைகொண்டு
அணு ஓர் அண்டமாம் சிறுமைகொண்டு அடியேன்
உண்டவுண் உனக்காம் வகையெனது உள்ளம்
உன்கலந்தெழும் பரஞ்சோதி
கொண்ட நாண் பாம்பாப் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள் மூன்றெரித்த
கண்டன் நீல கண்டனே கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே - திருவிசைப்பா

பேரருட்கும் - எல்லா உயிரிடத்தும் என்றும் மாறாத பெரும் சலிப்பில்லா கருணை

பேற்றின் அருமைக்கும் - யாரும் பெறுதற்கு அரிய பேரின்பத்தை உடையவன்

உ-ம்: மூவராலும் அறியொண்ணா
முதலாய ஆனந்த மூர்த்தியான் - திருவாசகம்

ஒப்பின்மையான் - மேற்கண்ட சிவனது பெருமைக்கும் நுண்மைக்கும் அருளுக்கும் அருமைக்கும் ஒப்பில்லாதவன் என்பதாம்.

4. சிவத்தின் அருள்செயல்கள் ஐந்து:
ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப் போக்கும் அவன் போகாப் புகல்

எவையும் ஆக்கி - உயிர்களுக்காக தனு, கரண, புவன, போகங்களைப் படைத்தும்

அளித்து - அவற்றை ஒரு கால எல்லை வரை காத்தும், உயிருக்கு பக்குவம் வரும் வரை மறைப்பாற்றலை அருளியும்

ஆசு உடன் அடங்க - பேரூழிக் காலத்தில் உயிர்கள் ஆணவ மலத்துடன் கேவலமாய் நிற்கும்படி ஒடுக்கியும்

(ஆசுடன்) போக்கும் அவன் - பக்குவம் பெற்ற உயிருக்கு மலங்களையும் போக்கி தன்னை அடையும்படி அருளைச் செய்தும்

போகாப் புகல - மேற்கண்ட ஐந்து தொழில்களையும் உயிருக்கு செய்து புகலிடமாய் இருப்பவன் சிவபெருமான் ஒருவனே

5. சிவபெருமான் திருமேனிகள்:

அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன்

அருவும் - நாதம் (சிவம்), விந்து (சக்தி)

அருவுரு - சாதாக்கியம் -> லிங்கம்
லிம் -> லயம் -> ஒடுங்குதல்
கம் -> வெளிவருதல் -> தோன்றுதல்

உரு - ஈஸ்வரம்

அறிஞர்க்கு அறிவாம் உருவும் - ஞானிகளுக்கு ஞானவடிவாய் அஞ்செழுத்து திருமேனியாய்

உடையான் உளன் - உயிர்களை உடையவன் ஆகிய எங்கள் தலைவன் மேற்கண்டவாறு திருமேனிகளை உடையவன் ஆவான்.

பல்வேறு திருமேனிகள் ஏன்?

குழந்தைப் பருவத்திற்கு ஏற்ப விளையாட்டுப் பொருள் மாறுவது போல, பக்குவத்திற்கு ஏற்ப உருவ வழிபாடு மாறுபடும். இறைவன் மாறுவதில்லை என்பதாம்.

உ-ம்: பனிக்கட்டி - உருவம்
நீர் - அருவுருவம்
நிராவி - அருவம்

6. தனக்கு மேல் தலைவன் இல்லாதவன்:

பல்ஆர் உயிர் உணரும் பான்மைஎன
மேல்ஒருவன் இல்லாதான் எங்கள் இறை

பல்ஆர் உயிர் - எண்ணிலி ஆன்மாக்கள்

உணரும் பான்மை என - தலைவன் அருளிய கருவி கரணங்களைக் கொண்டு அறியும் தன்மை போல

எங்கள் இறை மேல் ஒருவன் இல்லாதான் - தலைவனாகிய இறைவன் அறிய மாட்டான். ஏனெனில் அவனுக்கு மேல் ஒரு தலைவன் இல்லை

ஆக,
உயிர் தலைவன் அறிவித்தால் அறியும். உயிருக்கு கருவி கரணங்கள் தேவை. இறைவன் அறிவிக்காமல் அறிவான். அவனுக்கு கருவி கரணங்கள் தேவையில்லை. இறைவன்,

தூய உடம்பினன்
தன்வயமுடையவன்
முற்றும் உணர்ந்தவன்
இயற்கை உணர்வினன்

7. வானவருக்கு அரியன் அடியவருக்கு எளியன்:

ஆனா அறிவாய் அகலான், அடியவர்க்கு
வான்நாடர் காணாத மன்

ஆனாமை - நீங்காமை

ஆனா அறிவாய் - சிவம் எவ்விடத்தும் நீங்காது ஞான சொரூபமாய் நின்று

அகலான் அடியவர்க்கு - தன் அடியவர்க்கு அவர்களை விட்டு நீங்காமல் நின்று பேரின்பத்தை நுகரச் செய்வான்.

தேவ தேவன்மெய்ச் சேவகன்
தென்பெ ருந்துறை நாயகன்
மூவராலும் அரியொ ணாமுத
லாய ஆனந்த மூர்த்தியான்
யாவராயினும் அன்பரன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னிச் சுடருமே

- திருவாசகம் (சென்னிப்பத்து)

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

- திருவாசகம் (சிவபுராணம்)

வான் நாடர் காணா மன் - மேற்கண்ட பேரின்பத்தை நுகரச்செய்வது யார் எனின், பசு புண்ணியரான தேவர் அறியாத சிவமே

(மன் -> சிவம் - மன்னன்)

ஆக, சிவம் அடியவருக்கு தயிரில் நெய்யாகவும் அல்லாதவருக்கு பாலில் நெய்யாகவும் இருப்பான் என்பதாம்.

---

8. இறை வியாபகம்:

எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும் அவன் தானே தனி

அவன் எங்கும் எவையும் - சிவம் சடத்தோடும் உயிரோடும்

எரியுறு நீர் போல் - நீரில் பொருந்திய சூடு போல் கலந்துள்ளான் (தடத்தை)

ஏகம் தங்கும் - அவ்வாறு அவற்றோடு வேறறக் கலந்து நின்றாலும்

தானே தனி - அவற்றின் தன்மை தன்னைச் சாராமல் கடந்து (சொரூபம்) நிற்பான் என்பதாம்

ஆக, இங்கு அத்துவிதம் உணர்த்தப் படுகிறது.

- சூடு நீரோடு கலந்து ஒன்றாயும்
- சூடு தன்மை நீருக்கு வேறாயும்
- சூட்டினால் ஏற்படும் விளைவு உடனாயும்
- பாத்திரத்தை வெப்பம் கலந்த நீரில் கழுவ, பாத்திரத்தில் உள்ள அழுக்கு நீரைச் சாரும். வெப்பத்திற்கு பாதிப்பு இல்லை. அதுபோல் உயிருக்கு ஏற்படும் பாதிப்பு சிவத்துக்கு இல்லை என்பதாம்.

9. சிவம் பாரபட்சமின்றி அருளுவான்:

நலம் இலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு
நல்லன்; சலம் இலன்; பேர் சங்கரன்

பேர் சங்கரன் - எல்லா உயிர்க்கும் அன்றும் இன்றும் என்றும் இன்பத்தை வழங்கும் சங்கரன் (இன்ப வடிவினன்) எனும் திருப்பெயரைக் கொண்டிருக்கும் இறைவன்

சலம் இலன் - சார்ந்தவர், சாராதவர் என்ற விருப்பு வெறுப்பு இன்றி அருளுவான். எவ்வாறெனில்,

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி
சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல

-திருக்குறள் (1.004)

நண்ணினர்க்கு நல்லன் - குருநாதர் வெளிப்படும் நிலை - தன்னைச் சார்ந்தவர்க்கு பேரின்பத்தை வழங்கியும் (அருளாற்றல் / அறக்கருணை)

நண்ணார்க்கு நலம் இலன் - குருநாதர் வெளிப்படாத நிலை - தன்னைச் சாராதவர்க்கு மறைப்பாற்றலையும் வழங்குவான் என்பதாம் (மறக்கருணை)

உ-ம்:

சலம் இலன், சங்கரன், சார்ந்தவர்க்கு அலால்
நலம் இலன், நாள்தொறும் நல்குவான் நலன்;
குலம் இலர் ஆகிலும் குலத்துக்க ஏற்பதோர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே

-அப்பர் (நமச்சிவாய பதிகம் 4.11.6)

உள்ளத்திருந்தும் ஒளித்தான் பரன்; குரவன்
கள்ளம் தவிர்த்து அதனைக் காட்டினான்

- தாயுமானவர்

குரவன் - குரு, உள்ளத்தில் ஒளித்திருந்த சிவனைக் காட்டியவர் குருநாதர்

---

10. மருந்துமாகி தீராநோய் தீர்த்து அருள வல்லான்:

உன்னும் உளது, ஐயம்இலது, உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து

மன்னுபவம் - மன்னு -> அநாதி (நிலைபெற்று)
பவம் -> பிறவி
பிறவி நோய்க்குக் காரணமான ஆணவமலம் நீங்கும்பொருட்டு சிவபெருமான்

உணர்வாய் - ஞானவடிவாய் நின்று (குருநாதராய்)

தீர்க்கும் மருந்து - திருவருள் எனும் மருந்தை ஊட்டி ஆணவப் பற்று என்ற நோயை நீக்கும் மருந்தாக இருப்பவன் சிவம் அவனை

ஓவாது உன்னும் - இடைவிடாது வழிபட

உளன் - பிறவி நீங்கி பேரின்பம் கிட்டும் என்பதாம்

ஐயம் இலது - இதில் எந்த ஐயமும் இல்லை என்பதாம்

ஆக, ஆணவமே பிறவிக்குக் காரணம். குருவாய் வரும் சிவத்தை வழிபட ஆணவம் நீங்கும் என்பதாம்.

இரண்டாம் அதிகரணம்

உயிர் அவை நிலை - திருவருளைப் பெரும் உயிர் இயல்பு

11. உயிர்கள் எண்ணிலி:

பிறந்தநாள், மேலும் பிறக்கும்நாள் போலும்,
துறந்தோர், துறப்போர் தொகை

துறந்தோர் தொகை - இதுவரை முத்தி பெற்ற ஆன்மாக்களின் எண்ணிக்கை என்பது

பிறந்தநாள் - அவ்வான்மாக்கள் பல பிறவிகளில் பிறந்து வாழ்ந்த நாட்களுக்குச் சமம்.

துறப்போர் தொகை - இனி முத்திபெற இருக்கும் ஆன்மாக்களின் எண்ணிக்கை

மேலும் பிறக்கும் நாள் போலும் - இதற்கு முன்னர் பிறந்து வாழ்ந்த நாட்கள் மற்றும் இனி பிறந்து வாழும் நாட்களுக்கு கூட்டுத் தொகைக்கு சமம் என்பதாம்

உ-ம்: துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

- திருக்குறள் (3.022)

ஆக, உயிர்கள் உண்டு என்றும் அவை எண்ணிலி என்பது உணரப்படுகிறது.

12. ஆன்மாக்கள் நிலை மூன்று:

திரிமலத்தார்; ஒன்று அதனில் சென்றார்கள்;
அன்றி ஒருமலத்தா ராயும் உளர்.

திரிமலத்தார் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம் உடையவர் சகலர் (பிரகிருதி மாயா புவனம்)

அதனில் ஒன்று - மும்மலத்துள் ஒன்றாகிய மாயை நீங்கி, ஆணவம், கன்மம் ஆகிய இருமலம் உடையவர் பிரளாயகலர் (அசுத்தமாயா புவனம்)

அன்றியும் - இவர்கள் இருவரைத் தவிர

ஒரு மலத்தாராயும் உளர் - ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர் ஆன்மாவாகவும் (சுத்த மாயா புவனம்)

மூன்று நிலைகளில் ஆன்மாக்கள் உள்ளன என்பதாம்.

---

13. மூவகை ஆன்மாக்களின் வேறுபாடு:

மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து
உள்ளார்கள்;
தோன்றலர் தொத்து உள்ளார் துணை

மூன்று திறத்து உள்ளார் - மேற்சொன்ன மூவகை நிலை ஆன்மாக்களும்

மூலமலத்து உள்ளார்கள் - அநாதியே ஆணவ மலப் பற்று உடையவர்களே

துணை உள்ளார் - இதில் சகலர், பிரகிருதி மாயையோடு தொடர்பு உடையவர் (துணை)

தொத்து தோன்றலர் - அதனால் அவர்கள் தமக்கு தோன்றாத் துணையாக இருக்கும் இறைவன் இருப்பை அறியாது மயங்கி நிற்பர் என்பதாம்.

---

14. ஆன்மா தனித்து இயங்காது:

கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னோ செயல்?

நாளும் கண்டவற்றை - நாள்தோறும் நனவில் கண்ட பொருள்களை

கனவில் கலங்கியிடும் - கனவில் மாறுபட்டு கண்டு கலக்கம் அடைகின்ற

திண்திறளுக்கு என்னோ? செயல் - அற்பத் திறன் கொண்ட தன்னால் தனித்து எதுதான் செய்யமுடியும்.

15. தனித்து இயங்கமுடியாத ஆன்மாவிற்கு சித்து என்ற பெயர் பொருந்துமோ?

பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவுஎன்ற பேர், நன்று அற

பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்கு - பொறிகளின் உதவியின்றி விடயங்களை அறியமுடியாத உயிர் அறிவுக்கு

அறிவு என்று பேர் நன்று அற - அறிவுடையது என்னும் பெயர் பொருந்தார்

ஆக அறிவிக்க அறிவது ஆன்மா என்பதாம்.

16. அறிவித்தால் அறியும் உயிர்:

ஒளியும், இருளும், உலகும், அலர்கண்
தெளிவுஇல் எனில், என் செய?

ஒளியும் - சூரியன், நெருப்பு முதலிய சுடர்களும்

இருளும் - மயக்கத்தைத் தருவதாகிய இருளும்

உலகும் - பல்வேறு பொருள்களைக் கொண்டு நிற்கும் உலகமும்

அலர்கண் தெளிவுஇல் எனில் என்செய - நாம் விழித்திருக்கும்போது நம் கண்ணுக்கு மேற்கண்டவற்றை காணும் திறன் இல்லை எனில் என்ன பயன் என்பதாம்.

இக்குறளில் உதாரணம் மட்டும் சொல்லப் படுகிறது. ஆசிரியர் கூற வரும் கருத்து என்னவெனில், இல்லது தோன்றாது உள்ளதே சிறக்கும் (சற்காரிய வாதம்).

- உயிர்க்கு அறிவித்தால் அறியும் திறன் இயல்பாக உண்டு (கண் வெளிச்சம் வர அறியும்)
- சடம் அறிவித்தாலும் அறியாது (சடம் வெளிச்சம் வந்தாலும் அறியாது)

அறியாமை -> அறிவு விளங்காமை

ஆக, உயிர்க்கு இயற்கையில் அறிவு இச்சை செயல் ஆகிய மூன்றும் உள்ளன என்பதாம்.

---

17. சார்ந்ததாம் தன்மை (சடசத்து):

சத்து, அசத்தைச் சாராது; அசத்து அறியாது;
அங்கண் இவை உய்த்தல் சதசத்தாம் உயிர்

சத்து (சிவம்) - தோற்றக்கேடு இல்லாதது. என்றும் எந்தவொரு மாற்றத்திற்கும் உட்படாது ஒரு தன்மையாய் நிற்பது

அசத்து - தோற்றக்கேடு உடையது. இந்த உலகம் மாறுபாடு உடையது. நிலையற்றது

சத்து அசத்சை சாராது - சத்தாகிய சிவத்துக்கு அசத்து தேவையில்லை

அங்கண் இவை உள்ள உயிர் சதசத்தாம் - அவ்வாறு இருக்க,

இறைவன் - சத்து
பாசம் - அசித்து
உயிர் - சதசத்து

ஆக, உயிர் சத்தோடு கூடும்போது சத்தாயும் அசத்தோடு கூடும்போது அசத்தாயும் நிற்கும் "சதசத்து" என்பதாம்.

18.சார்ந்ததாம் வன்னம் தன்மை:

இருளில் இருள்ஆகி எல்இடத்தில்
எல்ஆம் பொருள்கள் இலதோ புவி

இருளில் இருள் ஆகி - பொருள்கள் இருளில் இருட்டாகவும்

எல்இடத்தில் எல்ஆம் - வெளிச்சம் வர விளங்கியும் தோன்றும்

பொருள்கள் புவி இலதோ - அப்படிப் பட்ட பொருள்கள்தான் இப் பூமியில் உள்ளன.

(இலதோ -> உள்ளன)

ஆக மேற்கண்ட உதாரணத்தில் இருந்து, உயிர் ஆணவத்தை சார அறியாமையும், திருவருளை சார அறிவு விளக்கம் பெறும் என்பதாம்.

19. இறை வியாபகம்:

ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
ஆம்; மன்கண் காணா தவை

ஊமன்கண் போல - ஆந்தையின் கண்ணுக்கு (கண் சதையால்) சூளிய ஒளி தோன்றாமல் இருப்பது போல

ஒளியும் மிக இருளே ஆம் - உயிருக்குத் திருவருள் தோன்றாமல் நிற்கும்

மன்கண் காணாதவை - ஏனெனில் ஆணவம் என்ற அறியாமையால்

ஆக,

ஆந்தைக்கு கண் சதையால் வெளிச்சம் தெரியவில்லை.

உயிர்க்கு ஆணவத்தால் திருவருள் தெரியவில்லை.

---

20. மனிதப் பிறவியின் நோக்கம் :

அன்றுஅளவும் ஆற்றும்உயிர் அந்தோ!
அருள்தெரிவது
என்று? அளவுஒன்று இல்லா இடர்.

அன்று அளவு ஒன்று இல்லா இடர் ஆற்றும் உயிர் - அநாதியே பிறந்து இறந்து அளவு இல்லா துன்பங்களைத் தாங்கி நிற்கும் உயிர்

அந்தோ? அருள் தெரிவது என்று? - ஐயகோ ஆணவம் நீங்கி திருவருள் பெற்று பேரின்பத்தைப் பெறுவது எப்போது என்பதாம்.

உ-ம்:

என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னாயகமே பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே

- திருவாசகம் (50.2)

மூன்றாம் அதிகாரம்

இருள்மல நிலை (பாசம்)

1வது குறளில் ஆணவம் பற்றியும் 10வது குறளில் கன்மம், மாயை பற்றியும் குறிப்பிடுகின்றார்

21. முப்பொருளும், இன்ப துன்பமும் உள் பொருள்கள்:

துன்றும் பவத்துயரும், இன்பும், துணைப்
பொருளும் இன்று என்பது எவ்வாறும் இல்

துன்றும் பவத்துயரும் - நெருங்கிய பிறவித் துன்பமும்

இன்பமும் - முத்தி ஆகிய பேரின்பமும்

துணைப்பொருளும் - பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய மும்மலமும், முத்திக்குக் காரணம் ஆகிய திருவருளும்

இன்று என்பது எவ்வாறு இல் - இல்லை என்பது ஏற்கத் தக்கது அல்ல (மூன்று அளவைகளின்படி - காண்டல் - அனுபவம்; கருதல் - யுத்தி; ஆகமம் - சுருதி)

மேற்கண்டவற்றை இல்லை என்று கூறினால் ஆணவமே காரணம்.

22. விபரீத உணர்வை ஏற்படுத்துவது ஆணவம்:

இருள்ஆனது அன்றி இலது: எவையும் ஏகப் பொருள் ஆகி நிற்கும் பொருள்

எவையும் - உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும்

ஏகப்பொருள் ஆகி நிற்கும் பொருள் - நமக்கு உரியன அல்லாத பொருள்களை நம் பொருள்களாகக் கருதி மயக்கச் செய்வது

இருள் ஆனது அன்றி இலது - ஆணவம் அன்றி வேறு பொருள் இல்லை என்பதாம் (ஆணவம் - உயிர் வியாபக அறிவை தடுத்து அணுத் தன்மை படுத்தும்)

23. ஆணவம் இருளினும் கொடியது:

ஒருபொருளும் காட்டாது இருள்; உருவம் காட்டும்; இருபொருளும் காட்டாது இது

ஒருபொருளும் காட்டாது இருள் - புற இருள் பொருள்களைக் காட்டாது

உருவம் காட்டும் - தன் கரிய இருட்டு என்ற உருவத்தைக் காட்டும்

இது இருபொருளும் காட்டாது - ஆனால் ஆணவம் பிறபொருளின் தன்மையை மறைப்பது அல்லாமல் தனது இருப்பையும் மறைக்கும். ஆகவே, இருளினும் கொடிது ஆணவம்.

ஆக,

இருள் கரிய இருட்டைக் காட்டினால் விளக்கு ஒளியால் காத்துக் கொள்ளலாம். ஆனால் ஆணவம் தன் இருப்பையும் மறைத்துவிடுகிறது. அதாவது, ஒருவன் தீயதை செய்துவிட்டு, அது தீயது என்று தெரியாமல் சாதுரியம் என்று நினைப்பது போலாகும். அதுபோல் ஆணவம் உயிர் அறிவை மறைத்து நிற்கும் தன் இயல்பை மறைத்து நிற்கிறது.

24. ஆணவம் அநாதியே உயிரோடு உள்ளது:

அன்று அளவி உள்ஒளியோடு ஆவியிடை அடங்கி, இன்றுஅளவும் நின்றது இருள்

அன்று அளவி - செம்பில் களிம்பு போல உயிரோடு அநாதியே கலந்து இருப்பதால்

உள்ஒளியோடு ஆவியிடை அடங்கி - உயிருக்கு உயிராய் இருக்கும் சிவமும் அந்த ஆன்மாவோடு அநாதியே கலந்து நின்றாலும், அது சிவத்தை சாராது ஆணவத்தைச் சார்ந்து இருப்பதால்

இன்றளவும் நின்றது - ஆணவம் இன்று வரை நீங்காது நிற்கிறது.

---

25. ஆணவத்தின் ஆற்றல்:

பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்கு உண்டு என்றும் கணவர்க்கும் தோன்றாத கற்பு

பலரைப் புணர்ந்தும் - ஆணவம் எண்ணில்லாத உயிர்களை பொருந்தி கலந்து நின்றாலும்

இருட்பாவைக்கு - ஆணவம் அப்பெண்ணுக்கு

கணவர்க்கும் தோன்றாத - தன் கணவர்கள் ஆகிய உயிர்களுக்கும் தன்னை முழுமையாக காட்டிக்கொள்ளாமல் இருக்கும்.

கற்பு என்றும் உண்டு - நியமமும் உண்டு

ஆக கற்புள்ள பெண் தன் கணவருக்கு தன் தன்மையைக் காட்டி நிற்பர்.

அதற்கு மாறாக, ஆணவம் அனைத்து ஆன்மாவோடு சேர்ந்தும் அந்த ஆன்மாக்களுக்கு தன் தன்மையை காட்டாமல் நிற்கிறது.

இவ்வாறு கற்புடைய பெண்ணோடு ஆணவத்தை ஒப்பிட்டு புகழ்வது போல் இகழ்கின்றார்.

19. இறை வியாபகம்:

ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
ஆம்; மன்கண் காணா தவை

ஊமன்கண் போல - ஆந்தையின் கண்ணுக்கு (கண் சதையால்) சூளிய ஒளி தோன்றாமல் இருப்பது போல

ஒளியும் மிக இருளே ஆம் - உயிருக்குத் திருவருள் தோன்றாமல் நிற்கும்

மன்கண் காணாதவை - ஏனெனில் ஆணவம் என்ற அறியாமையால்

ஆக,

ஆந்தைக்கு கண் சதையால் வெளிச்சம் தெரியவில்லை.

உயிர்க்கு ஆணவத்தால் திருவருள் தெரியவில்லை.

---

20. மனிதப் பிறவியின் நோக்கம் :

அன்றுஅளவும் ஆற்றும்உயிர் அந்தோ!
அருள்தெரிவது
என்று? அளவுஒன்று இல்லா இடர்.

அன்று அளவு ஒன்று இல்லா இடர் ஆற்றும் உயிர் - அநாதியே பிறந்து இறந்து அளவு இல்லா துன்பங்களைத் தாங்கி நிற்கும் உயிர்

அந்தோ? அருள் தெரிவது என்று? - ஐயகோ ஆணவம் நீங்கி திருவருள் பெற்று பேரின்பத்தைப் பெறுவது எப்போது என்பதாம்.

உ-ம்:

என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னாயகமே பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே

- திருவாசகம் (50.2)

மூன்றாம் அதிகாரம்

இருள்மல நிலை (பாசம்)

1வது குறளில் ஆணவம் பற்றியும் 10வது குறளில் கன்மம், மாயை பற்றியும் குறிப்பிடுகின்றார்

21. முப்பொருளும், இன்ப துன்பமும் உள் பொருள்கள்:

துன்றும் பவத்துயரும், இன்பும், துணைப்
பொருளும் இன்று என்பது எவ்வாறும் இல்

துன்றும் பவத்துயரும் - நெருங்கிய பிறவித் துன்பமும்

இன்பமும் - முத்தி ஆகிய பேரின்பமும்

துணைப்பொருளும் - பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய மும்மலமும், முத்திக்குக் காரணம் ஆகிய திருவருளும்

இன்று என்பது எவ்வாறு இல் - இல்லை என்பது ஏற்கத் தக்கது அல்ல (மூன்று அளவைகளின்படி - காண்டல் - அனுபவம்; கருதல் - யுத்தி; ஆகமம் - சுருதி)

மேற்கண்டவற்றை இல்லை என்று கூறினால் ஆணவமே காரணம்.

22. விபரீத உணர்வை ஏற்படுத்துவது ஆணவம்:

இருள்ஆனது அன்றி இலது: எவையும் ஏகப் பொருள் ஆகி நிற்கும் பொருள்

எவையும் - உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும்

ஏகப்பொருள் ஆகி நிற்கும் பொருள் - நமக்கு உரியன அல்லாத பொருள்களை நம் பொருள்களாகக் கருதி மயக்கச் செய்வது

இருள் ஆனது அன்றி இலது - ஆணவம் அன்றி வேறு பொருள் இல்லை என்பதாம் (ஆணவம் - உயிர் வியாபக அறிவை தடுத்து அணுத் தன்மை படுத்தும்)

23. ஆணவம் இருளினும் கொடியது:

ஒருபொருளும் காட்டாது இருள்; உருவம் காட்டும்; இருபொருளும் காட்டாது இது

ஒருபொருளும் காட்டாது இருள் - புற இருள் பொருள்களைக் காட்டாது

உருவம் காட்டும் - தன் கரிய இருட்டு என்ற உருவத்தைக் காட்டும்

இது இருபொருளும் காட்டாது - ஆனால் ஆணவம் பிறபொருளின் தன்மையை மறைப்பது அல்லாமல் தனது இருப்பையும் மறைக்கும். ஆகவே, இருளினும் கொடிது ஆணவம்.

ஆக,

இருள் கரிய இருட்டைக் காட்டினால் விளக்கு ஒளியால் காத்துக் கொள்ளலாம். ஆனால் ஆணவம் தன் இருப்பையும் மறைத்துவிடுகிறது. அதாவது, ஒருவன் தீயதை செய்துவிட்டு, அது தீயது என்று தெரியாமல் சாதுரியம் என்று நினைப்பது போலாகும். அதுபோல் ஆணவம் உயிர் அறிவை மறைத்து நிற்கும் தன் இயல்பை மறைத்து நிற்கிறது.

24. ஆணவம் அநாதியே உயிரோடு உள்ளது:

அன்று அளவி உள்ஒளியோடு ஆவியிடை அடங்கி, இன்றுஅளவும் நின்றது இருள்

அன்று அளவி - செம்பில் களிம்பு போல உயிரோடு அநாதியே கலந்து இருப்பதால்

உள்ஒளியோடு ஆவியிடை அடங்கி - உயிருக்கு உயிராய் இருக்கும் சிவமும் அந்த ஆன்மாவோடு அநாதியே கலந்து நின்றாலும், அது சிவத்தை சாராது ஆணவத்தைச் சார்ந்து இருப்பதால்

இன்றளவும் நின்றது - ஆணவம் இன்று வரை நீங்காது நிற்கிறது.

25. ஆணவத்தின் ஆற்றல்:

பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்கு உண்டு என்றும் கணவர்க்கும் தோன்றாத கற்பு

பலரைப் புணர்ந்தும் - ஆணவம் எண்ணில்லாத உயிர்களை பொருந்தி கலந்து நின்றாலும்

இருட்பாவைக்கு - ஆணவம் அப்பெண்ணுக்கு

கணவர்க்கும் தோன்றாத - தன் கணவர்கள் ஆகிய உயிர்களுக்கும் தன்னை முழுமையாக காட்டிக்கொள்ளாமல் இருக்கும்.

கற்பு என்றும் உண்டு - நியமமும் உண்டு

ஆக கற்புள்ள பெண் தன் கணவருக்கு தன் தன்மையைக் காட்டி நிற்பர்.

அதற்கு மாறாக, ஆணவம் அனைத்து ஆன்மாவோடு சேர்ந்தும் அந்த ஆன்மாக்களுக்கு தன் தன்மையை காட்டாமல் நிற்கிறது.

இவ்வாறு கற்புடைய பெண்ணோடு ஆணவத்தை ஒப்பிட்டு புகழ்வது போல் இகழ்கின்றார்.

26. அறிவித்தால் அறியும் உயிர்:

பன்மொழிகள் என்? உணரும் பான்மை
தெரியாத தன்மை, இருளார் தந்தது

உணரும் பான்மை தெரியாத தன்மை - மெய்யுணர்வை (மெய்ப்பொருள்) அறியாமல் நிற்கும் மயக்கத் தன்மையானது பற்றி

பன்மொழிகள் என்? - பல காரணம் நாம் பேசி பயன் இல்லை. ஏனெனில்

இருளார் தந்தது - அந்த அறியாமையால் நிற்கும் மயக்கத்தை உயிருக்கு ஏற்படுத்தியது ஆணவமே

ஆக, ஆணவம் அறியாமையை
கன்மம் அனுபவத்தை
மாயை ஓரளவு அறிவு விளக்கத்தை
உயிருக்குச் செய்கின்றன என்பதாம்.

27. ஆணவம் உயிரின் குணம் அல்ல... குற்றம்:

இருள் இன்றேல் துன்பு என்? உயிர் இயல்பேல்
போக்கும் பொருள் உண்டேல் ஒன்றாகப் போம்.

இருள் இன்றேல் துன்பு என் - ஆணவம் என்று ஒன்று இல்லை என்றால் உயிருக்கு ஏன் பிறவி என்ற துன்பம் வரப்போகிறது? வராது என்பதாம்.

உயிர் இயல்பேல் - அந்த ஆணவம் உயிரின் இயல்பு அதாவது குணம் என்றால் அது பொருந்தாது. ஏனெனில்

போக்கும் பொருள் உண்டேல் - முத்தி நிலையில் அறியாமையைப் போக்கும் ஞானம் ஏற்பட

ஒன்றாகப் போம் - ஆணவம் குணம் எனில் அதன் குனியாகிய உயிரும் இல்லாமல் போய்விடும். முத்தி என்பதும் இல்லாமல் போய்விடும்.

ஆக உயிரின் குணம் - அறிவு,
குற்றம் - ஆணவம்.

முத்தியில் ஆணவம் கெட்டு உயிர் அழியாது இன்புற்றிருக்கும் என்பதாம்.

28. ஆணவம் அநாதி:

ஆசு ஆதியேல் அணைவ காரணம் என்?
முத்திநிலை பேசாது அகவும் பிணி

ஆசு ஆதியேல் - ஆணவம் உயிருக்கு இடையில் சேர்ந்தது எனில்

அணைவ காரணம் என் - அவ்வாறு இணைய காரணம் என்ன? இல்லை என்பதாம்.

முத்திநிலை பிணி பேசாது அகவும் - முத்தி நிலையில் இடையில் சேர்ந்து நீங்கிய ஆணவம் முன்பு போலவே ஒரு காரணம் இன்றி உயிரை மீண்டும் பிடிக்கக் கூடும்.

ஆக, அநாதியே செம்பில் களிம்பு போல உயிரோடு கலந்துள்ளது. அநாதியே உயிரின் அறிவை ஆணவம் மறைத்து நிற்கிறது என்பதாம்.

29. ஆணவம் நீங்க மாயையே கருவி

ஒன்று மிகினும் ஒளி கவராதேல், உள்ளம்
என்றும் அகலாது இருள்

ஒன்று மிகினும் - இறைவனின் பெரும் கருணையால் மாயையில் இருந்து உயிருக்கு தனு கரண புவன போகம் பெற்ற காலத்திலும்

உள்ளம் ஒளி கவராதேல் - உயிர் அறிவு விளக்கம் பெறாது போனால்

இருள் என்றும் அகலாது - உயிர் ஒருபோதும் ஆணவத்தின் பிடியில் இருந்து விடுபடப் போவதில்லை

ஆக, ஒளிப் பொருளாகிய மாயையில் இருந்து உயிர் இருளாகிய ஆணவத்தை போக்கிக் கொள்ள வேண்டும் என்பதாம்.

30. காரியப் பொருள் மாயை - காரியச் செயல் கன்மம்:

விடிவாம் அளவும் விளக்கனைய
மாயை வடிவாதி கன்மத்து வந்து

விடிவாம் அளவு விளக்கு அனைய - விடியும் வரை (முத்தி) இருட்டை (ஆணவம்) ஓரளவு நீக்கும் விளக்கு போல

மாயை வடிவாதி - மாயையின் காரியப் பொருள்களாகிய தனு கரண புவன போகம்.

கன்மத்து வந்து - உயிர் செய்த இருவினைக்கு ஏற்ப காரியச் செயல்களாக கன்மத்தால், இன்ப துன்பங்களை நுகர்கின்றன.

ஆக, மாயையின் காரியப் பொருள்களை பயன்படுத்தி காரியச் செயல்களாக பதி புண்ணியம் செய்து பிறவிப் பிணியில் இருந்து விடுபட வேண்டும்.

நான்காம் அதிகாரம்:
அருளது நிலை

31. திருவருளின் பெருமை:

அருளில் பெரியது அகிலத்துஇல் வேண்டும்
பொருளில் தலையிலது போல்

அகிலத்து வேண்டும் பொருளில் - இந்த உலகில் அந்தந்த நேரத்தில் தேவையான இன்றியமையாத பொருள்போல

பெரும் நெருப்பை அணைக்க - நீர்
(நெருப்பின் முன் நீரே பிரதானம்)
பாலைவனத்தில் தாகம் - நீரே பிரதானம்

தலையிலது போல - அதற்கு மேலான பொருள் அல்லது ஒப்பான பொருள்

அருளில் பெரியது இலது - திருவருளுக்கு மேலானது ஒன்றுமில்லை என்பதாம்.

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்போன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையார் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி - அப்பர்

ஆக,

சக்தி	
அருள் விளையாட்டு	
உயிரின் பக்குவத்திற்காக மும்மலங்களோடு உழலச் செய்வது திரோதான சக்தி	பக்குவம் பெற்ற காலத்தில் திருவருள் சக்தி

மேற்கண்டவாறு உயிரின் மேலான பொருளாய் அருள் உதவி அருளில் பெரிதாய் நிற்கிறது.

32. திருவருளின் பயன்:

பெருக்க நுகரவினை பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள்

அருக்கன் என - நமக்கு புற இருளை நீக்கியும் விரும்பும் பொருளை நுகரவும் தொழில் செய்யவும் சூரிய ஒளி தேவை. அதுபோல

அருள் பெருக்கமாய் நுகர் வினையாய் - இறைவனின் அருள்சக்தி உயிர் பக்குவம் பெற்று ஆணவம் நீங்க அவ்வுயிர்கள் வினைக்கேற்ப

பேரொளியாய் எங்கும் நிற்கும் - பயன்களை ஈட்டவும், நுகரவும் துணையாய் இருப்பது திரோதான சக்தியே.

33. அருள் இன்றி அறிவு விளங்காது:

ஊன் அறியாது என்றும், உயிர் அறியாது
ஒன்றும் இது தான் அறியாது ஆர்அறிவார் தான்

ஊன் அறியாது என்றும் - உடல் சடம். தன்னையும் தனக்குரிய உயிரையும் அறியாது.

உயிர் அறியாது ஒன்றும் - ஆணவ மறைப்பில் இருப்பதால் உயிரும் தானாக ஒன்றும் அறியாது

இதுதான் அறியாது - உயிர் திருவருளைச் சார்ந்து நின்றால் அன்றி தன்னை அறியாது

ஆர் அறிவார் - திருவருள் உதவியின்றி யார் அறிவு பெற்றவர் ஆவர், யாவரும் இலர் என்பதாம்.

ஆக, சடமாகிய உடலோடு உயிரை கூட்டுவிப்பது திருவருளே அன்றி வேறு இல்லை என்பதாம்.

நானார்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை
யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ

- திருவாசகம்

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதுஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

- திருப்பல்லாண்டு

34. திருவருளை அறியாமல் உயிர் நிற்க மயக்கமே காரணம்:

பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து அருள்
உயிர்கள் மால்ஆழி ஆழும் மறித்து

அருள் மறித்து மால்ஆழி ஆழும் உயிர்கள் - உயிர்கள் திருவருளை தவிர்த்து உலக மயக்கக் கடலில் ஆழ்ந்து முழ்கிக் கிடக்கின்றன. எதுபோலவெனில்

பால்ஆழி மீன் ஆளும் பான்மைத்து - உயிர்கள் திருவருளை தவிர்த்து உலக மயக்கக் கடலில் ஆழ்ந்து முழ்கிக் கிடக்கின்றன. எதுபோலவெனில்

---

35. உயிருக்கும் என்றும் திருவருளே துணை:

அணுகு துணை அறியா ஆற்றோனின்
ஐந்தின் உணர்வை உணரா உயிர்

ஆறு - வழி
ஆற்றோன் - வழிப்போக்கன்
ஐந்து - ஐம்பொறிகள்

அணுகு துணை அறியா ஆற்றோன் - நமக்குப் பின்னால் துணையாக மிக அருகில் வரும் வழிப்போக்கனை அறியாத உயிர் போல

ஐந்தின் (துணை அறியா) - தனக்குத் துணையாக இருக்கும் ஆன்மாவை அறியாத ஐந்து பொறிகளைப் போல

உயிர் உணர்வை உணராது - உயிர் தனக்கு துணையாக நிற்கும் திருவருளை உணர்வதில்லை என்பதாம்.

36. திருவருளே உயிருக்கு ஆதாரம்:

தரையை அறியாது தாமே திரிவர்
புரையை உணரா புவி

தரையை அறியாது - நம்மை தாங்கியிருப்பது பூமிதான் என்பதை அறியாமல்

தாமே திரிவர் - சொந்த அறிவால் தாமே தமக்கு (தன்முனைப்பு) ஆதாரம் என்று இருப்பர்.

புரையை - இதுபோல அறியாமையால்

உணரா புவி - உயிர் தம்மை திருவருள்தான் வழி நடத்துகிறது என்பதை அறியாமல் தான் பெற்ற உலகப் பொருள்களிலேயே அழுந்தியிருக்கும்.

37. எந்நிலையிலும் உயிர் திருவருள் வியாபகத்தில்

மலை கெடுத்தோர் மண்கெடுத்தோர்
வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்

கெடுதல் - இழத்தல், தொலைத்தல். இங்கு தேடுபவர் உணராதவர் என்பதாம்

மலைகெடுத்தோர் - மலையில் நின்றுகொண்டு மலையை தேடுபவர்

மண்கெடுத்தோர் - நிலத்தில் நின்றுகொண்டு நிலத்தைத் தேடுபவர்

வான்கெடுத்தோர் - விண்ணில் இருந்து கொண்டு விண்ணைத் தேடுபவர் (தான் இயங்குவதற்கு இடம் கொடுத்து நிற்கிறது என்பதை உணராதவர்)

ஞானம் தலை கெடுத்தோர் – அதைப் போல, திருவருள் வியாபத்திலேயே இருந்து கொண்டு திருவருளை தேடுபவர்

தற்கேடர் தாம் - தமக்குத் தாமே கேடு செய்து கொள்ளும் தற்கேடர் ஆவர்.

ஆக,

வான் - உயர்நிலை (சுத்தம்)
மலை - நடுநிலை (சகலம்)
மண் - கீழ்நிலை (கேவலம்)

எல்லா நிலையிலும் நாம் (உயிர்கள்) இறைவனின் திருவருளிலேயே நிற்கிறோம்.
(மறைப்பாற்றல், அருளாற்றல்)

---

38. திருவருளை அறியாது பொய்த் தலைவராய் உயிர்:

வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்து
இருளாம் கள்ளத் தலைவர் கடன்

வெள்ளத்துள் நாவற்றி - நிறைந்த நல்நீரின் நடுவே நின்றும் தாகம் தீர அந்நீரை பருகாமல் நாக்கு வரண்டு நிற்பவர் போலவும்

எங்கும் விடிந்து இருளாம் கடன் - எங்கும் இருள் நீங்கி விடிந்த பிறகும் அதனை உணராது இருள் வயப்பட்டு தாங்கிக்கொண்டு இருப்பவன் தன்மை போலும். (கடன் - தன்மை)

கள்ளத் தலைவர் (கடன்) - உயிர் திருவருள் வியாபகத்திலேயே இருந்து கொண்டு தம்மை வழி நடத்தும் திருவருளை உணராது தாமே தலைவர் எனும் பொய்த் தலைவர் தன்மையில் நிற்பர் என்பதாம்.

39. ஞானக் கருத்தினை கேட்கும் முறை

பரப்பு அமைந்து கேள்மின் இது பால்கலன்
மேல் பூனை கரப்பு அருந்த நாடும் கடன்

பரப்பு அமைந்து கேள்மின் - பரபரப்பின்றி கூறும் ஞானக்கருத்தினை ஒன்றி கேளுங்கள். ஏனெனில் (மனதை ஒருமுகப்படுத்தி)

இது பால்கலன் மேல் பூனை - பால் நிறைந்த பாத்திரத்தில் பூனை ஏறி அப்பாலை (திருவருளை) அருந்தாமல்

கரப்பு அருந்த நாடும் கடன் - அருகில் உள்ள கரப்பான் பூச்சியை (உலகம்) உண்ணும் தன்மை போல ஆகும். (கடன் - தன்மை)

ஆக, ஞானக்கருத்தினை மாறுபாடாக விளங்கிக் கொண்டால் துன்பம். உள்ளதை உள்ளபடி உணர, மனம் ஒருமுகப்படுத்திக் கேட்க திருவருள் உணரப்படும் என்பதாம்.

40. திருவருளை அறியாதார் சிறுமை:
இற்றைவரை இயந்தும் ஏதும் பழக்கம்
இலா வெற்று உயிர்க்கு வீடு மிகை

இற்றைவரை இயந்தும் - இவ்வளவு காலம் திருவருளோடு இருந்தும்

ஏதும் பழக்கம் இலா வெற்று உயிர்க்கு - அதை உணரா உயிர்க்கு (அறிவு விளக்கம் பெறா நிலை).

வீடு மிகை - வீடுபேறு பெறும் தகுதி இல்லை.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே

- திருவாசகம்

ஐந்தாம் அதிகாரம்
அருள் உரு நிலை

ஞான குரு - அருள் உரு பாசத்தை நீக்குபவர்

குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
குருவே சிவம் எனப்து குறித்து ஓரார்
குருவே சிவனும் ஆய்க் கோனும் ஆய் நிற்கும்
குருவே உரை உணர்பு அற்றது ஓர் கோவே

- திருமந்திரம்

---

41. முப்பொருளும், இன்ப துன்பமும் உள் பொருள்கள்:
அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறிஆகி நீங்காத கோ

அறியாமை உள்நின்று அளித்த அதே - பக்குவம் இல்லாத நிலையில் உயிருக்கு உள்நின்று காத்து வந்த திருவருளே.
(திரோதானம் -> மறைப்பாற்றல்
திருவருளை காண முடியாத நிலை)

காணும் குறி ஆகி - பக்குவநிலையில் தன்னுக்குத் தெரியும் குருவாய் வந்து அதே திருவருளாலேயே ஞானம் வழங்கும் (அருளாற்றல்)

நீங்காத கோ - அந்த குருநாதர் நம்மை நீங்கா அருளரசர் ஆன சிவமே ஆகும்.

ஆக,
உயிருக்க உள்நின்று இருக்க இடம் (தனு கரண புவன போகம்) அளித்து ஒன்றாய் நின்ற சிவம், வேறாய் (குருவாய்) பக்குவ நிலையில் உணர்த்துகிறான் என்பதாம்.

42. திருவருளே ஆணவம் நீக்கும் மருந்து:

அகத்து உறு நோய்க்கு உள்ளினர் அன்றி
அதனைத் சகத்தவரும் காண்பரோ தான்

அகத்து உறு நோய்க்கு உள்ளினர் - வீட்டில் இருப்பவர் நோய் வீட்டில் இருப்பவர்க்குதான் தெரியும்

அன்றி அதனைச் சகத்தவரும் காண்பரோ - பிறர் அப்பிணியின் தன்மை அறியமாட்டார். அது போல (இங்கு உதாரணம் மட்டும் கூறப்பட்டுள்ளது).

உயிரின் பிணியாகிய ஆணவப்பற்றை உயிரோடு கலந்து நிற்கும் திருவருளை அன்றி எவரும் அறியமாட்டார் என்பதாம்.

ஆக உயிர் பக்குவம் பெற குரு ஞானம் வழங்க ஆணவம் நீங்கும் என்பதாம்.

43. பக்குவம் பெற்றவரே குருவை சிவம் என அறிவர்:

அருளா வகையில் அருள் புரிய வந்த
பொருள் ஆர் அறிவார் புவி

அருளா வகையால் - பக்குவ நிலையில் இறைவன் நேரா வாராமல்

அருள் புரிய வந்த - மானிட சட்டை தாங்கிய

பொருள் ஆர் - குருநாதராக வந்து (மெய் பொருளை உணர்த்தும்) அருள்புரிகிறார்.

ஆர் அறிவார் - என்பதை இப்பூவுலகில் பக்குவம் பெற்றவரே அறிவர். வேறு எவரும் இலர் என்பதாம்.

ஆக, பக்குவம் பெற்ற ஆன்மாவே தமக்கு வாய்த்த குருவை சிவம் என அறியும்.

44. பக்குவம் பெற்றவரே திருவருளையும் குருவருளையும் உணர்வர்:

பொய், இருண்ட சிந்தைப் பொறியிலார்
போதம் ஆம் மெய் இரண்டும் காணார் மிக

பொய் - பொய்யான உலக இன்பத்துள் நாட்டம் உடையவராய்

இருண்ட சிந்தை பொறியிலார் - ஆணவ மறைப்பால் ஏற்பட்ட சிற்றறவு உடையவராய்

மெய் இரண்டும் - மெய்ஞானத்தை வழங்கும் திருவருளையும் குருவருளையும்

காணார் மிக - அவ்வருளை அதிட்டித்து நிற்கும் குருநாதர் இயல்பையும் அறிய மாட்டார் என்பதாம்

45. சகலருக்குக் குருவாய் மானிட சட்டை தாங்கி வருவதன் நோக்கம்:

பார்வை என மாக்களைமுன் பற்றிப்
பிடித்ததற்காம்
போர்வை எனக் காணாப் புவி

பார்வை என மாக்களை - பார்வை விலங்கு போல

முன் பற்றி பிடித்ததற்காம் - அந்தந்த இனத்தில் பழக்கப்பட்ட விலங்குகளை வைத்து மற்ற காட்டு விலங்குகளை பிடிப்பது போல (மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல)

போர்வை எனக் காணார் புவி - மானிடச் சட்டை எனும் போர்வை தாங்கி எழுந்தருளி இருப்பது சிவமே என்பதை பக்குவமில்லா உலகத்தார் அறிய மாட்டார் என்பதாம்.

ஆக சிவமே குரு என்பதை பக்குவமுடைய சகலர் அறிவர் (சகலத்தில் சுத்தம்)

46. ஞான ஆசிரியர் இன்றி உண்மை ஞானத்தைப் பெற முடியாது:

எமக்கு என்? எவனுக்கு எவை தெரியும்?
அவ்வ தமக்கு அவனை வேண்டத் தவிர்

எவனுக்கு எவை தெரியும் - உள்ளதை உள்ளபடி நமக்குக் கூற எவருக்குத் தெரியும் என்று வினா எழும்போது

அவ்வ தமக்கு - உலகில் கலையை கற்றவரிடம் கலையை கற்றுக்கொள்ள நாம் நாடுவது போல் பக்குவமுடைய ஆன்மாவாகிய நமக்கு அந்தந்த நூற்கருத்துக்களை

அவனை வேண்ட - குரு உருவில் நிற்கும் சிவனை நாம் நாட அவர் ஞான நூலில் உள்ளவற்றை உள்ளபடி உணர்த்துவார் என்பதாம்.

எமக்கு என்? தவிர் - குருவினால் எனக்கு என்ன பயன்? எவனுக்கு எவை தெரியும்? என்ற வாதத்தை தவிர். (ஞான ஆசிரியரின் துணை தவித்தல் இயலாது என்பதாம்).

---

47. உயிரோடு இறைவன் கலந்து இருந்தாலும் குருவின் அருள் நோக்கிலேயே மலம் நீங்கும்:

விடம் நகுலம் மேவினும் மெய்ப் பாவகனின்
மீளும் கடனில் இருள் போவது இவன்கண்

விடம் நகுலம் மேவினும் பாவகனின் மீளும் - பாம்பு கடிபட்டவனின் உடலில் பாம்புக்கு எதிரியான கீரி வந்து புரண்டாலும் விடம் நீங்காது (மீளாது). ஆனால் கீரியாய் தன்னைப் பாவிக்கும் மந்திரவாதி பார்வையால் நோக்கி மந்திரம் செபித்து விடத்தை நீக்குவார்.

கடனில் - இந்த முறைப்படி

இருள் போவது எவன் கண் - திருவருள் உயிருக்கு உயிராய் இருந்த போதும் ஆணவம் நீங்காது திருவருளை அதிட்டித்து நிற்கும். குரு தீட்சையால் நீங்கும் என்பதாம்.

விடம் - பாசம்

நகுலம் (கீரி) - திருவருள்

மெய்ப்பாவகன் - குரு

ஆக, இறைவனே உள் இருந்தாலும் குருவடிவாய் வந்துதான் அறியாமையை நீக்குவான்.

---

48. மூவகை ஆன்மாக்களுக்கு அருளும் முறை:

அகலர்த் தரும் அருளை ஆர்க்கும் வினை
நீக்கும் சகலர்க்கு வந்து அருளும் தான்

அகலர்க்கு அருளை தரும் (விஞ்ஞான கலர்)
அகலர்க்கு அருளை ஆக்கும் (பிரளயா கலர்)

அகலர் - கலை நீங்கிய ஆன்மா
(கன்மம் மற்றும் மாயை நீங்கிய)

அகலர்	
விஞ்ஞான கலர்	பிரளயா கலர்
உள்ளிருந்து உணர்த்துவார்	இயற்கை வடிவில் (அம்மையப்பர்)

வினை நீங்கும் - பக்குவமுடைய அகலர்க்கு மாயையோடு கன்மமும் நீக்குவான்

சகலர்க்கு தான் வந்து அருளும் - ஆனால் சகலரில் பக்குவம் வாய்ந்தவர்க்கு தானே குருவுமாய் வந்து அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை அருளுவான் என்பதாம்.

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

- திருவாசகம் (திருவேசறவு 38.10)

ஆக, விஞ்ஞானகலர்க்கு உள் இருந்து அருளைத் தந்தும் பிரளயாகலர்க்கு இயற்கை வடிவிலும் அருளை ஆக்கியும் சகலர்க்கு குருவடிவாக வந்து அருளைத் தந்தும் மலங்களை போக்குகின்றான் என்பதாம்.

---

49. குருவே சிவம்:

ஆர் அறிவார் எல்லாம் அகன்ற
நெறியருளும் பேரறிவாளன் வாராத பின்

எல்லாம் அகன்ற நெறி - அத்துவாக்கள் கடந்த சாயுட்சியம் என்ற முத்திநெறி

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய
மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்

- பெரியபுராணம் (28.70)

அருளும் பேரறிவாளன் - அந் நெறியை அருளும் முற்றறிவு உடைய சிவபெருமான் (பேராற்றலும் பேரறிவும்)

வாராத பின் ஆர் அறிவார் - நமக்கு குருவாய் வராவிட்டால் யாராலும் நமக்கு முத்திநெறியை அறிவிக்க இயலாது என்பதாம்.

குருட்டினை நீக்கும்
குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக்
குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டு
ஆட்டம் ஆடிக்
குருடும் குருடும்
குழிவீடு மாறே

- திருமந்திரம் (1680)

50. அருட்குருவாலேயே ஆன்மாவிற்கு ஞானம் தோன்றும்:

ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும்,
நற்கல்அனல் பானு ஒழியப் படின்

பானு ஒழிய நற்கல் அனல்படின் - சூரிய ஒளி இல்லாமல் சூரியகாந்தக் கல் வெப்பம் அடையாது. அதுபோல,

இவன் ஒழிய ஞானம் நண்ணியிடும் - குருவின் அருளாலேயே ஆன்மாக்களுக்கு ஞானம் கிட்டும் என்பதாம்.

ஆக, ஆன்மாக்கள் குருவருளாலேயே ஞானம் பெற்று முத்தி பெறும்.

ஆறாம் அதிகாரம்

அறியும் நெறி

(திருவருள் அறிவிக்க நாம் அறிகிறோம்)

51. இருவினை ஒப்பும் சக்திநிபாதமும் ஒன்றாய் நிகழும்:

நீடும் இருவினைகள் நேராக நேர் ஆதல், கூடும்இறை சத்தி கொளல்

நீடும் இருவினைகள் - பிறவி தோறும் பெருகிவரும் நல்வினை தீவினை (இன்பம் - துன்பம்)

நேராக நேர் ஆதல் - அதை அனுபவிக்கும் உயிர் இன்ப துன்பத்தில் விருப்பு வெறுப்பு கொள்ளாது சமமாக கருதுமாயின்

சத்தி கொளல் கூடும் - திருவருள் ஆன்மாவிடத்துப் பதியும். அதாவது,

1. இருவினை ஒப்பு ஏற்பட
2. மலபரிபாகம் ஏற்படுகிறது
3. மலபரிபாகத்திற்கு ஏற்றாற்போல சக்திநிபாதம் ஏற்படுகிறது.
   நிபாதம் -> வீழ்தல் (பதிதல்).
   திருவருள் உயிரிடத்துப் பதிதல்.

மேற்கண்ட மூன்றும் ஒரே நேரத்தில் ஏற்படும்.

மலபரிபாகம் ஏற்றாற்போல், சக்திநிபாதம்

மந்ததரம்	25%
மந்தம்	50%
தீவிரம்	75%
தீவிரத்தரம்	100%

---

52. அநாதிப் பொருள்கள் ஆறு:

ஏகன் அனேகன் இருள், கருமம், மாயை இரண்டு ஆக இவை ஆறு, ஆதி இல்

ஏகன் அனேகன் இருள் -

ஒருவனாகிய இறைவன் (1)

பலவாகிய உயிர்கள் (2)

உயிர் அறிவை மறைக்கும் ஆணவம் (3)

கருமம் மாயை இரண்டு -

கன்மம் (4)

சுத்த மாயை (5)

அசுத்த மாயை (6)

ஆக இவை ஆறு ஆதி இல் - எனும் இவை ஆறும் அநாதி

கன்மம்	
காரண கன்மம் (மூலகன்மம்)	காரிய கன்மம்
அனைத்துக் காரிய செயல்களுக்கும் மூலமாய் இருப்பது	தனு, கரண, புவன போகம் பெற்றவுடன் காரியப்பட்டு வருவது

மாயை (மாயை ஒன்று; பயன்பாட்டில் இரண்டு)	
சுத்த மாயை (ஆணவக் கலப்பு இல்லாதது)	அசுத்த மாயை (ஆணவக் கலப்புடையது)

ஆக,

- அனைத்துக் காரியப் பொருளுக்கும் மூலமாய் இருப்பது மூலமாயை
- அனைத்துக் காரியச் செயல்களுக்கும் மூலமாய் இருப்பது மூலகன்மம்

53. வினைக்கொள்கை:
(மேற்கண்ட குறளில் உள்ள பொருள்களின் தொடர்பு)

செய்வானும் செய்வினையும் சேர்பயனும்
சேர்ப்பவனும் உய்வான் உளன் என்று உணர்

செய்வானும் - வினையைச் செய்யும் உயிர்

செய்வினையும் - அவ்வுயிரால் செய்யப்படும் நல்வினை, தீவினையும்

சேர்ப்பயனும் - அவ்வினைக்கு உரிய பயனாகிய இன்பம், துன்பம் எனும் பயன்களை

சேர்ப்பவனும் - உயிருக்கு ஊட்டுபவனும் ஆகிய இறைவனும்

உய்வான் உளன் என்று உணர் - உயிராகிய நீ உய்வுபெறுவதற்காக மேற்கண்ட பொருள்கள் உள்ளன என்பதை நீ அனுபவ வாயிலாக உணர்வாயாக.

செய்வினையுஞ் செய்வானும்
அதன் பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்
சிவனென்றருளாலே யுணர்ந்தறிந்தார்

- பெரியபுராணம் (34.5)

ஆக, பக்குவம் பெற்ற ஆன்மாவே தமக்கு வாய்த்த குருவை சிவம் என அறியும்.

54. இறைவன் உயிருக்கு உயிராய் நிற்றல்:

ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே,
ஊனொடுஉயிர் தான்உணர்வோடு ஒன்றாம் தரம்

ஊனொடுஉயிர் ஒன்றாம் தரம் - உயிர் உடம்போடு ஒற்றுமை பட்டு நிற்கும் தன்மை

தான் உணர்வொடு (ஒன்றாம் தரம்) - உயிர் அறிவு திருவருளோடு ஒன்றுபட்டு நிற்கும் தன்மை

ஒருமைத்தே - மேற்கண்ட இரண்டு நிலையின் தன்மையின் ஒற்றுமை எதுபோல எனில்

ஊன் உயிரால் வாழும் - உடம்பும் உயிரும் கொண்டுள்ள ஒற்றுமையை போன்றது ஆகும்.

ஆக, உடலோடு உயிர் சேர்ந்து இருப்பது போல, உயிரோடு திருவருள் இரண்டு என்ற தன்மை தோன்றாதபடி கலந்துள்ளது. இருமையுள் ஒருமை (இறை + உயிர்) - அத்துவைத சம்பந்தம்

55. திருவருள் உயிரோடு உயிராய் நின்று நடத்தும் முறை:

தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல்
தம்மைதரும், பொன்நிறம்போல் மன்நிறம் இப்பூ

தன்நிறமும் - பளிங்கு காலை மாலை இரு வேளையிலும் அருகில் உள்ள பொருள்களின் நிறங்களை தன் நிறமாய் காட்டி நிற்கும்

தாம் ஆம் கல்தன்மை தரும் பொன் நிறம் போல் (சொரூபம்) - நண்பகலில் தன் வெண்மை நிறத்தை மட்டுமே காட்டி நிற்கும் (நிழல் விழாத நேரம்) முற்றிலும் சூரியஒளி போல

இப்பூ மன்நிறம் - இவ்வுலகில் எல்லா உயிர்களுக்கும் திருவருள் பிறப்பு நிலையில் தடத்தையாகவும் முத்தி நிலையில் சொரூபமாகவும் இருந்து விளங்குகிறது.

மன் - இறைவன்

நிறம் - திருவருள்

---

56. அவன் அருளால் அவன் தாள் வணங்கி: (திருவருளாலேயே உயிர் அறிகிறது)

கண்டொல்லை காணு நெறி கண் உயிர் நாப்பண்
நிலை உண்டு இல்லை அல்லாது ஒளி

கண்டொல்லை காணும் நெறி - கண் பொருளை தொன்றுதொட்டு காணும் முறை எவ்வாறு எனில்

கண் உயிர் நாப்பன் ஒளி - கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் ஒளி நடுவாய் (நாப்பன்) இருப்பதனால்

உண்டு இல்லை அல்லாது உயிர் - அவ்வாறு ஒளி நடுவில் இல்லை எனில் கண் பொருளைக் காண இயலாது.

ஆக இக்குறளில் உவமை மட்டும் கூறப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியரின் கருத்து யாதெனில், பொருளைக்காண,

கண்ணை உயிர் செலுத்துகிறது
உயிரை திருவருள் செலுத்துகிறது

(கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் திருவருள் உதவுகிறது).

உ-ம்: காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்

- சிவஞானபோதம் (11ம் சூ)

57. எல்லாம் அவன் செயல்:

புன் செயலின் ஓடும் புலன் செயல்போல்
நின்செயலை மன் செயலது ஆக மதி

புன்செயலின் ஓடும் புலன் செயல்போல் - இந்திரியங்களால் செய்யப்படும் இழிவான செயல்களை உன்னுடைய செயல்களாக நீ கருதுவது போல

நின்செயலை மன் செயலாக மதி - உன் செயலை மன்னனாகிய இறைவன் செயல் ஆற்றலின் வழி நடப்பதாக எண்ணிக்கொள்

ஆக, பசு கரணங்களை பதி கரணங்களாகக் கருத (எல்லாம் அவன் செயல்) புதிய ஆகாமிய வினை தோன்றாது. அதனால் சஞ்சிதமும், பிராரத்தமும் ஏறாது என்பதாம்

58. ஞானத்தைக் காணும் முறைமை:

ஓராதே ஒன்றையும் உற்று உன்னாதே,
நீமுந்திப் பாராதே பார்த்ததனைப் பார்

ஓராதே ஒன்றையும் - ஞானம் எப்படி இருக்கும் எப்படி வரும் என்று ஆராயாதே

உற்று உன்னாதே நீமுந்திப் - என்ன வடிவில் வரும் என்று வருவதற்கு முந்தி நீ ஆராய்ச்சி செய்யாதே

பாராதே பார்த்து அதனைப் பார் - ஞானம் உன்னை வந்து சேரும் அப்போது நீ அறியலாம்.

ஆக, ஞானத்தை அறிய தன் முனைப்பால் முடியாது. திருவருள் ஞானத்தால் மட்டுமே முடியும் என்பதாம்.

ஞானம்	
கேட்டல் ஞானம் சாத்திர ஞானம்	நூல் அறிவு கேட்டல் அறிவு
சிந்தித்தல் ஞானம் ஆராய்ச்சி ஞானம்	கற்றதை, கேட்டதை சிந்தித்தல்
தெளிதல் ஞானம் பதி ஞானம்	அனுபவத்தால் ஏற்பட்ட திருவருள் ஞானம்
நிட்டை கூடுதல் ஞானம் மெய்ஞ்ஞானம்	சாயுட்சியம்

59. கிடைத்த ஞானத்தை சார திருவருள் பெருகும்:

களியே மிகுபுலனாக் கருதி ஞான
ஒளியே ஒளியாய் ஒளி

களியே - ஞானம் கிடைத்தவுடன் உண்டாகும் பேராந்தத்தையே

மிகுபுனலாக் கருதி - அறியும் பொருளாக மனதில் வை. அப்போது

ஞான ஒளியே ஒளியா ஒளி - அத் திருவருளே நமக்கு வழிகாட்டும்

உ-ம்: குளத்தில் முழ்கியவனுக்கு உலகப் பொருள் தெரியாது. திருவருளில் முழ்கியவனுக்கு உலகம் தெரியாது.

60. திருவருள் வயப்பட்டு நிற்றல்:

கண்டபடியே கண்டு காணாமை காணாமை
கொண்டபடியே கொண்டு இரு

கண்டபடியே கண்டு - ஞானம் கிடைத்த வழியிலேயே தொடர்ந்து அனுபவித்து இருக்க

காணாமை காணாமை - நம் அறியாமை மீண்டும் தோன்றிவிடாமல் இருக்க

கொண்டபடியே கொண்டு இரு - ஏற்றுக் கொண்டு ஞான வழியிலேயே நிற்க

ஆக, நம்மை விட்டு நீங்கிய அறியாமை மீண்டும் வராமல் இருக்க ஞான (திருவருள்) வழியில் தொடர்ந்து நிற்க என்பதாம்.

55. திருவருள் உயிரோடு உயிராய் நின்று நடத்தும் முறை:

தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல்
தம்மைதரும், பொன்நிறம்போல் மன்நிறம் இப்பூ

தன்நிறமும் - பளிங்கு காலை மாலை இரு வேளையிலும் அருகில் உள்ள பொருள்களின் நிறங்களை தன் நிறமாய் காட்டி நிற்கும்

தாம் ஆம் கல்தன்மை தரும் பொன் நிறம் போல் (சொரூபம்) - நண்பகலில் தன் வெண்மை நிறத்தை மட்டுமே காட்டி நிற்கும் (நிழல் விழாத நேரம்) முற்றிலும் சூரியஒளி போல

இப்பூ மன்நிறம் - இவ்வுலகில் எல்லா உயிர்களுக்கும் திருவருள் பிறப்பு நிலையில் தடத்தையாகவும் முத்தி நிலையில் சொரூபமாகவும் இருந்து விளங்குகிறது.

மன் - இறைவன்

நிறம் - திருவருள்

---

56. அவன் அருளால் அவன் தாள் வணங்கி: (திருவருளாலேயே உயிர் அறிகிறது)

கண்டொல்லை காணு நெறி கண் உயிர் நாப்பண்
நிலை உண்டு இல்லை அல்லாது ஒளி

கண்டொல்லை காணும் நெறி - கண் பொருளை தொன்றுதொட்டு காணும் முறை எவ்வாறு எனில்

கண் உயிர் நாப்பன் ஒளி - கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் ஒளி நடுவாய் (நாப்பன்) இருப்பதனால்

உண்டு இல்லை அல்லாது உயிர் - அவ்வாறு ஒளி நடுவில் இல்லை எனில் கண் பொருளைக் காண இயலாது.

ஆக இக்குறளில் உவமை மட்டும் கூறப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியரின் கருத்து யாதெனில், பொருளைக்காண,

கண்ணை உயிர் செலுத்துகிறது
உயிரை திருவருள் செலுத்துகிறது

(கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் திருவருள் உதவுகிறது).

உ-ம்: காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்

- சிவஞானபோதம் (11ம் சூ)

57. எல்லாம் அவன் செயல்:

புன் செயலின் ஓடும் புலன் செயல்போல்
நின்செயலை மன் செயலது ஆக மதி

புன்செயலின் ஓடும் புலன் செயல்போல் - இந்திரியங்களால் செய்யப்படும் இழிவான செயல்களை உன்னுடைய செயல்களாக நீ கருதுவது போல

நின்செயலை மன் செயலாக மதி - உன் செயலை மன்னனாகிய இறைவன் செயல் ஆற்றலின் வழி நடப்பதாக எண்ணிக்கொள்

ஆக, பசு கரணங்களை பதி கரணங்களாகக் கருத (எல்லாம் அவன் செயல்) புதிய ஆகாமிய வினை தோன்றாது. அதனால் சஞ்சிதமும், பிராரத்தமும் ஏறாது என்பதாம்

58. ஞானத்தைக் காணும் முறைமை:

ஓராதே ஒன்றையும் உற்று உன்னாதே,
நீமுந்திப் பாராதே பார்த்ததனைப் பார்

ஓராதே ஒன்றையும் - ஞானம் எப்படி இருக்கும் எப்படி வரும் என்று ஆராயாதே

உற்று உன்னாதே நீமுந்திப் - என்ன வடிவில் வரும் என்று வருவதற்கு முந்தி நீ ஆராய்ச்சி செய்யாதே

பாராதே பார்த்து அதனைப் பார் - ஞானம் உன்னை வந்து சேரும் அப்போது நீ அறியலாம்.

ஆக, ஞானத்தை அறிய தன் முனைப்பால் முடியாது. திருவருள் ஞானத்தால் மட்டுமே முடியும் என்பதாம்.

ஞானம்	
கேட்டல் ஞானம் சாத்திர ஞானம்	நூல் அறிவு கேட்டல் அறிவு
சிந்தித்தல் ஞானம் ஆராய்ச்சி ஞானம்	கற்றதை, கேட்டதை சிந்தித்தல்
தெளிதல் ஞானம் பதி ஞானம்	அனுபவத்தால் ஏற்பட்ட திருவருள் ஞானம்
நிட்டை கூடுதல் ஞானம் மெய்ஞ்ஞானம்	சாயுட்சியம்

59. கிடைத்த ஞானத்தை சார திருவருள் பெருகும்:

களியே மிகுபுலனாக் கருதி ஞான
ஒளியே ஒளியாய் ஒளி

களியே - ஞானம் கிடைத்தவுடன் உண்டாகும் பேராந்தத்தையே

மிகுபுனலாக் கருதி - அறியும் பொருளாக மனதில் வை. அப்போது

ஞான ஒளியே ஒளியா ஒளி - அத் திருவருளே நமக்கு வழிகாட்டும்

உ-ம்: குளத்தில் முழ்கியவனுக்கு உலகப் பொருள் தெரியாது. திருவருளில் முழ்கியவனுக்கு உலகம் தெரியாது.

60. திருவருள் வயப்பட்டு நிற்றல்:

கண்டபடியே கண்டு காணாமை காணாமை
கொண்டபடியே கொண்டு இரு

கண்டபடியே கண்டு - ஞானம் கிடைத்த வழியிலேயே தொடர்ந்து அனுபவித்து இருக்க

காணாமை காணாமை - நம் அறியாமை மீண்டும் தோன்றிவிடாமல் இருக்க

கொண்டபடியே கொண்டு இரு - ஏற்றுக் கொண்டு ஞான வழியிலேயே நிற்க

ஆக, நம்மை விட்டு நீங்கிய அறியாமை மீண்டும் வராமல் இருக்க ஞான (திருவருள்) வழியில் தொடர்ந்து நிற்க என்பதாம்.

55. திருவருள் உயிரோடு உயிராய் நின்று நடத்தும் முறை:

தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல்
தம்மைதரும், பொன்நிறம்போல் மன்நிறம் இப்பூ

தன்நிறமும் - பளிங்கு காலை மாலை இரு வேளையிலும் அருகில் உள்ள பொருள்களின் நிறங்களை தன் நிறமாய் காட்டி நிற்கும்

தாம் ஆம் கல்தன்மை தரும் பொன் நிறம் போல் (சொரூபம்) - நண்பகலில் தன் வெண்மை நிறத்தை மட்டுமே காட்டி நிற்கும் (நிழல் விழாத நேரம்) முற்றிலும் சூரியஒளி போல

இப்பூ மன்நிறம் - இவ்வுலகில் எல்லா உயிர்களுக்கும் திருவருள் பிறப்பு நிலையில் தடத்தையாகவும் முத்தி நிலையில் சொரூபமாகவும் இருந்து விளங்குகிறது.

மன் - இறைவன்

நிறம் - திருவருள்

---

56. அவன் அருளால் அவன் தாள் வணங்கி: (திருவருளாலேயே உயிர் அறிகிறது)

கண்டொல்லை காணு நெறி கண் உயிர் நாப்பண்
நிலை உண்டு இல்லை அல்லாது ஒளி

கண்டொல்லை காணும் நெறி - கண் பொருளை தொன்றுதொட்டு காணும் முறை எவ்வாறு எனில்

கண் உயிர் நாப்பன் ஒளி - கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் ஒளி நடுவாய் (நாப்பன்) இருப்பதனால்

உண்டு இல்லை அல்லாது உயிர் - அவ்வாறு ஒளி நடுவில் இல்லை எனில் கண் பொருளைக் காண இயலாது.

ஆக இக்குறளில் உவமை மட்டும் கூறப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியரின் கருத்து யாதெனில், பொருளைக்காண,

கண்ணை உயிர் செலுத்துகிறது
உயிரை திருவருள் செலுத்துகிறது

(கண்ணுக்கும் உயிருக்கும் இடையில் திருவருள் உதவுகிறது).

உ-ம்: காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
- சிவஞானபோதம் (11ம் சூ)

57. எல்லாம் அவன் செயல்:

புன் செயலின் ஓடும் புலன் செயல்போல்
நின்செயலை மன் செயலது ஆக மதி

புன்செயலின் ஓடும் புலன் செயல்போல் - இந்திரியங்களால் செய்யப்படும் இழிவான செயல்களை உன்னுடைய செயல்களாக நீ கருதுவது போல

நின்செயலை மன் செயலாக மதி - உன் செயலை மன்னனாகிய இறைவன் செயல் ஆற்றலின் வழி நடப்பதாக எண்ணிக்கொள்

ஆக, பசு கரணங்களை பதி கரணங்களாகக் கருத (எல்லாம் அவன் செயல்) புதிய ஆகாமிய வினை தோன்றாது. அதனால் சஞ்சிதமும், பிராரத்தமும் ஏறாது என்பதாம்

58. ஞானத்தைக் காணும் முறைமை:

ஓராதே ஒன்றையும் உற்று உன்னாதே,
நீமுந்திப் பாராதே பார்த்ததனைப் பார்

ஓராதே ஒன்றையும் - ஞானம் எப்படி இருக்கும் எப்படி வரும் என்று ஆராயாதே

உற்று உன்னாதே நீமுந்திப் - என்ன வடிவில் வரும் என்று வருவதற்கு முந்தி நீ ஆராய்ச்சி செய்யாதே

பாராதே பார்த்து அதனைப் பார் - ஞானம் உன்னை வந்து சேரும் அப்போது நீ அறியலாம்.

ஆக, ஞானத்தை அறிய தன் முனைப்பால் முடியாது. திருவருள் ஞானத்தால் மட்டுமே முடியும் என்பதாம்.

ஞானம்	
கேட்டல் ஞானம் சாத்திர ஞானம்	நூல் அறிவு கேட்டல் அறிவு
சிந்தித்தல் ஞானம் ஆராய்ச்சி ஞானம்	கற்றதை, கேட்டதை சிந்தித்தல்
தெளிதல் ஞானம் பதி ஞானம்	அனுபவத்தால் ஏற்பட்ட திருவருள் ஞானம்
நிட்டை கூடுதல் ஞானம் மெய்ஞ்ஞானம்	சாயுட்சியம்

59. கிடைத்த ஞானத்தை சார திருவருள் பெருகும்:

களியே மிகுபுலனாக் கருதி ஞான
ஒளியே ஒளியாய் ஒளி

களியே - ஞானம் கிடைத்தவுடன் உண்டாகும் பேராநந்தத்தையே

மிகுபுனலாக் கருதி - அறியும் பொருளாக மனதில் வை. அப்போது

ஞான ஒளியே ஒளியா ஒளி - அத் திருவருளே நமக்கு வழிகாட்டும்

உ-ம்: குளத்தில் முழ்கியவனுக்கு உலகப் பொருள் தெரியாது. திருவருளில் முழ்கியவனுக்கு உலகம் தெரியாது.

60. திருவருள் வயப்பட்டு நிற்றல்:

கண்டபடியே கண்டு காணாமை காணாமை
கொண்டபடியே கொண்டு இரு

கண்டபடியே கண்டு - ஞானம் கிடைத்த வழியிலேயே தொடர்ந்து அனுபவித்து இருக்க

காணாமை காணாமை - நம் அறியாமை மீண்டும் தோன்றிவிடாமல் இருக்க

கொண்டபடியே கொண்டு இரு - ஏற்றுக் கொண்டு ஞான வழியிலேயே நிற்க

ஆக, நம்மை விட்டு நீங்கிய அறியாமை மீண்டும் வராமல் இருக்க ஞான (திருவருள்) வழியில் தொடர்ந்து நிற்க என்பதாம்.

அவ்வாறு நிற்க, இருவினை ஒப்பு, மலபரி பாகம், சக்திநிபாதம் ஏற்படும். அதை அனுபவிக்க வேண்டும். ஆராய்ச்சி செய்யக் கூடாது.

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகின் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனையும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றினை கேட்க, தக்கார்

தாள்பால் -> திருவருளில்
வணங்கி -> அடங்கி
கலைநின்று -> அதனையே கண்டு அனுபவித்து நிற்கவும்

ஏழாம் அதிகாரம்
உயிர் விளக்கம்

மேற்கண்டவாறு ஆன்மா அறியும் நெறியில் நின்று ஆணவம் நீங்கப் பெற்று ஆன்ம சுத்தி ஏற்பட்டு திருவருள் மயமாய் நிற்றல்

61. திருவருள் அடைவது இயல்பு:

தூநிழலார் ஆதற்கு ஆரும் சொல்லார்
தொகும் இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம்

தூநிழல் ஆதற்கு - வெயிலில் தவித்தவன் குளிர்ந்த நிழலை அடைவதற்கு

ஆரும் சொல்லார் தொகும் இதுபோல் - யாரும் சொல்லத் தேவையில்லை. தானாய் நிழலை அடைவான். அதுபோல (வழிப் போக்கன் மரநிழலை அடைவது போல)

தான் அதுவாய் நிற்கும் தரம் - மலங்களினால் ஏற்பட்ட துன்பத்தில் வருந்தியவன் திருவருள் நிழலை அடையும் இயல்பை தானாகப் பெறுவான்.

62. ஆணவம் நீங்க, திருவருளை அறியும்:

தித்திக்கும் பால்தானும் கைக்கும்
திருந்திடும் நாப்
பித்தத்தின் தான்தவிர்ந்த பின்

தித்திக்கும் பால்தானும் கைக்கும் பித்தத்தின் - பித்த நோய் இருக்கும் போது சுவைக்கும் பால் கூட கசக்கும்

தவிர்ந்தபின் - அந்த நோய் நீங்கிய பிறகு

நா திருந்திடும் - முன்பு கசப்பாய் இருந்த பால் அந்த நாக்கிற்கு சுவையாகும்

இக்குறளில் உதாரணம் மட்டும் கூறப் பட்டுள்ளது. ஆசிரியர் கூற வரும் கருத்து, ஆணவம் என்ற நோய் நீங்க திருவருள் என்ற சுவையை ஆன்மா உணரும் என்பதாம்.

திருவருள் -> பால் (பாலில் மாற்றமில்லை)
ஆணவம் -> பித்தம்

63. திருவருளாலேயே திருவருளை உணர்கிறது:

காண்பான் ஒளி இருளில் காட்டிடவும் தான்
கண்ட வீண்பாலும் எந்நாள் விடும்

ஒளி இருளில் காட்டிடவும் - இருளில் தெரியாத பொருள் ஒளி (சூரியன்) வந்தவுடன் தெரிகிறது.

காண்பான் தான் கண்ட வீண்பாலும்-ஆனால் பார்த்த ஆன்மா நான் அப்பொருளைக் கண்டு பிடித்தேன் என்ற பொய்யாகிய தீவினை

எந்நாள் விடும் - என்று நீங்கும்? (நீங்காது) உவமை மட்டும் கூறப்பட்டுள்ளது.

ஆக, ஆன்மாவிற்கு நடப்பது அனைத்தும் திருவருளால் என்பதை மறந்தால் தீவினை வரும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

- திருக்குறள் (110)

64. திருவருள் மெய்யையும் ஆணவம் பொய்யையும் காட்டும்:

ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்

ஒளியும் இருளும் - திருவருளும், ஆணவமும் மறைப்பதில் ஒத்துப் போகின்றன

பன்மை - இருப்பினும் இரண்டிற்கும் வேறுபாடு என்னவென்றால்

தெளிவு (செயல்) - தன்னை அடைந்தார்க்கு திருவருள், மெய்ப் பொருளை (சிவத்தை) காட்டி, உலகை (பொய்) மறைக்கும்.

தெளியார் செயல் - ஆணவம் பொய்ப் பொருளைக் காட்டி, மெய்ப்பொருளை மறைக்கும் என்பதாம்.

65. அடியார் துன்பங்களைத் தாங்குவான் சிவன்:

கிடைக்கத் தகுமே நற் கேண்மையார்க்கு
அல்லால் எடுத்துச் சுமப்பானை இன்று

நற்கேண்மையார்க்கு - அன்பு நிறைந்த சுற்றமும் நட்பும் உடையவர்க்கு அல்லாமல்

எடுத்து சுமப்பானை - அவர்களது இயலாத காலத்தில் அவர்களது சுமையை எடுத்து சுமப்பவனை

இன்று கிடைக்கத்தகுமோ? - இந்நிலையில் பெற முடியுமா? முடியாது என்பதாம்.

உ-ம்:

நம் உறவுக்காரருக்கு நாம் அதிகம் உதவ, நமக்கு உடல் நலம் குன்றிய நிலையில் அவர் உதவுவார். அதைப்போல சிவனோடு பேரன்பு கொண்ட (நற்கேண்மையார்) அடியார்களது துன்பங்களை சிவ பெருமான் தாங்குவான் என்பதாம்.

கடையவ னேனைக் கருணையி
னாற் கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவ னே மன்னும்
உத்தரகோசமங்கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே

- திருவாசகம் (6.1)

அங்கத்தை மண்ணுக் காக்கி
யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா
சாதனா ணாயே னுன்னை
எங்குற்றா யென்ற போதா
விங்குற்றே னென்கண் டாயே

- திருநாவுக்கரசர் (4.75.8)

66. திருவருளை சார்ந்தவர் இறைவனை அடைவர்

வஞ்சமுடன் ஒருவன் வைத்தநிதி கவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்

ஒருவன் வைத்தநிதி - ஒருவன் வைத்துள்ள பொருளை

வஞ்சமுடன் கவர - வேறொருவன் கள்ளத் தனமாக கவர்ந்து செல்லும்போது

துஞ்சினனோ? போயினனோ? சொல் - இவன் தூங்கி விட்டானோ அல்லது பொருளை விட்டு வேறு இடத்துக்கு சென்று விட்டானோ? சொல்

உவமை மட்டும் கூறப்பட்டுள்ளது.

ஆக கள்ளரிடம் இருந்து பொருளை காக்க நாம் தேவையானவற்றை செய்வோம். அதைப்போல் நம் திருவருள் செல்வத்தை இழந்துவிடாமல் இருக்க திருவருள் வழியே ஒழுகி நிற்க வேண்டும். வஞ்சகப் பொய் வழியைத் தவிர்க்க வேண்டும்.

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

- திருப்பல்லாண்டு (9.29.1)

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடு
அல்லால்நர கம்புகினும்
என்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை
அல்லாது எங்கள் உத்தமனே

- திருவாசகம் (8.5.2)

67. திருவருளில் உயிர் அடங்க சிவமாம் தன்மை பெறும்:

தனக்கு நிழல்இன்றா ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள்

தனக்கு நிழல் இன்றா ஒளிகருவம் தம்பம் என - உச்சி வேளையில் தூணுக்கு நிழல் இல்லை. (அதாவது நண்பகலில் நிழல் அடங்கியிருக்கும்).

எனக்கவர நில்லாது இருள் - அதைப் போல (தன்முனைப்பு இன்றி) திருவருளில் உயிர் அடங்கி இருந்தால் சிவமாம் தன்மை பெறும்

68. திருவருளை முன்னிறுத்திச் செல்ல சிவத்தைக் காணலாம்:

உற்கைதரும் பொற்கை உடையவர் போல்
உண்மைப்பின் நிற்க அருளார் நிலை

உற்கைதரும் பொற்கை உடையவர் போல- பாதையை இருட்டில் அறிய தீவட்டியை (உற்கை) நமது அழகிய கைக்கொண்டு முன்னிட்டு தாம் பின்வருவது போல

உண்மைப்பின் நிற்க - திருவருளை நமக்கு முன் நிறுத்தி அதன் வழி ஒழுகுவாராயின்

அருள்ஆர் நிலை - அதுவே ஆன்மா அருளில் பொருந்தி சிவத்தை காணும் நிலையாகும்.

மாதர் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார்
அவர் பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு
அடைகின்ற போது
காதல் மடப் பிடியொடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்

- அப்பர் (திருவையாறு பதிகம்)

69. அருளை பின்நிறுத்த சிவத்தை காண முடியாது:

ஐம்புலனால் தான் கண்டகன்றால் அது
ஒழிய ஐம்புலன் ஆர்? தாம் ஆர்? அதற்கு

ஐம்புலனால் தாம் கண்டகன்றால் - ஐம்புலன்களால் தாம் காணும் பொய்ப் பொருளுக்கு அப்பாற்பட்டு ஒரு பொருள் இருக்குமாயின்

அது ஒழிய - அது அருளே அன்றி வேறில்லை. அவ்வாறிருக்க

அதற்கு - மெய்ப்பொருளாகிய சிவத்தை அடைவதற்கு

ஐம்புலன் ஆர் தாம் ஆர் - உயிர்கள்தாம் ஆர்?

ஆக, பேரின்பமாகிய மெய்ப்பொருளை அடைய கருவி கரணங்களுக்கும் உயிர் அறிவுக்கும் தகுதி இல்லை.

திருவருளை முன் நிறுத்த திருவருளால் தான் சிவத்தைக் காண (அடைய) முடியும் என்பதாம்.

70. சிவத்தை அடைவது தன் செயல் அல்ல. திருவருள் செயலே:

தாமே தரும் அவரைத் தம் வலியினால்
கருதல் ஆமே. இவன் ஆர் அதற்கு,

தாமே தரும் அவரை - ஒருவர் அவரே விரும்பி வழங்கிய பொருளை

தம் வலியினால் கருதல் ஆமே - தம் முயற்சியினால் பெற்றதாகக் கருதுவது அறமாகுமோ? ஆகாது என்பதாம்

அதற்கு - அதுபோல பேரின்ப பேற்றினை பெறும் தகுதி நமக்கில்லை

இவன் ஆர் - பெறும் தகுதி நமக்கில்லை (அவன் கருணையே ஆகும்)

ஆக, அருள் வள்ளலாகிய சிவம் கருணை கொண்டு தனு கரண புவன போகங்களை வழங்கி அறியாமையை நீக்கி அறிவு விளக்கம் பெறச் செய்து வழங்கிய பேரின்ப பேற்றினை தற்போதத்தால் கிடைத்தது என கருதுவது தவறாகும்.

இறையருளால்தான் பேரின்பம் கிடைக்கும் என்பதாம்.

நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

- திருவாசகம் (திருஏசறவு)

எட்டாம் அதிகாரம்
இன்புறு நிலை

அறியும் நெறி -> ஆன்ம தரிசனம்

உயிர் விளக்கம் -> ஆன்ம சுத்தி

இன்புறு நிலை -> ஆன்ம லாபம்

ஆக, ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி பெற்ற பின் பேரானந்தம் அடையும் முறைமை.

71. பக்குவம் பெற்றவர் திருவருள் வழி சென்று பேரின்பம் பெறுவார்:
இன்புறுவார் துன்பார் இருளின் எழும்
சுடரின் பின்புகுவார் முன் புகுவார் பின்

இருளின் எழும் சுடரின் பின் புகுவார் இன்புறுவார் - பக்குவம் (ஞானம்) பெற்ற பின் திருவருள் ஒளி பின் சென்று (ஒளியில்) சிவபோகத்தை அனுபவிப்பார்.

முன்புகுவார் பின் துன்பார் - பக்குவம் பெறாத நிலையில் உயிர் திருவருள் முன் சென்று (இருளில் - ஆணவம்) துன்பம் அனுபவிப்பர் என்பதாம்.

72. சிவபோகத்திற்கு திருவருளே துணை:
இருவர் மடந்தையருக்கு என்பயன்
இன்பு உண்டாம் ஒருவன் ஒருத்தி உறின்

இருவர் மடந்தையருக்கு என் பயன் - இரு பெண் கூடுவதில் இன்பம் இல்லை

இன்பு உண்டாம் ஒருவன் ஒருத்தி உறின் - ஆண் பெண் கூடுவதில் இன்பம். அதுபோல உயிர் திருவருளைச் சேர்ந்த அளவில் இன்பமில்லை. திருவருள் உதவியோடு சிவத்தை சேர்ந்தபோது பேரின்பம்.

ஆக, நாயகனாகிய சிவத்தை ஆணாகவும், அடைய வேண்டிய உயிர்களை நாயகியாகவும், குனியாகிய சிவத்தின் குணமாகிய சக்தியை நாயகியாகவும் உருவகம் செய்யப்பட்டது.

எங்கள் நாயகனே என் உயிர்த்
தலைவா ஏல வார்குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்கநல் காமன்
தனது உடல் தழல் எழ விழித்த
செம் கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அம்கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே

- திருவாசகம்

73. இன்ப வடிவினனாகிய சிவத்திற்கு இன்ப அனுபவம் இல்லை

இன்பு அதனை எய்துவார்க்கு ஈயும் அவர்க்கு உருவம் இன்பகனம் ஆதலினால் இல்

எய்துவார்க்கு இன்பு அதனை ஈயும் - தன்னை அடைந்தவர்க்கு இன்பத்தை வழங்குவான்.

அவர்க்கு உருவம் இன்பகனம் - ஆனால் அவன் இன்ப வடிவினன் என்பதால்

ஆதலினால் இல் - அவன் உயிர்போல் இன்பத்தை அனுபவிப்பதில்லை

ஆக, நியும் நானும் ஏகபோகமாய் இருந்தாலும் இன்பம் அனுபவிப்பது உயிரே.

தந்தது உன்தன்னை
கொண்டது என்தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்?

- திருவாசகம்

74. முத்தி நிலை (அத்துவைதம்):

தாடலை போல் கூடியவை தான் நிகழா
வேற்று இன்பம் கூடலை நீ ஏகம் எனக்கொள்

தாடலை போல் கூடியவை - தாள் + தலை என்ற இரு சொல் ஒரு சொல் ஆவது போல

தான் நிகழா வேற்று இன்ப கூடலை - சிவனும் ஆன்மாவும் சேர்ந்தே இருக்கும் கூடலை

ஏகம் என நீ கொள் - ஆன்மா சிவத்தில் இருந்து பிரியாதவாறு உள்ள பேரின்ப கலப்பினை (ஏகபோகக் கூடல்) சைவ சித்தாந்தம் கூறும் முத்தி நிலை (சுத்தா அத்துவைதம்) எனக் கொள்.

75. முத்தியில் அத்துவைதமாய் நிற்பது ஏன்

ஒன்றானும் ஒன்றாது இரண்டானும் ஓசை
எழாது என்றால் ஒன்று அன்று இரண்டும் இல்

ஒன்றானும் ஒன்றாது - உயிரும் சிவமும் ஒரு பொருள் அல்ல. ஒரு பொருள் இணைய வேண்டிய அவசியம் இல்லை)

இரண்டானும் ஓசை எழாது - அவை தனித்து நின்றாலும் உயிர் பேரின்பத்தை அனுபவிக்க இயலாது

என்றால் ஒன்று அவை - இறைவனும் ஆன்மாவும் ஒருபொருள் என்பதும் பொருந்தாது (ஏகான்ம வாதம்)

இரண்டும் இல் - வேறுபட்ட இயல்புடைய இரு பொருள் என்பதும் பொருந்தாது (துவைதம்)

ஆக, முத்தியில் உயிர் தான் கெடுவது இன்றியும் வேறுபட்டு நிற்பது இன்றியும் சுத்த அத்துவைதமாக நிற்கும். அதாவது இரண்டல்ல (ஒன்று)

அத்துவைதம் - பொருள்கள் இரண்டின் பிரிக்க முடியாத கலப்பு.

76. பிறவிக்கு வாரா நிலை பெற்றவர்

உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரைஒழியப்
பற்றாரும் அற்றார் பவம்

உற்றாரும் - பரமுத்தி அடைந்தவரும் (36 தத்துவங்களைக் கடந்தவர்)

பெற்றாரும் - அபரமுத்தி (முத்திக்கான தகுதி பெற்றவரும்) (பேரமைதியில் இருப்பவர் - மெய்ஞானம்)

ஓவாது உரை ஒழியப் பற்றாரும் - பதமுத்தியில் உள்ள கேட்டல், சிந்தித்தல், தெளிதல் நிலையை அடைந்தவரும் (பதிஞானம்)

அற்றார் பவம் - மீண்டும் பிறவிக்கு வாரா நிலை பெற்றவர்

77. தன்செயல் இன்றி அரன் செயலாய் நிற்றல்:

பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும்
இனி நீ ஒன்றும் செய்யாது நில்

பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் - பேய் பிடித்தவருக்கு தன் அறிவு இச்சை செயல் இல்லை. பேயினுடையதாகவே இருக்கும். அது போல

நீ ஒன்றும் செய்யாமல் நில் - சிவத்தால் ஆட்கொள்ளப்பட்டவனுக்கு தன் அறிவு இச்சை செயல் இல்லாமல் ஆதியுடன் சமமாய் கலந்து நிற்பான் என்பதாம்.

அதாவது, அந்நிலை ஏற்படும் வரை தன் முனைப்புடன் எதையும் செய்யாமல் இரு.

ஆக, பசுகரணத்தை பதிகரணமாக மாற்றி செயல்படுதல். அந்நிலையில் பாவம் புண்ணியம் உயிர்களைச் சாராது.

- அருளாளர்கள் செய்த அற்புதம். அவர்களுக்கு புண்ணியமோ பாவமோ ஏற்படவில்லை.
- மூவர் முதலி உயிர் எழுப்பியதால் புண்ணியமோ,
- சண்டேச நாயனார், கண்ணப்பனார் செய்த குற்றமோ பாவமாகவில்லை என்பதாம்.

இதுவே செய்யாமல் செய்த நிலை ஆகும்.

கயல் மாண்ட கண்ணி தன் பங்கன்
எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும்
மாண்டு அவனியின் மேல்
மயல் மாண்டு மற்று உள்ள
வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடி
தெள்ளேணம் கொட்டாமோ

- திருவாசகம் (திருத்தெள்ளேணம்-11)

செய்தற்கரிய செயல்பலவுஞ் செய்து பலர்
எய்தற்கு அரியதனை எய்தினார்கள் - ஐயோநாம்
செய்யாமை செய்து செயலறுக்கா இருக்கச்
செய்யாமை செய்யாத வாறு

- திருக்களிற்றுப்படியார் (61)

78. சமய ஆசாரங்கள் நீங்கும் காலம்:

ஒண்பொருட்கண் உற்றார்க்கு
உறுபயனே அல்லாது கண்படுப்போர்
கைப்பொருள் போல் காண்

ஒண் பொருட்கண் உற்றார்க்கு - சிவப் பிரகாசத்தில் அழுந்தி தம்மை இழந்து நிற்பவர்க்கு

உறுபயனே அல்லாது - வரும் பயன் பேரின்பம் மட்டுமே. ஏனைய உலக ஒழுக்கங்களும் தவ ஒழுக்கமாகிய சரியை, கிரியை, யோகம் அவரை விட்டு தாமாக நீங்கும். எதுபோல எனில்,

கண்படுப்போர் கைப்பொருள் போல காண் - உறங்குபவனின் கையில் உள்ள பொருள் நழுவுவது போல

ஆக, சமய ஆசாரங்கள் முத்திக்கான பயிற்சி. முத்தி நிலை பெற்றவுல்ன் பயிற்சி தானாக நழுவும் என்பதாம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - நீந்தார்
இறைவன் அடி சேராதார் - குறள்

ஆக, கரையை அடைந்தவுடன் நீந்துவது அவசியம் இல்லை.

79. முத்தி அனுபவத்தை பிறர்க்கு சொல்ல முடியாது:

மூன்றாய தன்மை அவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத இன்பம், அதுஎன் சொல்

மூன்றாய தன்மை:

1. காண்பான் (அறிபவன் - உயிர்)
2. காட்சிப்பொருள் (அறியும் பொருள் - சிவம்)
3. காட்சி (சிவஞானம் - சிவத்தை அறிய உயிருக்கு உதவும் சிவப்பிரகாசம்)

காண்பவனுக்கு காணும் பொருளைக் காண, ஒளி தேவை என்பதாம்.

அவர்தம்மின் மிக முயங்கி - மேற்கண்ட திரிபுடிஞானமாகிய மூன்றாய தன்மையும் வேறு இன்றி சிவனும் ஆன்மாவும் பிரிப்பின்றி ஒன்றாய் நிற்கும் கலப்பினால்

தோன்றாத இன்பம் - இரண்டும் வேறு வேறு என்று தோன்றாத பேரின்ப நிலை முத்தியாகும்.

அதன் சொல் - அதைப் பிறருக்கு என்ன வென்று சொல்வது? சொல்ல முடியாது. அனுபவிக்க மட்டுமே முடியும்.

எங்கன் இருந்தது என்று
எவ்வண்ணம் சொல்லுகேன்?
அங்கன் இருந்தது என்று உந்திபற
அறியும் அறிவுஅது அன்று உந்தீபற

- திருவுந்தியார் (4)

80. பேரன்பாலேயே பேரின்பம் கிட்டும்:

இன்பில் இனிது என்றல் இன்பு உண்டேல்
இன்று உண்டாம் அன்பு நிலையே அது

இன்பில் இனிது என்றல் - இன்பத்தின் இன்பமாகி பேரின்பம் என்னவென்றால்

இன்பு உண்டேல் - சிவனிடத்து பேரன்பு ஏற்படுமாயின்

இன்று உண்டாம் - இப்பொழுதே பெறப்படும் பேரின்பமாகும்.

அன்பு நிலையே அது - அத்தகைய பேரன்பே உயிருக்கு நிலையான பேரின்பத்தைத் தரும்.

அன்பு →
- கடையன்பு
- இடையன்பு
- தலையன்பு (இறைவனிடத்து பேரன்பு)

ஒன்பதாம் அதிகாரம்

ஐந்தெழுத்து அருள்நிலை

ஆனந்த நிலையை அடைய துணையாய் இருப்பது ஐந்தெழுத்து. இன்புறு நிலைக்குப்பின் ஆனந்த நிலையை அடைய ஒன்பதாம் அதிகாரமாக வைக்கப்பட்டது.

பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே
விழித்துஅங்கு உறங்கும் வினைஅறி வார்இல்லை
எழுத்துஅறி வோம்என்று உரைப்பர்கள் ஏழ்ர்
எழுத்தை அழுத்தும் எழுத்துஅறி யாரே

- திருமந்திரம் (2721)

ஐந்தெழுத்து:
உயிர் சிவத்தோடும், அருளோடும், உலகோடும் கூடியிருக்கும் நிலையைக் கூறுவது.

இம்மையிலும் துணை அஞ்செழுத்து

அம்மையிலும் துணை அஞ்செழுத்து

81. அனைத்து ஞான நூல்களும் ஐந்தெழுத்தில் அடக்கம்:

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும்
ஐந்தின் பொருள்நூல் தெரியப் புகின்

அருள் நூலும் - ஆகமமும்

ஆரணமும் - வேதங்களும்

அல்லாதும் - மற்றைய ஞான நூல்களும்

ஐந்தின் பொருள் நூல் - ஐந்தெழுத்தின் பொருளை விரித்து உணர்த்தும் நூல்களே ஆகும்.

தெரியப்புகும் - என்பதை ஆராய்ந்து பார்த்தால் புலப்படும்.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

- ஞானசம்பந்தர்

அஞ்சு எழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்சு எழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்
அஞ்சு எழுத்தே ஆனந்த தாண்டவமும்
ஆறாறுக்கு அப்பாலாம் மோனந்த மா முத்தியும்

- உண்மை விளக்கம் (44)

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உள்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

- திருவாசகம் (8.21.1)

82. ஓங்காரத்து உட்பொருள்:

இறை, சக்தி, பாசம், எழில்மாயை, ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்

ஓங்காரத்துள் உற நிற்கும் இறை, சக்தி, பாசம், எழில்மாயை, ஆவி - ஓம்.

அ - சிவன் (சி), அருள் (வ)

உ - உயிர் (ய)

ம் - மலம் (நம)

ந: மாயை, கன்மம் இரண்டையும் இயக்கும் திரோதானம்

ம: ஆணவம்

83. ஊன நடனம், ஞான நடனம் நடுவே உயிர்:

ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞானநடம் தான் நடுவே நாடு

ஊன நடனம் - ஐந்தெழுத்தின் ஒருபுறம் உயிர் அறிவை மறைக்கும் ஆணவமும், மாயையும், கன்மமும், இந்த இரண்டையும் இயக்கும் திரோதானமும் உள்ளன.

இவ்வாறு உயிரை பிறப்புக்கு உட்படுத்தி (மறைப்பாற்றல்) விளையாடும் விளையாட்டே ஊன நடனம்.

ஊனம் - ஞானம் இல்லாமை

ஞான நடனம் ஒரு பால் ஆம் - வீடு பேற்றை அருளும் சிவமும் அருளும் ஒரு புறம் உள்ளன (அருளாற்றல்)

தான் நடுவே நாடு - உயிர் நடுவே உள்ளது என்பதைக் காண்பாயாக.

ஐந்தெழுத்தில் மூன்று நடனம்:

சி - ஆனந்த நடனம்

வா - ஞான நடனம் (அருளாற்றல்)

ய - உயிர் நடுவே

நம - ஊன நடனம் (மறைப்பாற்றல்)

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்ன
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்
ஆரழல் போல் செய்யா! வெண்ணீறு ஆடி! செல்வா!
சிறு மருங்குல் மையார் தடங்கண்
மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

- திருவெம்பாவை

---

84. இருவகை நடனத்தில் உயிர் சிவத்தைப் பெறும்:

விரிய ம ந மேவி, ய வ்வை மீளவிடா: சித்தம்
பெரியவினை தீரின் பெறும்

விரிய ம - முதலில் ஆணவம் வெளிப்பட (அநாதி கேவலம்)

ந மேவி - அதன் காரணமாய் சேர்ந்த திரோதானம், மாயை, கன்மம்

ய வ்வை மீளவிடா - மேற்கண்டவை மூலம் பிறப்புக்கு உயிர் ஆளாகிறது. அவ்வுயிரை தம்மின்று மீண்டு போகவிடாமல்

தம் பெரிய வினை தீர - தடையாய் இருக்கும் சஞ்சித வினை முழுதும் நீங்க

சி பெறும் - திருவருளைபற்ற உயிர் சிவத்தை அடையும்

திருவடிக்கீழ் சொல்லிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

- சிவபுராணம்

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு
மான் உன்நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே

- திருவாசகம் (8.30.1)

85. உலகியலார்க்கு நமசிவாய படிநிலை

மால்ஆர் திரோதம் மலம் முதலா மாறுமோ
மேல் ஆசி மீளா விடின்

மால்ஆர் - உயிருக்கு வரும் மயக்கம் யான் எனது பற்று (பிறப்பு நிலையில்)

திரோதம் மலம் முதலா மாறுமோ - திரோதம்-ந மலம்-ம. நமசிவாய என்று ஓத உலகப்பற்று (ஆணவம்-யான் எனது) நீங்குமோ? நீங்காது என்பதாம்.

மேலா சி மீளாவிடின் - மேலா 'சி' - எல்லாவற்றிலும் மேலான சிவ முன்னிறுத்தி, குற்றமுடைய நம முன்னிறுத்தி சொல்வதில் இருந்து

மீளாவிடின் - மாற்றி சிவாயநம என்று சொல்லா விடின் பேரின்பம் பெற எண்ணம் உண்டாகுமோ? உண்டாகாது என்பதாம்.

முதல்படிநிலை:

நமசிவாயவே ஞானமும் கல்வியும்
நமசிவாயவே நானறி இச்சையும்
நமசிவாயவே நாநவின்று ஏத்துமே
நமசிவாயவே நன்னெறி காட்டுமே - சம்பந்தர்

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே - அப்பர்

ஓத ஓத - பற்று நீங்கி குரு உபதேசம் மூலம் சிவாயநம

நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம்
புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே - திருவாசகம்

86. முத்திக்கு சிவாயநம ஓத வேண்டும்

ஆராதி ஆதாரம் அந்தோ அது மீண்டு
பாராது மேல் ஓதும் பற்று

ஆராதி ஆதாரம் - உயிருக்கு முத்திக்கு ஆதாரமான சிவாயநம என்று ஓதுக

அது மீண்டு பாராது - உலகியல் பற்று நீங்காத நிலையில் ஓதிய நமசிவாய மந்திரத்தை திரும்பவும் எண்ணிப் பார்க்காமல்

மேல் ஓதும் பற்று - முத்தி விரும்பும் நிலையில் மீண்டும் நமசிவாய மந்திரத்தை ஓதும் நிலை

அந்தோ - பரிதாபத்திற்கு உரியது

ஆக,

நமசிவாய - சமய தீக்கையில் (பற்று நீக்கம் பெற) ஓதி ஓதி

சிவாய நம - விசேட தீக்கை (முத்திக்கு)

87. முத்தி விரும்புவர்க்கு சிவாயநம வே

சிவம் முதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம் இதுநீ ஓதும்படி

சிவம் முதலே - சிவ ம் என்ற இரண்டு எழுத்தும் முதலில் வரும்படி உச்சரித்தால் (சிவாயநம)

ஆமாறு சேருமேல் தீரும் பவம் - பிறவிக்கு காரணமாகிய மலங்கள் நீங்கும்

இது நீ ஓதும்படி - முத்தியை விரும்பும் நீ ஓதும் முறை இதுவே.

அங்கு ஆசு இல் உருவமுமாம் - முத்தியில் ஆன்மாவிற்கு குற்றமற்ற அருள் திருமேனி யாகவும் இருக்கும்.

கருவாய்க் கிடந்து உன் கழலே
நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உந்தன் நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூரானே

- திருநாவுக்கரசர்

---

89. முத்தி நிலையை விளக்கும் ஐந்தெழுத்து
ஆசு இல் ந, வா நாப்பண் அடையாது
அருளினால் வா சி இடை நிற்கை வழக்கு

ஆசு இல் ந, வா நாப்பண் - குற்றம் இல்லாததாகிய ந என்ற மறைப்பாற்றலுக்கும் வா என்ற அருளாற்றலுக்கும் நடுவில்

அடையாது - முத்தியில் சிவாயநம என்று உயிர் நடுவில் நில்லாது

வா சி இடை நிற்கை வழக்கு - சிவயசிவ என்று அருளாற்றலுக்கும் சிவத்திற்கும் இடையில் நிற்பதே முறை ஆகும்.

90. ஐந்தெழுத்தின் நிலைகள் பல

எல்லா வகையும் இயம்பும் இவன்
அகன்று நில்லா வகையை நினைந்து

எல்லா வகையும் இயம்பும் - படி நிலைக்கேற்ப ஐந்தெழுத்து ஓதும் முறையைப் பல்வேறு வகையாக விதித்துள்ளனர்

இவன் - ஆன்மாவாகிய இவன்

அகன்று நில்லா வகையை நினைந்து - திருவருள் வியாபகத்தை விட்டு நீங்க முடியாது என்பதை உணர்ந்து

இம்மையிலும் அம்மையிலும் துணையாகிய அஞ்செழுத்தை ஓத வேண்டும்.

ஆக அவரவர் பக்குவத்திற்கேற்ப உரிய ஐந்தெழுத்து மந்திரத்தை ஓத வேண்டும்.

பத்தாம் அதிகாரம்

அணைந்ததோர் தன்மை

உலகப்பற்றை நீங்கி திருவடி இன்பம் ஒன்றிலேயே திளைத்திருப்போர். கண்டு இன்று வீடுற்ற நிலை. இந்த உலகில் வாழ்ந்தாலும் முத்தி பெற்ற நிலையில் உள்ளவராவார். இந் நிலையில் இவர்களது அறிவு இச்சை செயல் எவ்வாறு இருக்கும் என்பதை இந்த பத்து குறள்களும் உணர்த்துகின்றன.

91. சீவன் முத்தர் நிலை:

ஓங்கு உணர்வின் உள் அடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குவர் மற்று ஏது உண்டு? சொல்.

ஓங்கு உணர்வின் உள் அடங்கி - மேம்பட்டு விளங்கும் திருவருளில் ஒடுங்கி தூங்காமல் தூங்கி நிலைத்து நிற்பர்.

உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குவர் - அதனால் விளையும் பேரின்பத்துள் திளைத்து சொல்லற மோன பேரமைதி நிலையில் இருப்பர்

மற்று ஏது உண்டு சொல் - அதைத் தவிர அவர்களுக்கு வேறு செயல் இல்லை என்று கூறுவாயாக.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இருந்து வாழ்சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

- பெரியபுராணம்

---

92. சீவன் முத்தர் கடவுளும் அல்லர் பக்குவம் பெறாத உயிரும் அல்லர்

ஐந்தொழிலும் காரணர்கள் ஆம் தொழிலும்
போகம் நுகர் வெந்தொழிலும் மேவார் மிக

ஐந்தொழிலும் - சிவனைப் போல் ஐந்தொழில் செய்வதோ?

காரணர்கள் ஆம் தொழிலும் - சிவனின் ஆணையைப் பெற்று இவ்வைந்தொழிலில் ஏதேனும் ஒன்றனுக்கு தலைவனாய் இருப்பதோ?

போகம் நுகர் வெந்தொழிலும் - பூவுலகில் போகம் தரும் கொடிய வினைகளை பக்குவமற்ற உயிர்கள் போன்றும் செய்வதில்லை.

மேவார் மிக - சிவானுபவம் ஒன்றே அனுபவித்து இருப்பர்

முத்தி நிலையில் இருந்தாலும் சிவனின் சிறப்பு இயல்பை பெறமுடியாது. ஆக கடவுள் அல்லர்

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங்க கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரையானே - திருமந்திரம்

---

93. சீவன் முத்தர் எங்கும் எதிலும் காண்பது சிவமே

எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கு இவர்
ஒன்று அல்லாது அறியார் அற

எல்லாம் அறியும் அறிவு உறினும் - திருவருளால் உலகில் எல்லாம் அறியும் அறிவு பெற்று இருந்தாலும்

ஈங்கு இவர் ஒன்று அல்லாது அறியார் அற - சிவத்தைத் தவிர வேறு பொருள்களை சிறிதும் அறிய மாட்டார் என்பதாம் (விரும்ப மாட்டார்).

பரு வரை மங்கை தன் பங்கரை,
பாண்டியற்கு ஆர் அமுது ஆம்
ஒருவரை, ஒன்றும் இலாதவரை,
கழல் போது இறைஞ்சி,
தெரிவர நின்று, உருக்கி, பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி, உருவு அறியாது
என் தன் உள்ளம் அதே

- திருவாசகம்
திருப்பாண்டிப் பதிகம்

சிவானுபவம் உடைய முத்தருக்கு சிவமே அன்றி பிற பொருள் தோன்றாது

பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர், பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சிய வாசக ஞானம், வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம், போக ஞாதிரு ஞான ஞேயம்
தங்கிய ஞானம் சங்கற்பனை ஞானம் ஆகும்
திரு ஞானம் இவை எல்லாம் கடந்த சிவஞானம்
ஆதலால் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்

- சித்தியார் (311)

94. சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்

புலன் அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர்
போதார் தலம் நடக்கும் ஆமை தக

தலம் நடக்கும் ஆமை தக - நிலத்தில் ஆரவாரம் உள்ள இடங்களில் ஆமை ஐந்து உறுப்புக்களை உள்ளிழுத்து அசைவின்றி கிடப்பது போல

புலன் அடக்கி - சீவன் முத்தர்கள் தமது ஐந்து புலன்களை ஒடுக்கி

ஒடுக்கம் - இந்திரியங்கள் ஒடுங்கி தவம் செய்யும் இடம் (குருமகாசந்நிதானம் உள்ள இடம் போல)

தம்முதற்கண் - தமது ஆண்டானாகிய சிவ பெருமானிடத்தில்

புக்கு உறுவர் - புகுந்து பொருந்தி நிற்பர்

கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்து உள்ளுருகிப் பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள் கலந்தே - திருவாசகம் (32.11)

போதார் - அதிலிருந்து திரும்பவும் வாரார்.

95. சீவன் முத்தர்கள் சர்வ வியாபகம் உடையவர்

அவனை அகன்று எங்கு இன்றாம் ஆங்கு அவனாம்
எங்கும் இவனை ஒழிந்து உண்டாதல் இல்

அவனை அகன்று எங்கும் இன்றாம் - சிவத்தை விட்டு நீங்கி எவ்வுலகமும் இல்லை

ஆங்கு அவனாம் இவன் - அதுபோல சிவமாம் தன்மை பெற்ற சீவன் முத்தரை

ஒழிந்து உண்டாதல் இல் - விட்டு நீங்கி எந்த பொருளும் உலகில் இல்லை

ஆக ஆணவம் நீங்கிய நிலையில் உயிர் வியாபகத்திற்கு தடை நீங்கியது. அந்நிலையில் சீவன் முத்தர்கள் உலகில் முழு நிறைவுடன் அனைத்திலும் வியாபித்து உள்ளனர் அல்லது சீவன் முத்தர் வியாபகத்தில் அனைத்தும் உள்ளன.

ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை
யார் உன்னை அறியகிற்பாரே?

- திருவாசகம்

96. சீவன் முத்தர்க்கு விருப்பு வெறுப்பு இல்லை

உள்ளும் புறம்பும் ஒருதன்மை காட்சியருக்கு
எள்ளும் திறம் ஏதும் இல்

புறம்பும் உள்ளும் ஒரு தன்மை காட்சியருக்கு - கடந்தும் உள்ளும் சிவமயம் என்ற ஞானம் பெற்ற சீவன் முத்தருக்கு

எள்ளும் திறம் ஏதும் இல் - எதையும் இகழும் தன்மை மற்றும் புகழும் தன்மை இல்லை.

ஆக சிவமாம் தன்மை பெற்ற நிலையில் உயிர், சடத்திடம் விருப்போ அல்லது வெறுப்போ இல்லை. எல்லாம் சிவமாய் தெரிகிறது.

புறப்பொருள்களால் வரும் குற்றமும் இவர்களுக்கு இல்லை

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி
சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல
- குறள் (4)

97. சீவன் முத்தர்களுக்கு தக்க வினைப்பயன் சிவானந்தமே

உறும் தொழிற்குத் தக்க பயன் உலகம் தத்தம் வறும் தொழிற்கு வாய்மை பயன்

உறும் தொழிற்கு தக்க பயன் உலகம் - உலகப் பற்றொடு செய்யும் தொழிலுக்கு தக்க பயன் துன்பம் நிறைந்த உலக வாழ்க்கை (யான், எனது என்ற செருக்கோடு)

தத்தம் வறும் தொழிற்கு வாய்மை பயன் - பற்றின்றி செய்யும் தொழிற்கு (யான், எனது என்ற செருக்கு நீங்கி) தக்க பயன் மெய்ப் பொருளாகிய சிவம்

சாதி, குலம், பிறப்பு, என்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலிநாயேனை, அல்லல்
அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம், பிறர் உருவம்,
யான், எனது, என் உரை, மாய்த்து
கோதுஇல் அமுத ஆனானை
குலாவு தில்லைக் கண்டேனே

- திருவாசகம்
(கண்டபத்து)

வறும் தொழில்

வறுமை - இல்லாமை
வறுத்தல் - விதையின் ஈரம் நீக்குதல்
வறும் தொழில் - யான் எனது நீங்கி பற்றின்றி நிற்றல்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே - திருவாசகம்

---

98. சீவன் முத்தருக்கு வினை நீங்கும் முறை:

ஏன்றவினை உடலோடு ஏகும் இடை ஏறும் வினை தோன்றில், அருளே சுடும்

ஏன்ற வினை உடலோடு ஏகும் - சீவன் முத்தருக்கு பிராரத்தம் (ஊழ்வினை) தேகம் நீங்கும் போது நீங்கிவிடும்.

இடை ஏறும் வினை - புதிய ஆகாமியம் தோன்றினால் அதனை திருவருளே சுட்டெரிக்கும்.

ஆக, சஞ்சிதம், ஏற்கனவே குருவின் தீட்சையால் நீக்கப்பட்டது என்பதாம்.

சீவன் முத்தர்கள் செயல் அருள் செயல். வினைகள் தாக்காது.

99. சீவன் முத்தர் நிலை பரமுத்தி நிலையே
மும்மை தரும் வினைகள் மூளாவாம்
மூதறிவார்க்கு அம்மையும் இம்மையே ஆம்

மும்மை தரும் வினைகள் மூளாவாம் - சீவன் முத்தருக்கு இம்மை மறுமை அம்மை தரும் பயன்களாகிய வினைகள் தாக்காது

மூதறிவார்க்கு அம்மையும் இம்மையே ஆம் - ஆணவம் நீங்கி பேரறிவைப் பெற்ற சீவன் முத்தர்க்கு சரீரம் இருக்கையிலேயே பரமுத்தி உண்டாகும்.

கண்டு இன்று வீடுற்றேன் - திருவாசகம்

100. சீவன் முத்தர் பெருங்கருணையாளர்

கள்ளத் தலைவர் துயர்கருதித் தம்கருணை
வெள்ளத்து அலைவர் மிக

கள்ளத் தலைவர் - ஆணவ மிகுதியால் தன்னையே தலைவராக கொள்பவரது

துயர் கருதி - அனுபவிக்கும் துன்பம் கருதி

தம் கருணை வெள்ளத்து - சீவன் முத்தர்கள் அவர்கள் மீது கருணை கொண்டு

அலைவர் மிக - நன்நெறி காட்ட அலைவர் (முற்படுவர்)

சீவன் முத்தர் நிலை	
மோன நிலை	பேசும் நிலை
பேரின்ப நிலை உடல், உலகை மறத்தல்	பேரின்பத்தில் இருந்து மீண்டு பேரின்ப அனுபவத்தை அவர்கள் துயர் தீரும் பொருட்டு உணர்த்தும் நிலை

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டார்   அருணந்தி சிவம்   மறைஞான சம்பந்தர்   உமாபதி சிவம்

CeeBeenson
Sivakasi © 9442172439